# பெயரியல்

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பெயரியல்

முனைவர் இரா.கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : கு. பகவதி)

வரிசை எண் : 2

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Peyariyal |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| General Editor | : | Dr. T. Janaki<br>Senior Research Fellow<br>Faculty of Overseas Tamils<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 724 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2011 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | 128 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 55/- (Rupees Fifty five Only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathiya Street<br>Vadapalani, Chennai - 600 026 |
| Subject | : | Tamil Grammar |


---

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

**முனைவர் கரு. அழ. குணசேகரன்**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 113

# அணிந்துரை

இந்நிறுவனத்தின் மேனாள் இயக்குநர், நூல் பல வல்லார், நுண்ணறிவாளர், ஒல்லும் வகையெல்லாம் தமிழுக்குத் தொண்டாற்றும் தகைமையர் முனைவர் சா. வே. சுப்பிரமணியன் அவர்களின் பெயரில் அமைந்த அறக்கட்டளைப் பொழிவு 11.08.2011 அன்று பிற்பகல் எம் நிறுவனத்தில் நிகழ்த்தப் பெற்றது. அப்பொழிவின் எழுத்து வடிவம் இந்நூல்.

தமிழ்மொழி கருத்தானும் கண்டுணர ஒண்ணாக் காலப் பழமையும் விண்டுரைக்க ஏலாத் தனிப்பெருஞ் சிறப்புகள் பலவும் பெற்றுத் திகழ்வது. இம்மொழியின் தனிப்பெருஞ் சிறப்புகளை அறிவதற்கு ஏற்ற கருவியாகத் திகழும் பெருமை தொல்காப்பியப் பனுவலுக்கு உண்டு. பிற்காலத்தே தமிழில் தோன்றிய இலக்கண நூல்களுக்கே யன்றி இலக்கியங்களுக்கும் தொல்காப்பியமே அடிப்படையாக அமைந்து சிறக்கிறது. தொல்காப்பியர், தமிழ்ச்சொற்களை இரண்டாகப் பகுத்துக் கொள்கிறார். பெயரும் வினையுமாகிய அவ்விரு சொற்களான் இயங்கும் மொழிக்கு துணைநிலைச் சொற்களாகவே இடைச் சொல்லும் உரிச்சொல்லும் அமைகின்றன. மொழியியல் அறிஞர்களுள் ஒருசாரார் மொழி தோன்றியபோது பெயர்ச்சொல்லே முதற்கண் தோன்றியது, அதன் பின்னரே வினைச்சொல் தோன்றியது எனக் கருதுவர். இதற்கு நேரெதிரான கருத்தினரும் உளர். எவ்வாறாயினும் மொழியில் பெயர்ச்சொல்லின் பயன்பாடு மிகவும் அதிகமாகவே உள்ளது. தமிழ்மொழியின் பெயர்ச்சொல் அமைப்புத் தனிச் சிறப்புடையது. இடுகுறி, காரணம், மரபு, ஆக்கம் ஆகிய தன்மை உடையனவாகத் தோற்றமளிக்கும் இப் பெயர்ச்சொற்கள் தமிழில் பல்வேறு வகைகளாக பகுக்கப்பெற்று இலக்கணம் கண்டுரைக்கப் பெற்றுள்ளன. இப் பெயர்ச்சொற் கோட்பாடுகளை விளக்கிப் பொழிவாற்ற **முனைவர் இரா. கண்ணன்** அவர்களை அணுகியபோது, உடனே இசைவளித்து நிறுவனத்திற்கு வந்து பெயரியல் குறித்த சிறந்ததொரு பொழிவினை ஆற்றினார். இவர் சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர். பல நூல்களை எழுதியும், அரியனவும் சிறந்தனவுமான பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பதிப்பித்தும் வருகிறார். இவர் உருவாக்கிய **நன்னூல் உரைவளம்** இந்நிறுவனத்தின்வழி வெளியிடப் பெற்றுள்ளமை ஈண்டு குறிப்பிட வேண்டியதாகும். பெயரியல் குறித்த இவர்தம் பொழிவு தமிழின் தனிச் சிறப்புகளை யாவரும் உணரத் தக்க வகையில் அமைந்தது. சீரிய பொழிவாற்றிய இந்நூலாசிரியரை உளம் களி கொள்ள உவப்புடன் வாழ்த்துகிறேன். வாழிய பல்லாண்டு.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் உலகத் தமிழராய்ச்சி நிறுவன இணைப்பேராசிரியர் பெ. செல்வக்குமார் அவர்களுக்கும், இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் நிறுவனக் கணிப்பொறியாளர் திருமதி எ.ம லட்சுமி அவர்களுக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அபி ஆப்செட் அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

இயக்குநர்

# முன்னுரை

மொழி சொற்களால் ஆவது. சொல் எழுத்துக்களால் ஆவது. தனியொரு எழுத்தே சொல்லாக அமைவது தமிழ் போன்ற தொன்மையான மொழிகளில் காணப்பெறும் தனிச் சிறப்பாகும். தொடக்கக் கால மனிதன் நீண்ட நெடிய தொடரமைப்போடு மொழியைப் பயன்படுத்தி இரான். அவ்வாறே அவன் மொழியில் ஓரிரு எழுத்துக்களால் ஆன சொற்களே மிகுந்து இருந்திருக்கும். தமிழ்ச்சொற்கள் எல்லாம் குறைந்த எண்ணிலான எழுத்துக்களால் ஆனவை. ஓரெழுத்து ஒருமொழியாகப் பல சொற்கள் தொடக்கக் காலம் முதல் இன்றுகாறும் தமிழில் வழங்கி வருகின்றன. மூன்றனுக்கு மேலான எழுத்துக்களை உடைய சொற்கள் தமிழில் மிகமிக அரிது. சரியாகச் சொல்வதென்றால் மூன்று எழுத்துக்களுக்கு மிகையான எழுத்தினை உடைய சொல் தமிழில் இல்லை எனலாம். தமிழ் மிகவும் தொன்மையான மொழி என நிறுவுவதற்கு இதுவே தக்க சான்று.

தமிழின் சொற் கட்டமைப்பும் செறிவுடையது. தமிழ்மொழியின் பெயர்ச்சொற்கள் இனிமையும் நீர்மையுமுடையன. தமிழிலக்கண ஆசிரியர்கள் காட்டியுள்ள பெயர்ச்சொல்லிற்கான இலக்கணத்தை இந்நூற்கண் விளக்க முயற்சித்துள்ளேன். மொழியின் தோற்றம், பெயர்ச்சொல்லின் பாகுபாடு, அது தொடரில் அமையும் பாங்கு, சொல் வகைகள் முதலானவை முறையே இந்நூற்கண் நிரல்படுத்தப் பெற்றுள்ளன. தமிழுலகம் ஏற்றுப் போற்றும் என்றே கருதுகிறேன்.

வாழும் தமிழறிஞர்களில் குறிப்பிடத் தகுந்தவர், இந்நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் சா.வே. சுப்பிரமணியன் அவர்கள். அவர்தம் பெயரில் அறக்கட்டளை நிறுவியோர்க்கு உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ்வறக்கட்டளைப் பொழிவினை யானாற்ற வாய்ப்பளித்த நிறுவனத்தின் இந்நாள் இயக்குநர் பேராசிரியர் **முனைவர் கரு. அழ. குணசேகரன்** அவர்களுக்கு நன்றி நவிலல் என்னருங் கடனாகும்.

இந் நூலாக்கத்தின்போது அளப்பரிய உதவிகள் புரிந்தவர் சென்னை இராணிமேரி கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை **முனைவர் ந. கலைவாணி** அவர்கள். அவர்தம் கைமாறு கருதா உதவியினை என்றென்றும் நன்றியுடன் போற்றும் கடப்பாடு உடையேன்.

இந் நூலாக்கத்திற்கு உற்றுழி உதவிய அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

**இரா.கண்ணன்**

# ஆசிரியரைப் பற்றி



## முனைவர் இரா.கண்ணன்

இவர் 23. 01. 1966 அன்று சென்னையில் பிறந்தவர். தமிழிலக்கியத்தில் எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி பட்டங்களைப் பெற்றவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்றவர். பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் பலவற்றிற்கு உரை விளக்கம் கண்டவர். மாறனகப்பொருள் என்னும் இலக்கண நூலிற்கு இவர் எழுதிய விருத்தியுரையே முதலுரையாகும்.

**எழுதியுள்ள நூல்கள்: 76**

**எழுதியுள்ள கட்டுரைகள்: 68**

பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஈடுபாடு உடைய இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். சங்க இலக்கியச் சொல்லடைவு தொடரடைவு அகராதி உருவாக்கப் பெருந் திட்டப் பணியைப் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதி உதவியுடன் நிகழ்த்தி வருகிறார்.

# உள்ளுறை


அணிந்துரை

முன்னுரை

| | |
|---|---|
| தமிழிலக்கண வளர்ச்சியும் வரலாறும் | 9 |
| ஒலி வடிவமும் வரிவடிவமும் | 36 |
| பெயர்ச்சொல் | 40 |
| சுட்டுப் பெயர்கள் | 49 |
| வினாப் பெயர் | 56 |
| யாகார வினா | 61 |
| உயர்திணைப் பெயர் | 64 |
| உயர்திணைப் பெயர் ஈறுகள் | 66 |
| அஃறிணைப் பெயர் ஈறுகள் | 71 |
| விரவுப் பெயர்கள் | 73 |
| வினையாலணையும் பெயர் | 76 |
| எண்ணுப் பெயர் | 78 |
| ஆகுபெயர் | 93 |
| மூவிடப் பெயர்கள் | 99 |
| பெயர்ச்சொல்லின் செறிவு | 111 |
| பெயர்ச்சொல் மாண்பு | 117 |

# தமிழிலக்கண வளர்ச்சியும் வரலாறும்

தமிழ் மொழி தனிப்பெரும் சிறப்புடையது. உலகில் வழங்கும் மொழிகள் பலவற்றுள் மிகப்பெரும் பழமையுடையன ஒரு சில மொழிகளே. அத்தகு சிறப்புடைய மொழிகளுள் வளமான இலக்கியங்களைக் காலந்தோறும் பெற்று வழங்கிவரும் அரிய மொழிகளுள் தமிழும் ஒன்று. காலப்பழமை உடைய கிரேக்கம், இலத்தீன் முதலான மொழிகள் பழங்காலத்தில் சிறந்த இலக்கியங்களைப் பெற்றிருந்தபோதும் தற்காலத்தில் அவை வழக்கு மொழியாக இல்லாது ஏட்டு மொழிகளாகவே உள்ளன. சீனம் முதலான மொழிகள் சில தற்காலத்தும் இலக்கிய ஆக்கம் உடையதாக இருப்பினும் அத்தகு மொழிகளும் வரலாற்றுக் காலத்தில் இருந்து தற்காலம் வரை கால இடையறவு இல்லாமல் இலக்கியங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் தமிழ் வரலாறு தெரிகின்ற காலத்தில் இருந்து தற்காலம் வரை கால இடையறவு இல்லா இலக்கிய வளத்தை உடையதாகத் திகழ்கிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்பெறும் தொல்காப்பியத்திற்கு முன்னரே பல்வேறு இலக்கண இலக்கியப் பனுவல்கள் வழங்கியிருந்தமையை என்ப, என்மனார், என்றிசினோர் முதலான தொல்காப்பியரின் சொல்லாட்சிகள் உணர்த்துகின்றன. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் எழுந்த இலக்கியங்களுள் அழிந்தனப் போக உள்ளனவற்றைப் பாட்டும் தொகையுமாகப் பகுத்துள்ளனர்.

சங்க காலத்திற்குப் பின் சிலம்பு, மேகலை உள்ளிட்ட காப்பியங்கள் எழுந்து இன்றுவரை வாழ்ந்து வருகின்றன. சிலப்பதிகாரக் காப்பியத்திற்குப் பின்னும் பக்தி இயக்கக் காலத்திற்கு முன்புமான இடைப்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பற்றி அறிதற்கில்லை. வழக்கில் உள்ள முத்தொள்ளாயிரப் பாடல்களும் கீழ்க்கணக்கு நூல்களில் ஆசாரக் கோவை முதலான சிலவும் அக்காலப் பகுதியில் இயற்றப் பெற்றவை என்பர். இந்நூல்கள் களப்பிரர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில் எழுந்தவை என அறிஞர் துணிவர். களப்பிரரின் ஆட்சிக் காலத்தில் பிற இலக்கியங்கள் எழாமையாலும், அக்காலத் தமிழக வரலாற்றை அறிதற்கு உரிய சான்றுகள் ஒன்றேனும் கிடைக்கப் பெறாமையாலும் அக்காலத்தை 'இருண்ட காலம்' எனவழைப்பது வழக்கு. இருண்ட காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள், மக்கள் வாழ்வியல் உள்ளிட்ட எவையும் இன்றுகாறும் அறியப்பெறவில்லை. சுமார் இரண்டு நூற்றாண்டுகள் தொடர்ந்து செல்லும் இவ்விருண்ட காலத்தில் தமிழ்மொழி எவ்வித வளர்ச்சியும் பெறவில்லை என்பது அறிஞர் பலரின் கருத்து.

இருண்ட காலத்திற்குப் பின் வடபுலத்தில் இருந்து வந்த பல்லவர்களின் ஆட்சி தொடங்கியது. முற்காலப் பல்லவர்கள் வடமொழி மற்றும் பாலி மொழியை ஊக்குவித்தனர். அக்காலத்தில் வடமொழியே ஆட்சிமொழியாகவும் இருந்தது. பல்லவ அரசர்கள் வடமொழிக் கடிகைகளைத் தமிழகத்தின் பல இடங்களில் நிறுவி அதன் வாயிலாக வடமொழியைத் தமிழகத்தில் பரப்ப முயன்றனர். பல்லவர்களின் ஆட்சியின் போது தமிழக அரசக் குடிகளான சேர, சோழ பாண்டியர் ஆட்சியை இழந்து குறுநில மன்னர்களாக வாழ்ந்து வந்தனர். தொண்டைமான்களும், முத்தரையர்களும் இன்னோரன்ன குறுநில மன்னர்களும் பல்லவ ஆட்சியை ஏற்று அவர்களின் படைத்தளபதி களாகவும், குறுநில மன்னர்களாகவும் வாழ்ந்திருந்த போதிலும் இவர்களாலும் தமிழ் வளர்க்கப்பட்டதாக அறியமுடியவில்லை. பிற்காலப் பல்லவர்களுள் சிலர், தமிழ் அறிந்தவர்களாகவும் தமிழ்மொழியின் சிறப்பினை உணர்ந்தவர்களாகவும் இருந்தனர். ஆயினும் தமிழ் மொழியின் வளர்ச்சி களப்பிரர் காலத்தில் ஏற்பட்ட தொய்விலிருந்து மறுமலர்ச்சி ஏதும் பெறவில்லை. இவ்வாறு அரசர்களின் அன்பும் அரவணைப்பும் இல்லாது இருந்த இக்காலத்தில் குடிமக்களின் தொண்டு தமிழுக்குக் கிடைத்தது. குடிமக்களுள் சிலர் இறைவன் மீது கொண்ட அளப்பரிய காதலால் அவ்விறைவனின் புகழினை விரித்துக் கூறும் பண்ணிறைந்த பாடல்கள் பலவற்றைப் பாடினர். அரன் உறையும் ஆலயங்கள்தோறும் சென்று அமுதத் தமிழால் அவ்விறைவனின் சிறப்பினை இன்னிசையோடு பாடியவர்கள் நாயன்மார்கள் எனப் படுகின்றனர். திருமால் புகழ்பாடிய அடியார்கள் ஆழ்வார்கள் எனப்படுகின்றனர். பல்லவரின் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் தோன்றிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் தொடங்கிய இலக்கிய இயக்கம் 'பக்தி இயக்கம்' எனப்படுகிறது.

சங்க காலத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்த அகம், புறம் ஆகிய பொருள் சார்ந்த இலக்கியங்களில் காதலும் வீரமும் பாடற்பொருள்களாக நின்றன. பின்னர் அறம் பாடற் பொருளாயிற்று. அதன் பின்னர் அஃதாவது, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இறைவனைப் பாடும் பாடல்கள் தோன்றத்னதொடங்கின. காரைக்கால் அம்மையார் கண்ணுதற் கடவுளைப் போற்றிப் பணிந்து பாடியருளிய திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள், அற்புதத் திருவந்தாதி ஆகியன பக்தி இயக்கக் கால முதல் இலக்கியங்களாகக் கொள்ளத் தக்கன. மூவர் முதலிகள் எனச் சைவ சமயத்தோரால் சிறப்புடன் குறிப்பிடப் பெறும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய பாடல்கள் பக்தி இயக்கக் காலத்தின் அருங் கொடையாகும். அவ்வாறே முதல் ஆழ்வார்கள் மூவரும் பாடிய தனியன்களும் பாடல்களும் பக்தி இயக்கக் கால இலக்கியங்களே. நாயன்மார்களுள் தேவார முதலிகள் தொடங்கிய பணி மென்மேலும் வளர்ந்ததன் பயனாகப் பன்னிரு திருமுறை என்னும் பெருந்திரட்டுத் தமிழுக்குக் கிடைத்தது. அவ்வாறே பிற்கால ஆழ்வார்கள் பாடிய பாடல்கள்

நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாகத் தொகுக்கப் பெற்று வழங்கி வருகின்றன. களப்பிரர் காலத்திற்குப் பின் பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தி இயக்க இலக்கியங்கள் பிற்காலத்தில் தமிழ் இலக்கிய வளம் உடையதாக வளர அடிப்படையாக அமைந்தன.

பக்தி இயக்கக் காலத்தைத் தொடர்ந்து புராண இலக்கியங்கள் எழுந்தன. வடமொழியில் வழங்கிவரும் பதினெண் புராணங்கள், அப் புராணங்களில் கூறப்பெற்றுள்ள கிளைக் கதைகள் ஆகியன தமிழின் புராண கால இலக்கிய ஆக்கத்திற்கு அடிப்படையாயின. அவ்வாறே வடமொழியில் பெரும் சிறப்புடன் விளங்கும் இதிகாசங்களான பாரதமும், இராமாயணமும் தமிழ்ப் புலவரால் தமிழ் மொழியில் பாடப்பெற்றன. அரிச்சந்திர புராணம், நைடதம், நளவெண்பா, குசேல பாக்கியானம் முதலான பற்பல இலக்கியங்கள் புராணக் காலப் பகுதியில் மிகுதியாக எழுந்தன. இத்தகு இலக்கியங்கள் பிற்காலத்தில் தலபுராணங்கள் எழுவதற்கு அடிக்கோலிற்று. புராணங்கள், தலபுராணங்கள் போன்றே சிற்றிலக்கியங்களும் மிகுதியாக எழுந்தன. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை படைக்கப்பெற்ற சிற்றிலக்கியங்கள் அளப்பரியன. பல்வேறு வகைகளாகக் கிளைத்தெழுந்த சிற்றிலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு எனக் கூறும் மரபு உண்டு. என்றாலும் தொண்ணூற்றாறினும் மிகுதியான இலக்கிய வகைகள் இக்காலப் பகுதியில் தோன்றின எனவும் ஆதலின் இக்காலப் பகுதியைச் சிற்றிலக்கியக் காலம் என வழங்கலாம் எனவும் கூறுவர்.

கலம்பகம், தூது, உலா, பிள்ளைத்தமிழ், பரணி, ஆற்றுப்படை, கோவை, சதகம் முதலான இலக்கிய வகைகளுள் ஒவ்வொன்றிலும் எழுந்த நூல்கள் எண்ணற்றன. இவையே யன்றிப் பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் புதியதாக உருவாக்கம் பெற்ற இலக்கிய வகைகளும் உண்டு. விலாசம், மஞ்சரி முதலான வடமொழி சார்ந்த இலக்கிய வகைகள் இக்காலத்தில் தமிழில் படைக்கப் பெற்றுள்ளன. அவ்வாறே அம்மானை, கீர்த்தனை, நொண்டி நாடகம், காதல் இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு இலக்கிய வகைகள் இக்காலத்திலேயே உருப்பெற்றுச் செழித்து வளர்ந்தன. பள்ளு, குறவஞ்சி, பன்மணிமாலை, பல்சந்தமாலை முதலான புத்திலக்கிய வடிவங்களும் மிகுதியாக எழுந்தன. இவ்வாறு எழுந்த இலக்கிய வகைகளும் ஒவ்வொரு வகைக்கு உரியனவாகப் படைக்கப்பெற்ற நூல்களும் எண்ணிறந்தன. இவ்வாறு மரபு சார்ந்த இலக்கிய வகைகளின் ஆக்கம் ஒரு புறம் நிகழ, மரபு சாராத புத்திலக்கிய வடிவங்கள் பலவும் புராண காலப் பகுதியில் இருந்து தமிழில் வழங்கி வருகின்றன. கி. பி. பதினேழாம் நூற்றாண்டளவில் இஸ்லாமிய இலக்கியங்கள் எழத் தொடங்கின. இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் அரபு மொழியில் பெருஞ் சிறப்புடன் விளங்கிய பல இலக்கிய வடிவங்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்தனர். படைப்போர், மஸ்அலா, முனாஜாத்து, கிஸ்ஸா முதலான புதிய இலக்கிய வகைகள் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் வழங்கிய அருங்கொடை

ஆகும். அவ்வாறே சீறாப்புராணம், சின்ன சீறா, இராஜநாயகம் உள்ளிட்ட பெருங்காப்பியங்கள் பலவும் இஸ்லாமியப் புலவர்களின் படைப்புகளுள் குறிப்பிடப் பெற வேண்டுவனவாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் இந்திய வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தகுந்த காலப் பகுதியாகும். இந்திய நாட்டில் வணிகத்தின் பொருட்டு வந்திறங்கிய ஆங்கிலேயர் இந்திய நாட்டின் பெரும் பகுதியை வளைத்துத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இந்திய நாடெங்கினும் பல்வேறு ஆக்கப் பணிகளும் நடந்தன. பிராந்திய மொழிகளுள் ஆங்கிலக் கல்வியின் விளைவாகப் பல்வேறு வளர்ச்சிகள் ஏற்பட்டன. அச்சு இயந்திரங்களின் வரவால் சுவடிகளில் முடங்கிக் கிடந்த பல்வேறு இலக்கியங்கள் அச்சேற்றப்பட்டுப் பரவலாக்கப் பெற்றன. அத்துடன் ஆங்கில மொழியில் சிறப்புடன் விளங்கிய இலக்கிய வடிவங்கள் இந்தியப் பிராந்திய மொழிகள் பலவற்றிலும் அறிமுகம் செய்யப் பெற்று வளர்ந்தன. சிறுகதை, புதினம், கட்டுரை ஆகிய ஆங்கில இலக்கிய வகைகள் தமிழிலும் படைக்கப்பெற்றன. அவ்வாறே இந்திய விடுதலைக்குப் பின் தொடர்ந்த ஆங்கிலக் கல்வியின் பயனாகவும் இந்திய மக்களின் வாழ்வில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியின் பயனாகவும் கல்வி சமுதாயத்தின் கடைக்கோடி மாந்தர்களுக்கும் கிடைத்தது. ஆங்கிலக் கல்வியறிவு வசனக் கவிதை அல்லது புதுக்கவிதை, ஹைக்கூ, சென்ட்ரியூ, கஸல் முதலான புதிய இலக்கிய வடிவங்கள் இருபதாம் நூற்றாண்டில் தோன்றுவதற்கு அடிப்படையாயிற்று. இவ்வாறு சுமார் மூவாயிரம் ஆண்டு கால நெடும் பரப்பில் தமிழில் இடையறாத இலக்கிய வளம் செழித்து வளர்ந்து வருகிறது.

## இலக்கண வளர்ச்சி

பலவாகப் பல்கிப் பெருகியுள்ள தமிழ் இலக்கியப் பரப்பு எண்ணி இன்புறத்தக்கதாகும்.

**இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே**
**எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே**
**எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல**
**இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்**

என்னும் பேரகத்தியச் சூத்திரத்திற்கு ஏதுவாக இலக்கியங்களில் இருந்து இலக்கணம் ஆக்க முயற்சியும் மிகப் பழங்காலத்திலேயே துவங்கி விட்டது. நமக்கு இன்று கிடைக்கப்பெற்றுள்ள இலக்கண நூல்களுள் காலப் பழமையுடைய தொல்காப்பியத்திற்குப் பாயிரம் வரைந்த பனம்பாரனார்,

**வடவேங்கடந் தென்குமரி**
**ஆயிடைத்**

**தமிழ்கூறு நல்லுலகத்து**
**வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்**
**எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்**
**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்**
**நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து**
**அறங்கரை நாவின் நான்மறை முற்றிய**
**அதங்கோட் டாசாற் கரில் தபத் தெரிந்து**
**மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி**
**மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த**
**தொல்காப் பியன் எனத் தன்பெயர் தோற்றிப்**
**பல்புகழ் நிறுத்த பழமை யோனே**

எனக் கூறுகிறார். இப்பாயிரச் செய்யுள் தொல்காப்பியர் தனக்கு முன்பிருந்த இலக்கண நூல்களை எல்லாம் ஆய்ந்த பின்பே தன்னுடைய நூலினைச் செய்தார் என விளக்குகிறது. பனம்பாரனார், முந்து நூல் எனக் கூறினாரே அன்றி அவை எந்தெந்த நூல் என விளக்கவில்லை. தொல்காப்பியரும் தம் நூலகத்தே என்ப, என்மனார் முதலான சொற்களைக் கையாண்டுள்ளமையால் தொல்காப்பியத்திற்கு முன்பே பல இலக்கண நூல்கள் வழங்கின என்பதும் அவற்றை எல்லாம் கற்றுணர்ந்த பின்னரே தொல்காப்பியர் தம் நூலைப் படைத்தார் என்பதும் தெள்ளத் தெளிவாகப் புலனாகும் உண்மையாம்.

தொல்காப்பியத்திற்கு முந்திய நூல்களுள் ஒன்றேனும் முழுமையாக இன்று கிடைக்கவில்லை. நூல்கள் இன்று வழங்கப் பெறாமையாலேயே அவை இயற்றப் பெறவில்லை எனவும் கூற இயலாது. சிலப்பதிகாரத்திற்கு உரை வரைந்த அடியார்க்குநல்லார் தம் உரையகத்தே குறிப்பிட்டுள்ள நூல்கள் பற்பல. அவ்வாறே யாப்பருங்கலத்திற்கு உரை வரைந்த விருத்தியுரையாசிரியர் எடுத்துக்காட்டும் பழந்தமிழ் இலக்கணப் பனுவல்களும் இலக்கிய நூல்களும் பற்பல. பழைய உரையாசிரியர்களும் இடைக்கால மற்றும் பிற்கால இலக்கண இலக்கியப் புலவர்கள் பலரும் பாண்டிய மன்னர்கள் தமிழாய சங்கங்களை உருவாக்கித் தமிழ் வளர்த்தனர் என்றும் அச்சங்கங்கள் நெடுங்கால வரலாற்றினை உடையன என்றும் அச்சங்கங்களில் மூன்றாம் சங்கத்தின் இலக்கியங்களே எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் என்றும் முதல் இரு சங்கங்கள் கடல்கோள்களினால் அழிந்தன என்றும் கூறிச் செல்கின்றனர். ஆனால் சங்க இலக்கியத்தில் முச்சங்கம் பற்றிய குறிப்பேதும் இல்லை. எனினும் புலவர்கள் ஒன்று கூடி தமிழாய்ந்த செய்தியைப் புறநானூற்றுப் பாடல்கள் சில எடுத்துரைக்கின்றன. எனவே மிகப்பழங் காலத்தில் தமிழகத்தில் தமிழை வளர்க்க பொது அமைப்பு ஒன்று தொடர்ந்து இயங்கி

வந்ததென்பது புலனாகிறது. இவ்வாறு தொடர்ந்து இயங்கி வந்த சங்கம் அல்லது அவை அல்லது அமைப்புப் பல நூல்களைப் படைத்திருக்கும் என்பது உய்த்துணர முடிகிறது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு மிகாத காலப் பகுதியில் தோன்றியதாகக் கருதப் பெறுவது இறையனார் இயற்றிய களவியல் என்னும் அக நூலாகும். இந் நூலினை இயற்றிய இறையனாரும், குறுந்தொகையில் காணப்பெறும் 'கொங்குதேர் வாழ்க்கை' என வரும் பாடலின் ஆசிரியரான இறையனாரும் ஒருவரே எனவும் துணிவர். இத்துணிபினை ஏற்பதாயின் களவியலின் காலம் சங்ககாலமாகும். இந்நூலுக்கு வழங்கப்பெறும் பழைய உரை ஒன்று நக்கீரர் இயற்றியதாக அறியப் பெறுகிறது. அவ்வுரை நக்கீரரால் இயற்றப் பெற்று உருத்திர சன்மர் காலம் வரையில் வாய்மொழியாக வழங்கப் பெற்று உருத்திரசன்மர் காலத்திற்குப் பின் ஏட்டினில் ஏறியதாக அறிய முடிகிறது. இவ்வுரையில் கபாடபுரம், தென்மதுரை, மதுரை ஆகிய மூன்று இடங்களில் முறையே முதல், இடை, கடைச் சங்கங்கள் இருந்த செய்தி விளக்கப் பெற்றுள்ளது. மேலும் அச்சங்கங்களின் காலம், பங்கேற்றிருந்த புலவர்களின் தொகை இயற்றப் பெற்ற நூல்கள் ஆகிய செய்திகளும் விளக்கப் பெற்றுள்ளன.

இறையனார், களவியல் உரை குறிப்பிடும் நூல்களைப் போன்று சிலப்பதிகாரத்திற்கு உரை வரைந்த அடியார்க்கு நல்லாரின் உரைப்பகுதியால் அறியலாகும் நூல்களும் பழங்காலத்தில் எண்ணிறந்த நூல்கள் வழங்கி வந்தமையை எடுத்துக் காட்டுகின்றன. பிற்காலத்தில் யாப்பருங்கலத்திற்கு வரையப்பெற்ற விருத்தியுரையில் காணப்பெறும்.

**தொல்காப்பியப் புலவோர் தோன்ற விரித்துரைத்தார்**
**பல்கா யனார்பகுத்துப் பன்னினார் – நல்யாப்புக்**
**கற்றார் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்**
**சொற்றார்தம் நூலுள் தொகுத்து**

என வரும் மேற்கொள் செய்யுள் விளக்கத் தொடர்களும் அவ்வாறே விருத்தியுரையாசிரியர் ஆங்காங்கே எடுத்துக் காட்டும் மேற்கோள் நூற்பாக்களும் பழங்காலத்தில் வழங்கித் தற்காலத்தில் வழக்கற்றுப் போன இலக்கண இலக்கியங்களைக் குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியர் காலந் தொடங்கி விருத்தியுரைகாரர் காலம் வரை வழங்கிருந்து பின்பு வழக்கற்றுப் போன இலக்கண இலக்கியங்களைப் பற்றி ஒருவாறு நோக்குவாம்.

## இலக்கணப் பிரிவுகள்

தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐம்பெருங் கூறுகளை உடையது எனக் கருதுவது பொது வழக்கு. ஆயினும்

தமிழ் இலக்கணம் ஐந்திலக்கண மரபினை உடையது என்னும் கருத்துக் குமரகுருபரர் காலம் வரை இலக்கண இலக்கிய நூல்களில் குறிப்பிடப் பெறவில்லை. தொல்காப்பியப் பாயிரம் இலக்கணப் பிரிவுகளை உணர்த்தவில்லை. நன்னூலின் தற்சிறப்புப் பாயிரம்,

குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதுந்
தனக்தெனக் கோலித் தன்மத வாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை வினோத னமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே

என அமைந்து தமிழ் ஐந்திலக்கணப் பிரிவுகளை உடையது என உணர்த்துகிறது. ஆயினும் குமரகுருபரரே,

எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து – ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்து – தம்மை விடுத்து
ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி – ஆட்கொண்டு
அடியேற்கும் முன்நின்று அருள்.

என்னும் தொடரில் தமிழ் ஐந்திலக்கணங்களை உடையது என்பதைத் தெளிவுப்படுத்துகிறார். ஆனாலும் தமிழில் ஐந்திற்கும் மேற்பட்ட இலக்கணப் பிரிவுகள் உண்டு என்பதனைத் தற்கால ஆய்வு அறிஞர்கள் எடுத்துக்காட்டி நிறுவி உள்ளனர்.

## இலக்கண வகைகளும் வகைமைகளும்

இலக்கியம் இலக்கணம் ஆகிய எவ்வகைத்தாயினும் ஒன்றிற்கு மேற்பட்ட நூல்கள் எழும்போது வகைப்படுத்த வேண்டுவது அவசியமாகிறது. தொல்காப்பியர் பொருளடிப்படையில் அகம், புறம் என இரு வகைகளாக

வகுத்துக் கொண்டபோதிலும் நூலின் கருது பொருளுக்கு ஏற்ப முதல் நூல் வழி நூல் எனவும் வகைப்படுத்தியுள்ளார். அவ்வாறே நூலின் அமைப்பொழுங்கிற்கு ஏற்ப முதுமொழி, பிசி உள்ளிட்ட நாற்பத்திரண்டு இலக்கிய வகைகளைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளதாக அறிஞர்கள் எடுத்துக்காட்டுவர்.

தொல்காப்பியத்தில் இலக்கிய வகைகள் ஒருவாறு நிரல்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இலக்கண நூல்களை வகைப்படுத்துதல் தற்காலம் வரை வழக்கில் இல்லை. ஆயினும் இன்று வழக்கில் உள்ள இலக்கண நூல்களில் விளக்கப்பட்டுள்ள தமிழ் இலக்கணக் கூறுகளை மனங்கொண்டு அந்நூல்களைக் கீழ்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. எழுத்து இலக்கணம்
2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம்
4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம்
6. பாட்டியல் இலக்கணம்
7. அகப் பொருள் இலக்கணம்
8. புறப் பொருள் இலக்கணம்
9. புலமை இலக்கணம்
10. சொற்பொருள் விளக்க இலக்கணம்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இவ்வைந்து இலக்கணங்களும் தொன்று தொட்டு வழங்கி வருவன. பொருள் இலக்கணம் இருபெரும் கூறுகளாக அக இலக்கணம், புற இலக்கணம் என்னும் பெயர்களோடு தனித்தனி துறைகளாகப் பிற்காலத்தில் செழித்து வளர்ந்தன. இலக்கிய வகைகளின் இலக்கணம் கூறும் நூல்கள் பாட்டியல் எனப் பெற்றன. நூல் யாக்கும் முறையும் நூலாசிரியன் பண்பும் அரங்கேற்றவையும் இன்னோரன்ன கூறுகள் எல்லாம் புலமை இலக்கணத்தில் அடக்கலாம். தொல்காப்பியர் இடை, உரிச் சொற்களுக்குக் கூறியுள்ள விளக்கம் பிற்காலத்தில் நிகண்டு நூல் ஆக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தது. பல்வேறு நிகண்டுகள் எழுந்தன. அவையெல்லாம் சொற் பொருள் விளக்க இலக்கணம் என்னும் வகையில் அடங்கும்.

தமிழிலக்கணம் மேற்கூறியவாறு பல வகைத்தான கூறுகளை உடையதாக இருப்பினும் எல்லா இலக்கண நூல்களும் எல்லா கூறுகளையும் முழுமையாக விளக்கவும் இல்லை. கிடைக்கப்பெற்றுள்ள இலக்கண நூல்களில் காலத்தால் மூத்ததும், சிறப்பால் முதன்மை யுடையதுமான, ஒல்காப் பெரும்

புகழ்த் தொல்காப்பியம் போல வேறு எந்த இலக்கண நூலும் அனைத்து இலக்கணக் கூறுகளையும் நிரல்படக் கூறவில்லை என்றே துணியலாம்.

பிற்கால ஆய்வாளர்கள் தெரிந்து கூறிய மேற்காட்டிய இலக்கணக் கூறுகள் அனைத்தும் தொல்காப்பியரால் சுட்டப் பெற்றுள்ளன. ஆயினும் அக்கூறுகள் அனைத்தும் தொல்காப்பியத்தில் முழுமையாக விளக்கம் பெறவில்லை. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இவ்வைந்து கூறுகளை முழுமையாக விளக்கும் தொல்காப்பியர், இலக்கிய வகைகளின் இலக்கணம் கூறுவதும் பிற்காலத்தில் பாட்டியல் என்னும் பெயரால் சுட்டப்பெறுவதுமான இலக்கணக் கூறினையும் விளக்கவே செய்துள்ளார். பிற்காலத்தில் பாட்டியல் தனித்துறையாக வளர்ந்தபோது அத்துறைப் புலவோர் விளக்கிக் காட்டும் பொருத்த இலக்கணம், அவை இலக்கணம், புலவர் இலக்கணம் முதலான கூறுகள் தொல்காப்பியத்தில் குறிப்பிடப் பெறவில்லை. அவ்வாறே உவமம், உருவகம் ஆகிய இரு அணிகளை மட்டுமே தொல்காப்பியர் விளக்கிச் செல்கிறார். எனவே பிற்கால அணியிலக்கண நூல்களைப் போன்று எல்லா அணிகளும் தொல்காப்பியத்தில் விளக்கம் பெறவில்லை. ஆதலின் தொல்காப்பியர் எழுத்தும், சொல்லும் பொருளும் விளக்க எண்ணி, பொருள் இலக்கணத்திற்கு வேண்டிய அணிகளை உவமயியலிலும் பொருளிலக்கணம் யாக்கப் பெறவேண்டிய யாப்பு நிலையைச் செய்யுளியலிலும் விளக்குகிறார். தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த இலக்கண நூல்களும் எழுத்து, சொல் என்னும் இரண்டு கூறுகளை விளக்குவதாகவோ, பொருளில் அகப்பொருள் மட்டும் விளக்குவதாகவோ, புறப்பொருள் மட்டும் விளக்குவதாகவோ, அணியினை மட்டும் விளக்குவதாகவோ,யாப்பினை மட்டும் விளக்கு வதாகவோ, பாட்டியலை மட்டும் விளக்குவதாகவோ எனத் தனித் தனி நூல்களாகவே எழுந்துள்ளன. இவ்வாறே தொல்காப்பியப் பொருளதிகாரம் பிற்காலத்தில் தமிழ் இலக்கணத்தில் பற்பல புதிய துறைகள் செழித்து வளர அடித்தளமாக விளங்கிற்று. தொல்காப்பி யத்திற்கு முற்பட்ட காலத்திலும் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்திருந்து அவை பெருவழக்காய் விளங்கிப் பின்னர் இறந்துபட்டமையும் அறிய முடிகிறது. அவ்வாறு தொல்காப்பியத்திற்கு முன்னும் பின்னும் எழுந்துள்ள நூல்களின் வகைகளையும் வகைமைகளையும் சுருக்கமாகவேனும் அறிந்து கொள்ள வேண்டுவது தேவையாகும்.

## அகத்தியம்

'தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் அகத்தியம் ஆகும். அகத்தியத்தைச் செய்தவர் அகத்திய மாமுனிவர் ஆவார். தென் மொழியை சிவபெருமானிடம் இருந்து கற்றுணர்ந்த அகத்தியர் பொதிகை மலைச்சாரலில் தங்கியிருந்து தமிழ் வளர்த்தார். இவர் பேரகத்தியம், சிற்றகத்தியம், ஆனந்தக் கூத்து ஆகிய இலக்கண நூல்களைச் செய்தார்.

தொல்காப்பியர் உள்ளிட்ட பன்னிருவர் அகத்தி யரிடம் தமிழ் கற்றனர். தொல்காப்பியம் எழுந்ததன் பின் அகத்தியம் வழக்கற்றுப் போயிற்று.' அகத்தியர் குறித்த மேற்காட்டிய கருத்துத் தமிழ் இலக்கிய உலகில் நெடுங்காலமாகவே வழங்கி வருகிறது. என்ப, என்மனார், என்றிசினோர் முதலான சொல்லாட்சி களால் தமக்கு முன் பல்வேறு புலவர் தமிழ் இலக்கணம் செய்தனர் என்பதனைக் குறிப்பால் உணர்த்திச் சொல்லும் தொல்காப்பியர், தம் நூலகத்து அகத்தியர் குறித்தோ, அகத்தியம் குறித்தோ யாண்டும் கூறினார் இலர். அவ்வாறே தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த சங்க இலக்கியங் களிலும் அகத்தியர் பற்றிய குறிப்பேது மில்லை. ஆனால் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு அளவில் எழுந்த புறப்பொருள் வெண்பாமாலை அகத்தியரைக் குறித்தும், அகத்தியத்தைக் குறித்தும் முதன் முதலாக மொழிகிறது.

**மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்**
**தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்**
**தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த**
**துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன் முதற்**
**பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த**
**பன்னிரு படலமும்.......................**

என்னும் புறப்பொருள் வெண்பாமாலையின் பாயிரப் பகுதி அகத்தியர் வரலாற்றைக் கூறியுள்ளது. தேவர்கள் வேண்ட பொதிகையாகிய தென்மலைக்கு வந்த,தவமுனிவனாகிய அகத்தியன், தொல்காப்பியன் உள்ளிட்ட பன்னிருவருக்குத் தமிழைப் பயிற்றுவிக்க அப்பன்னிரு மாணவர்களும் இணைந்து பன்னிரு படலம் என்னும் இலக்கண நூலைச் செய்தனர். அப்பன்னிரு மாணாக்கருள் ஒருவரான தொல்காப்பியர் தொல்காப்பியத்தையும், பனம்பாரனார் பனம்பாரனம் என்னும் நூலினையும், அவிநயனார் அவிநயத்தையும், காக்கை பாடினியார் காக்கை பாடினியத்தையும், நற்றத்தனார் நற்றத்தத்தையும் இயற்றினார் என்னும் கருத்து மேற்காட்டிய புறப்பொருள் வெண்பாமாலை பாயிரத்தால் அறிய முடிகிறது.

நம்பியாண்டார் நம்பி என்பார் இயற்றிய அகப்பொருள் விளக்கம் என்னும் நூலின்,

**பூமலி நாவன் மாமலைச் சென்னி**
**ஈண்டிய இமையோர் வேண்டலிற் போந்து**
**குடங்கையின் விந்த நெடுங்கிரி மிகை தீர்த்**
**இருந்தவன் தன்பால் இயற்றமிழ் உணர்ந்த**
**புலவர்பன் னிருவருள் தலைவன் ஆகிய**
**தொல்காப்பியன்**

என வரும் பாயிரப் பகுதி மேற்சுட்டிய அகத்திய வரலாற்றைக் குறிப்பிடுவது உணரத் தக்கது. தண்டியலங்காரச் செய்யுளாகப் பெருந்தொகை என்னும் நூல் காட்டும்,

**வடதிசை யிருந்து தென்மலைக் கேகி**
**மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை**
**இருந்தவன் தன்பால் அருந்தமிழ் உணர்ந்த**
**பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த**
**தொல்காப் பியநெறி**

என்னும் பாடலும்,

**"கானார் மலயத் தகுந்தவன் சொன்ன கன்னித் தமிழ் நூல்"**
என்னும் யாப்பருங்கலக் காரிகையின் அவையடக்கப் பாடல் தொடரும், அகத்தியர் பற்றிய செய்திகளை விளக்குகின்றன. தொல்காப்பியத்திற்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிரச் செய்யுளுக்குப் பொருள் கூறுங்கால், "அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி, 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க' என்று கூறுதலானும், தொல்காப்பியனாரும் பல்காலஞ் சென்று, 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்' என்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங் கூறிவிடுவல் எனக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடை கூறுதலின், 'அரில்தபத் தெரிந்து' என்றார்" என விளக்கும் பகுதியிலும் அகத்தியர் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

இவ்வாறு அகத்தியம் குறித்தும், பேரகத்தியம் என்னும் இலக்கண நூல் குறித்தும், பேரகத்தியம் என்னும் நூல் தொல்காப்பியத்திற்கு முதல் நூல் என்பது குறித்தும் வழங்கும் கருத்துகள் யாவும் பிற்கால நூல்களிலேயே காணப்படுகின்றன. ஆதலால் பேரகத்தியம் குறித்துத் தமிழ் உலகில் வழங்கி வரும் கருத்து ஆய்விற்கு உரிய ஒன்று என்பதில் ஐயம் ஏதுமில்லை.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்திருபதுகளில் இராவ் பகதூர் பவானந்தம் பிள்ளையவர்கள் உரையெழுதிப் பதிப்பித்த பேரகத்தியத் திரட்டு என்னும் நூலின் நூற்பாக்கள் தொல்காப்பியத்திற்குப் பின் தமிழ்மொழி அடைந்த மாற்றங்களை விளக்குவதாக உள்ளது என்றும், ஆதலின் இந்நூற்பாக்கள் தொல்காப்பிய முந்து நூல் கோட்பாடுகள் அல்ல என்றும் இக்கால ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.

இக்கருத்து ஆழ்ந்து நோக்க வேண்டியதாகவும், ஏற்க வேண்டியதாகவும் உள்ளது. எனவே தொல்காப்பியத்திற்கு முன் பல நூல்கள் இருந்தன என்றும், அந்நூல்களை ஆழ்ந்து நோக்கிய பின்பே தொல்காப்பியர் தொல்காப்பியத்தை யாத்தார் என்றும் கொள்வதே

தொன்மையான பேரகத்திய நூல் கிட்டும் வரை கொள்ளத் தக்க நேரிய கருத்தாகும்.

## அவிநயம்

அவிநயம் என்னும் நூல் ஐந்திலக்கணம் விளக்கும் நூலாக யாக்கப் பெற்றது. இந்நூல் கி.பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண் டளவில் தோன்றியிருக்கக் கூடும் என்றும் இந்நூலாசிரியரான அவிநயனார் சமணசமயத்தைச் சார்ந்தவரென்றும் மயிலை சீனி. வேங்கடசாமி கருதுகிறார். அவிநயத்தின் நூற்பாக்கள் பல யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, வீரசோழிய வுரை, பன்னிரு பாட்டியலுரை நன்னூல் மயிலைநாதருரை, தக்கயாகப் பரணிக்கு எழுந்த பழைய உரை ஆகிய உரைகளில் மேற்கோள்களாக ஆளப்பெற்றுள்ளன. இந்நூல் எழுத்து, சொல் முதலான ஐந்திலக்கணத்தோடு, பாட்டியல் என்னும் ஆறா மிலக்கணத்தையும் கூறும் நூல் என்பது பன்னிரு பாட்டியல் காட்டும் அவிநய மேற்கோள் நூற்பாக்களால் அறிய முடிகிறது.

## காக்கை பாடினியம்

காக்கை பாடினியார் பாடிய இலக்கண நூல் காக்கைப்பாடினியம். இந்நூலின் நூற்பாக்கள் தொல்காப்பிய உரைகளிலும், நன்னூல் மயிலைநாதர் உரை, களவியல் உரை, வீரசோழிய உரை, யாப்பருங்கலக் காரிகை உரை, யாப்பருங்கால விருத்தியுரை ஆகிய உரைகளில் மேற்கோள் நூற்பாக்களாக ஆளப்பெற்றுள்ளன. அந்நூற்பாக்களில் சுட்டப் பெறும் கருத்துகள் தொல்காப்பியக் கோட்பாட்டிற்குச் சற்றே முரண் பட்டனவாகும்.

> தொல்காப்பியர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என அசைகளை நான்காகக் கொண்டனர். காக்கை பாடினியார் நேர்பு, நிரைபுகளை ஏற்கவில்லை. ஈரசையாகவே கருதினர். இவர்தம் கருத்தே தற்காலம் வரை பின்பற்றப்படுகிறது.
>
> நேர், நிரை என்னும் வாய்பாடுகள் யாப்பிலக் கணத்தின் பெரும் வழக்காக இன்று வரை விளங்குகின்றன. ஆனால் நேர், நிரை என்னும் வாய்பாடுகளை காக்கை பாடினியார் தனி, இணை என்னும் புதிய வாய்பாடுகளால் குறித்தார். இது ஏற்கப்பட வில்லை.
>
> எழுத்தளவால் சீர் பகுப்பது தொல்காப்பிய மரபு. காக்கை பாடினியம் சீர் வகை அடிகளை மொழிகிறது.
>
> தொல்காப்பியனார்நாலசைச்சீரைக் குறிப்பிட வில்லை. இவர் நாலசைச்சீர்களைக் குறிப்பிட் டுள்ளார்.

இந்நூல் தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டது என்பதும், யாப்பிலக்கண நூல் என்பதும் இந்நூலுக்கு நெடுங்காலத்திற்கு முன்பே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதும், மேற்காட்டிய கருத்துக்களால் புலனாகும். இந்நூலின் கோட்பாடு இன்றளவும் யாப்பிலக்கணப் புலவோரால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பது இங்குக் குறிப்பிடப்பட வேண்டுவதாகும்.

## சங்க யாப்பு

சங்க யாப்பு என்னும் பெயரிய இந்நூல் யாப்பிலக்கணம் கூறுவதென்பது அதன் பெயராலேயே விளங்குகிறது. சங்க யாப்பு என்னும் பெயருடையதே ஆயினும் சங்க கால யாப்பு மரபினையோ, அதற்கு முந்தைய தொல்காப்பிய மரபினையோ, இந்நூல் கூறுவதாகத் தெரியவில்லை. தொல்காப்பியர் பாவினங்களைக் குறித்தாரிலர். சங்க இலக்கியத் திரட்டிலும் பாவினங்கள் இல்லை. பதினெண் கீழ்க்கணக்குத் திரட்டிலும் இல்லை. யாப்பருங்கலம் பாவினங்களைக் குறிப்பிடுகிறது. பாவினங்களைச் சுட்டும் சங்க யாப்பு என்னும் இந்நூலும் யாப்பருங்கலக் காலத்தது என்றோ சிறிது முற்பட்டது என்றோ கொள்ளலாம். இந்நூல் *ஐந்தாம் நூற்றாண்டு அல்லது ஆறாம் நூற்றாண்டில் எழுந்திருக்கக் கூடும்* எனக் கருதுவாரும் உளர்.

## சிறுகாக்கை பாடினியம்

**வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்**
**தென்திசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்**
**வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த**
**நாட்டியல் வழக்கம் நான்மையிற் கடைக்கண்**
**யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே**

என்பது சிறுகாக்கை பாடினியத்தின் பாயிரம் எனக் கூறி மேற்கோளாக உரையாசிரியர் பேராசிரியர் ஆண்டுள்ளார். இந்நூலின் முப்பத்தொரு நூற்பாக்கள் இன்று வரை கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் யாப்பிலக்கணம் விளக்க எழுந்த நூல் என்பது கிடைக்கப்பெற்றுள்ள நூற்பாக்களின்வழி அறிய முடிகிறது. மேலும், 'நாட்டியல் வழக்கம் நான்மையிற் கடைக்கண் யாப்பினதிலக்கணம்' என்னும் இந்நூலின் பாயிரத் தொடர் யாப்பிலக்கண நூல் இது என்பதனை அங்கை நெல்லியாக விளங்குகிறது. இந்நூலும் பா வகைகளை மட்டுமே யன்றிப், பாவினங்களையும் சுட்டி இலக்கணம் கூறியுள்ளமையைக் கிடைத் திருக்கும் நூற்பாக்கள் தெளிவுறுத்துகின்றன. ஆதலால், இந்நூலும் தொல்காப்பியத்திற்குப் பிந்தியது என்பது புலனாகும்.

## நற்றத்தம்

நற்றத்தனார் என்பார் இயற்றிய இலக்கண நூல் நற்றத்தம் ஆகும். பத்துப்பாட்டினுள் ஒன்றாகத் திகழும் சிறுபாணாற்றுப்படை என்னும் நூலினை இயற்றியவர் நல்லூர் நற்றத்தனார் ஆவார். இப்புலவர் பாடியது நற்றத்தம் என்னும் கருத்தும் உண்டு. நற்றத்தத்தின் நூற்பாக்கள் யாப்பருங்கலக் காரிகை உரையிலும், யாப்பருங்கல விருத்தியுரையிலும் இடம் பெற்றுள்ளன.

## பல்காயம்

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் எடுத்துக்காட்டும் மற்றொரு பழைய இலக்கண நூல் பல்காயம் ஆகும். பல்காயத்தின் ஆசிரியர் பல்காயனார் ஆவார். இவர் ஐந்திலக்கணம் செய்தனர் போலும். யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோளாக ஆளப்பெற்றுள்ள நூற்பாக்களை நோக்கும்போது இக்கருத்து மிகுதிப்படுகிறது. ஆனால் பன்னிருபாட்டியல் எடுத்துக்காட்டும் மேற்கோள் நூற்பாக்கள் தாரகைமாலை, செந்தமிழ்மாலை, தாண்டகம் ஆகிய இலக்கிய வகைகளின் இலக்கணம் கூறுவனவாக உள்ளன. எனவே பல்காயம் பாட்டியல் இலக்கணமும் கூறும் நூல் என்பது புலனாகிறது. தொல்காப்பியரின் கோட்பாடுகளை ஏற்று நேர், நிரை, நேர்பு, நிரைபு என அசைகளைப் பகுத்து உரைப்பதாலும், அடிவரையறை யின்றி நடப்பனவாகிய இலக்கண வகைகளைப் பகுத்துக் காட்டுவதாலும் இவர் தொல்காப்பியரின் காலத்திற்குச் சற்றுப் பிற்பட்ட காலத்தவர் என அறிஞர் துணிவர்.

மேற்காட்டிய இலக்கண நூல்களைப் போன்றே பன்னிருபடலம், மயேச்சுரர் யாப்பு ஆகிய இலக்கண நூல்களும் பழங்காலத்தில் வழங்கி தற்காலத்தில் இறந்துபட்டன.

## அகவிலக்கண நூல்கள்

தொல்காப்பியர் பொருளை அகம், புறம் என இரண்டாகப் பகுத்துரைப்பர். தொல்காப்பியத்திற்குப் பின் இவ்விரு துறைகளும் தனித்தனி இலக்கண நூல்களைப் பெற்றுச் செழித்து வளர்ந்தன. தொல்காப்பியர் கூறிய கருத்துக்கள் பிற்கால இலக்கண நூல்களில் வகுத்தும் தொகுத்தும் விளக்கப்பட்டுள்ளன. காலந்தோறும் வளர்ந்து வரும் இலக்கியங்களுக்கு ஏற்ப புதிய மரபுகளை எடுத்துரைக்கும் போக்கும் இவ்விலக்கண நூல்களில் காணப்படுகிறது. புற இலக்கண நூல்களைக் காட்டிலும் அக இலக்கண நூல்கள் மிகுதியாக எழுந்துள்ளன. அவ்வக இலக்கண நூல்கள் பெரும்பான்மை தொல்காப் பியத்தைத் தழுவியும் ஆங்காங்கே புதிய மரபுகளைச் சுட்டியும் செல்கின்றன.

## இறையனார் களவியல்

தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்து இன்றளவும் வழங்கி வரும் அக இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியதும், பொருள் விளக்கத்தால் தனிச்சிறப்புடையதும் இறையனார் களவியலாகும். இந்நூலினைச் செய்தவர் இறைவனென்றும், அதனால் இது வழிநூல் அன்று, முதல் நூல் என்றும் இந்நூலுக்கு உரை வரைந்த நக்கீரர் கூறுவர். இந்நூல் 60 நூற்பாக்களை உடையது. களவு, கற்பு எனும் இரு பிரிவுகளும், களவிற்கு 33 நூற்பாக்களும், கற்பிற்கு 27 நூற்பாக்களும் என்னும் அமைப்பில் யாக்கப் பெற்றுள்ளது. இந்நூல் செம்மாந்த உரை ஒன்றைக் கொண்டிலங்குகிறது. அவ்வுரை சங்கப் புலவரான நக்கீரர் இயற்றியது என்றும், நக்கீரர் தம் மாணாக்கரான கீரன் கொற்றனாருக்கும் அவர் தேனூர் கிழாருக்கும், அவர் படியன் கொற்றனாருக்கும் அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனாருக்கும் அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய் பெருஞ்சேந்தனாருக்கும் அவர் செல்லூராசிரியர் ஆண்டை பெருங் குமாரனாருக்கும் அவர் இளநாகனாருக்கும் அவர் முசிறியாசிரியர் நீலகண்டனாருக்கும் உரைத்தார் என்றும் இவ்வாறு வழிவழியாக இவ்வுரை வாய்மொழி இலக்கியமாக நடந்து வந்து பின்னர் ஏடேறிற்று என்றும் கூறுவர். களவியல் என்னும் நூற்பெயருக்கேற்ப களவியல் செய்திகள் நூலின் முகப்பில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இரண்டாவது இயலான கற்பியலில் கற்பியல் செய்திகள் தொகுக்கப் பட்டுள்ளன. பிற்கால அக இலக்கண நூல்களுக்குக் களவியல் என்னும் இறையனார் களவியல், முதல் நூல் போன்று அமைந்துள்ளது எனத் துணிந்து கூறலாம்.

## தமிழ் நெறி விளக்கம்

உ. வே. சா. நூலகப் பதிப்பில் வெளிவந்துள்ள அரிய இலக்கண நூல்கள் வரிசையில் ஒன்று தமிழ் நெறி விளக்கம். அக இலக்கணம் கூறும் மிகச்சிறிய நூல் இது. வையாபுரிப் பிள்ளை அவர்கள் பதிப்பித்த களவியல் காரிகை, இறையனார் களவியல் போன்று அமைந்துள்ள மற்றொரு அகப்பொருள் இலக்கண நூலாகும். காரிகை சிறந்த பழைய உரையைப் பெற்றுள்ளது. அவ்வுரையில் தமிழ் நெறி விளக்கம் பற்றிய குறிப்புள்ளது. எனவே காரிகைக்கு முற்பட்டது தமிழ்நெறி விளக்கம் என்பது விளங்கும். உ.வே.சா. பதிப்பில் இருபத்தைந்து நூற்பாக்கள் மட்டும் காணப்படுகின்றன. அவற்றுள் இருபத்தொரு நூற்பாக்கள் களவினையும் எஞ்சிய நான்கு நூற்பாக்கள் கற்பினையும் விளக்குகின்றன.

## அகப்பொருள் விளக்கம்

நம்பியகப்பொருள் என ஆசிரியர் பெயரோடு வழங்கப்படும் அகவிலக்கண நூல் அகப்பொருள் விளக்கம் என்பதாகும். இந்நூலின் ஆசிரியர் நாற்கவிராச நம்பி என்பவர் ஆவார். நம்பி என்பது இயற் பெயராய் இருத்தல் வேண்டும். ஆசு, மதுரம், வித்தாரம், சித்திரம் என்பன நான்கு

வகைக் கவிகளாகும். இந்நால் வகைக் கவிகளையும் பாடும் ஆற்றல் உடையவர் இவராதலால் நாற்கவிராச என்னும் சிறப்புப்பெயரை அடையாக வழங்கினர் என்பது புலனாகிறது. இவர் முதல் சடையவர்மன் என்னும் பாண்டிய மன்னனின் காலத்தவர் என்றும், ஆதலால் இவர் பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதி அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் கருதுவர். இந்நூல் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐந்தியல்களையும் இருநூற்றி ஐம்பத் திரண்டு நூற்பாக்களையும் உடையதாகும். இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுண்டு. இந்நூல் எழுந்த பிறகு அகப்பொருள் இலக்கண வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இந்நூலில் கூறப்பட்டுள்ள கூற்று மற்றும் துறைகளுக்கு இந்நூல் கூறிய வைப்புமுறைப்படியே உதாரணப் பாடல்கள் போன்று இலக்கியம் படைக்கும் முயற்சி எழுந்தது. நம்பியின் அகப்பொருள் விளக்கத்திற்கு உதாரணச் செய்யுள் இலக்கியமாகத் தஞ்சைவாணன் கோவை என்னும் கோவை நூல் கருதப்படுகிறது. இத்தகு சிறப்புடைய இவ் அகப்பொருள் நூல் தொல்காப்பியனார் கூறும் அகப்பொருள் கோட்பாடுகளைத் தழுவி ஆக்கம் பெற்ற பனுவல் என்பது குறிப்பிடத்தக்கது.

## களவியல் காரிகை

> "இவ்வரிய நூலுக்கு இப்போது கிடைத்துள்ளது ஒரு கையெழுத்துப் பிரதியேயாகும். இது சென்னை அரசாங்கத்தாரது தொன்னூல் நிலையத்தில் உள்ளது. இப்பிரதியின் இறுதியில் எழுதப் பெற்றுள்ள ஆங்கிலக் குறிப்பினால் இஃது ஆழ்வார் திருநகரி மலையப்பப் பிள்ளைக் கவிராயருக்குரிய ஏட்டுப் பிரதியினின்றும் நாத முனிப்பிள்ளை என்பார் 12.6.1920இல் இப்பிரதி செய்ததென அறியக் கிடக்கின்றது"

என்பது களவியல் காரிகை என்னும் பெயரிய இலக்கண நூலைப் பதிப்பித்த பதிப்பாசிரியரான ச. வையாபுரிப் பிள்ளையின் குறிப்பு ஆகும். இந்நூல் அகவிலக்கணத்தை விரித்துக் கூறுவது ஆகும். இந்நூலின் பெரும்பகுதி இன்றுவரை கிடைக்கப் பெறவில்லை. இந்நூல் நூற்பெயருக்கு ஏற்பக் காரிகை யாப்பால் பாடப்பெற்றுள்ளது. இருபத்தொரு காரிகை நூற்பாக்கள், நானூற்றுப்பதினாறு மேற்கோள் பாடல்கள் ஆகியன அடங்கிய உரை விளக்கப்பகுதியே இன்று வரை அச்சாகியுள்ளது. எனவே இந்நூலின் முழுமை குறித்தும், பொருண்மைச் சிறப்புக் குறித்தும் முழுதுற அறிதற்கியலவில்லை.

### மாறனகப்பொருள்

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பார் இயற்றிய அகவிலக்கண நூல் மாறனகப்பொருளாகும். இவ்வாசிரியர் மாறனலங்காரம், திருப்பதிக்கோவை, திருகுருகை மான்மியம், நம்பெருமாள் மும்மணிக்கோவை, மாறன் கிளவிமணி மாலை ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் பதினாறாம் நூற்றாண்டினர் என்பர்.

**மன்னும் அகத்திணையே மாண்டார் களவியலே**
**துன்னும் வரைவியலே தூத்தொடியே! பின்மெறக்**
**கூறத் தகுகற்பே கோதீர் ஒழிபியலே**
**மாறன் அகப்பொருளின் வைப்பு**

**ஐந்திணைசேர் மாறன் அகப்பொருளிற் சேருமியல்**
**ஐந்தாம் நூற் பாவெண் அடைவாகப் பைந்தொடியே**
**முந்நூற்று அறுபத்து மூன்றாம் முதல் இறுதி**
**உந்துவட வோர்கடனே ஓர்**

மேற்காட்டிய இரண்டு வெண்பாக்களும் மாறனகப்பொருளின் இறுதியில் காணப்படுகின்றன. முதல் வெண்பா மாறனகப் பொருள் அகத்திணை, களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் ஆகிய ஐந்தியல்களை உடையது என்பதனை விளக்குகிறது. இரண்டாவது வெண்பா மாறனகப் பொருள் ஐந்தியல்களையும் முந்நூற்று அறுபத்து மூன்று நூற்பாக்களையும் பெற்றிலங்குகிறது என்னும் கருத்தினைக் கூறுகிறது. இவ்விலக்கண நூலுக்கு இலக்கியமாகத் திகழும் திருப்பதிக்கோவை என்னும் நூலும் இவராலே பாடப்பெற்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அகப்பொருள் இலக்கணம் கூறும் மேற்காட்டிய இலக்கண நூல்கள் தமிழ் இலக்கண வரலாற்றில் இன்றுவரை தனிச் சிறப்புடன் போற்றப்பட்டு வருகின்றன. அக இலக்கணம் கூறும் மேற்கண்ட நூல்கள் போன்றே புறவிலக்கணம் கூறுவதற்கும் பல இலக்கண நூல்கள் எழுந்தன. அவற்றுள் பன்னிருபடலமும் புறப்பொருள் வெண்பாமாலையும் குறிப்பிடத் தகுந்த நூல்களாகும்.

## புற இலக்கண நூல்கள்

### பன்னிருபடலம்

அளவினால் பெயர் பெற்றது பன்னிருபடலம் என்னும் இறையனார் களவியல் உரைத்தொடரால் இந்நூல் பன்னிரண்டு படலங்களை உடைய பெரிய நூல் என்பது உணரப்படுகிறது.

**தொல் காப்பியன் முதல்**
**பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த**
**பன்னிருபடலமும் பழிப்பின் ணர்ந்தோன்**

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரப் பகுதியால் பன்னிருபடலம் தொல்காப்பியன் முதலான பன்னிரண்டு புலவர்களால் இயற்றப்பட்டது என்னும் செய்தி தெரியவருகிறது. பன்னிரு படலத்தில் தொல்காப்பியர் வெட்சிப் படலத்தைப் பாடினார் என்னும் கருத்துமுண்டு. இந்நூல் பற்றிய குறிப்புகள் தொல்காப்பிய இளம்பூரணர் உரையிலும் நச்சினார்க்கினியர் உரையிலும் புறப்பொருள் வெண்பாமாலை உரையிலும் காணப்படுகின்றன. யாப்பருங்கல உரை இந்நூலினைப்பற்றி பெருந்திணை இலக்கணம் கூறும் பகுதியில் விளக்குகின்றது. ஆயினும் இந்நூல் இன்றுகாறும் கிடைக்கப் பெறாத நூல்களுள் ஒன்றாகவே உள்ளது.

## புறப்பொருள் வெண்பாமாலை

பன்னிரு படலத்தை முதல் நூலாகக் கொண்டு செய்யப்பெற்ற புற விலக்கண நூல் புறப்பொருள் வெண்பாமாலை என்பர். இந்நூலாசிரியர் சேர மன்னர்களுள் ஒருவரான ஐயனாரிதனார் ஆவார். இந்நூல் ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என அறிஞர் துணிவர்.

**மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்**
**தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்**
**தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த**
**துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்**
**பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த**
**பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்**

என வரும் இந்நூலின் பாயிரப் பகுதியால், இந்நூல் பன்னிரு படலத்திற்குப் பிற்பட்டது என்பதும் அந்நூலினை முதன் முதலாகக் கொண்டு பிறந்த வழிநூலே இஃது என்பதும் புலனாகிறது. வெட்சிப் படலம், கரந்தைப் படலம், வஞ்சிப் படலம், காஞ்சிப் படலம், நொச்சிப் படலம், உழிஞைப் படலம், தும்பைப் படலம், வாகைப் படலம், பாடாண் படலம், பொதுவியல் படலம், கைக்கிளைப் படலம், பெருந்திணைப் படலம் ஆகிய பன்னிரண்டு பிரிவுகளை உடையதாய்ப் பத்தொன்பது நூற்பாக்களும், முந்நூற்று நாற்பத்தொரு கொளுக்களும், முந்நூற்று அறுபத்தொரு உதாரணப் பாடல்களும் என இந்நூல் ஆக்கப் பெற்றுள்ளது. இந்நூலிற்குப் பழைய உரை ஒன்று உண்டு. அவ்வுரை சாமுண்டி தேவநாயகர் என்பவரால் இயற்றப் பெற்றது. இவ்வுரையாசிரியர் சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறல் என்னும் ஊரினர் எனவும் இவர் பதின்மூன்று அல்லது பதினான்கும் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனவும் கருதுவர்.

## யாப்பிலக்கண நூல்கள்

யாப்பு என்ற சொல் 'கட்டுதல்' என்னும் பொருளைத் தரும். எழுத்து, அசை, சீர், தளை, அடி , தொடை முதலான உறுப்புகளைப் பெற்றிலங்குவது யாப்பு என்பர்.

**மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ**
**யாத்த சீரே அடியாப் பெனாஅ**
**மரபே தூக்கே தொடைவகை எனாஅ**
**நோக்கே பாவே அளவியல் எனாஅ**
**திணையே கைகோள் பொருள்வகை எனாஅ**
**கேட்போர் களனே காலவகை எனாஅ**
**முன்னம் பொருளே துறைவகை எனாஅ**
**மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையின்**
**ஆறுதலை யிட்ட அந்நா லைந்தும்**
**அம்மை அழகு தொன்மை தோலே**
**விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்**
**பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ**
**நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பென**
**வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே**

என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவில் முப்பத்து நான்கு உறுப்புகளை யாப்பிற்கு உரியனவாகத் தொல்காப்பியர் சுட்டுவார்.

**கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்**
**எந்தம் அடிகள் இணையடி ஏத்தி எழுத்தசைசீர்**
**பந்தம் அடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்**
**சந்த மடிய அடியான் மருட்டிய தாழ்குழலே**

என்னும் யாப்பருங்கலக்காரிகையின் பாயிரச் செய்யுள் ஆறு உறுப்புகளைச் சுட்டும். எவ்வாறாயினும் எழுத்து முதலான உறுப்புகள் பலவற்றான் உருவாக்கப் பெறுவது யாப்பு என்னும் கருத்துத் தெளிவுறும். யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள் என்பன எல்லாம் ஒரு பொருட்பன்மொழி. இதனை,

"யாப்பெனினும் பாட்டெனினும், தூக்கெனினும், தொடர்பெனினும், செய்யுளெனினும் ஒக்கும்.

**யாப்பும் பாட்டும் தூக்கும் தொடர்பும் செய்யுளை**
**நோக்கிற் றென்ப நுணங்கி யோரே**

என்றாராகலின்" என்னும் யாப்பருங்கலக்காரிகையின் உரைப்பகுதி புலப்படுத்தும். யாப்பாகிய செய்யுளின் இலக்கணம் கூறும் பகுதி யாப்பிலக்கணம் எனப்படும். இன்று வழக்கற்றுப்போன பேரகத்தியம் உள்ளிட்ட

பழம்பெரும் இலக்கண நூல்களின் யாப்பிலக்கணக் கோட்பாட்டினை அறிதற்கில்லை. ஆயினும் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அமைத்துள்ள செய்யுளியல் பழங்காலத் தமிழ் யாப்பியலின் இலக்கண வரையறையை விளக்கமுறவே செப்புகிறது. பிற்கால யாப்பிலக்கண நூல்கள் காட்டும் யாப்பிலக்கணக் கோட்பாடும் தொல்காப்பியரின் யாப்பிலக்கணக் கோட்பாடும் சற்றே முரண்பட்டுள்ளன. அம்முரண்களுள் தொல்காப்பியர் கூறாத பாவினங்களைப் பிற்கால யாப்பிலக்கணத்தார் கூறியுள்ளதும், அசைகள் குறித்துக் கூறுமிடத்து அசைகளின் பேரெல்லையாக மூவசையைத் தொல்காப்பியரும், நாலசையைப் பிற்காலத்தவரும் கூறுவதும் தொல்காப்பியர் அசை வகைகளாக நான்கனைச் சுட்ட பிற்காலத்தவர் நேர்பு, நிரைபு அசைளை விடுத்து நேர், நிரை என்னும் இரண்டினை மட்டும் சுட்டுவதும் தொடை விகற்பங்களில் முரண்படுவதும் யாப்பிலக்கணம் தொல்காப்பியர் காலத்தில் இருந்து பெற்றுவந்த வளர்ச்சியினைக் காட்டும் சான்றுகளாகும். தொல்காப்பியருக்கு முன்னரே தனி யாப்பிலக்கண நூல்கள் பலவோ ஐந்திலக்கணம் கூறும் நூல்களுள் யாப்பிலக்கணத்தையும் மொழிந்த நூல்கள் பலவோ இருந்திருக்கக் கூடும். அவ்விலக்கண நூல்கள் பிற நூல்கள் அழிந்தவாறே அழிந்திருக்கலாம். எவ்வாறாயினும் தொல்காப்பியத்திற்குப் பின் சில நூற்றாண்டுகள் கழித்து எழுந்த யாப்பருங்கலமும், காரிகையும் முதல் தனி யாப்பிலக்கண நூல்கள் எனக் கொள்ளுவதற்கில்லை. யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியர் தம் நூலகத்தே பல்வேறு யாப்பிலக்கண நூல்களைச் சுட்டிச் செல்கிறார். சங்க யாப்பு சிறுகாக்கைபாடினியம், காக்கைபாடினியம், மயேச்சுரம் ஆகிய யாப்பிலக்கண நூல்களின் நூற்பாக்கள் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரால் மேற்கோளாக ஆளப்பெற்றுள்ளன. ஆயினும் இந்நூல்கள் இன்று கிடைக்கப் பெறாமையால் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகியன காலத்தால் முந்து நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.

### யாப்பருங்கலம்

அமிர்தசாகரன் என்பவரால் கி. பி. பத்தாம் நூற்றாண்டளவில் இயற்றப்பெற்ற நூல் யாப்பருங்கலமாகும். இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்களையும் தொண்ணூற்றாறு நூற்பாக்களையும் உடைய யாப்பு நூலாகும். இந்நூலுக்கு ஒரு விருத்தியுரை உண்டு. இவ்வுரையை இயற்றினார் பெயர் அறிதற்கில்லை. ஆயினும் இவ்வுரைக்கு இணையாகக் கூறத்தக்க யாப்பு நூலுரை இன்றுகாறும் எழவில்லை.

### யாப்பருங்கலக் காரிகை

யாப்பருங்கலத்தின் ஆசிரியரான அமிர்த சாகரர் இயற்றிய மற்றொரு யாப்பு நூல் யாப்பருங்கலக் காரிகை ஆகும். இந்நூல் காரிகை யாப்பான கட்டளைக் கலித்துறை யாப்பால் பாடப் பெற்றுள்ளமையால் யாப்பருங்கலக் காரிகை எனப் பெயர் பெற்றது. காரிகை என்னும் சொல் பெண் எனப் பொருள்

படுதலாலும். இந்நூலின் பாடல்கள் மகடூஉ முன்னிலையாகப் புனையப் பெற்றுள்ளமையாலும், யாப்பருங்கலக் காரிகை எனப் பெயர் பெற்றது என்ற கருத்தும் உண்டு. இந்நூல் இருபது பாடல்களை உடைய உறுப்பியல், பன்னிரெண்டு பாடல்களைக் கொண்ட செய்யுளியல், ஒன்பது பாடல்களால் ஆன ஒழிபியல் என அமைந்து மூன்று இயல்களையும் நாற்பத்துநான்கு காரிகைச் செய்யுள்களையும் கொண்டுள்ளது. இந்நூலுக்கு எழுந்த பழைய உரை ஒன்றுண்டு. இவ்வுரையின் ஆசிரியர் பெயர் குணசாகரன். அமிர்தசாகரரின் ஆசிரியரே குணசாகரன் என்னும் கருத்துமுண்டு. இக்கருத்தினை உடன்படுவாரும், மறுதலைப்பாரும் உளர். எவ்வாறா யினும் இக்காரிகை நூலின் உரை திட்பமும் நுட்பமும் உடையது என்பதில் மாறுபடுவாரில்லை. காரிகை என்னும் பெயரேற்றுக் காரிகைச் செய்யுளால் பாடப்பெற்றுள்ள இந்நூலில் காரிகைச் செய்யுளின் இலக்கணம் கூறப்பெறவில்லை என்பதும் உரையாசிரியரின் உரைப் பகுதியிலேயே காரிகைச் செய்யுளான கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் விளக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத் தகுந்தவை ஆகும்.

இந்நூலுக்குப் பின்னரே யாப்பருங்கலத்திற்கு விருத்தியுரை எழுந்துள்ளது. காரிகையின் விருத்தியுரைகாரர் கலத்திற்கான நூற்பாக்களுக்கு விளக்கம் கூறுமிடத்து விருத்தியுரைப் பகுதிகளைக் காரிகை உரையில் கூறியுள்ளார். இதனால் விருத்தியுரை முற்பட்டது என்பதும், குணசாகரரின் காரிகையுரை பிற்பட்டது என்பதும் உணரப்படுகிறது.

## பாப்பாவினம்

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பாரால் இயற்றப்பெற்ற நூல் பாப்பாவினம் அல்லது மாறன் பாப்பாவினம் என்னும் பெயரியது. இந்நூலாசிரியர் மாறனலங்காரம் என்னும் அணியிலக்கண நூலினையும் மாறனகப் பொருள் என்னும் அகவிலக்கண நூலினையும் இயற்றியுள்ளார். இந்நூல் பா, பாவினம் ஆகிய செய்யுளிலக்கணப் பகுதியையும், உதாரணச் செய்யுட்களையும் பெற்றுத் திகழ்கிறது.

இந்நூலின்கண் நூற்று முப்பத்தைந்து உதாரணப் பாடல்கள் உள்ளன. மேலும் பரிபாடல்கள் ஐந்தும் இதன் பிற்சேர்க்கையாய் அமைந்துள்ளன. பா, பாவினத்தின் இலக்கணத்தை அவ்வகை களுக்கான பாடல்களின் மூலம் விளக்கிச் செல்லும் இந்நூல் தமிழ் இலக்கண உலகில் முதல் முயற்சியாக அமைந்துள்ளது.

இந்நூலின் நுவலும் முறைமையைப் பின்பற்றிச் சிதம்பரச் செய்யுட் கோவை யாக்கப் பெற்றுள்ளது.

## சிதம்பரச் செய்யுட் கோவை

கி. பி. பதினேழாம் நூற்றாண்டளவில் தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள திருவைகுண்டத்தில் பிறந்த குமரகுருபரர் இயற்றியது சிதம்பரச் செய்யுட் கோவை ஆகும். இந்நூலில் வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றின் விகற்பங்களும், அவ்வவற்றின் இனங்களும், மருட்பாவும் என ஒன்பது பகுப்புகளும், எண்பத்து நான்கு உதாரணச் செய்யுட்களும் உள்ளன. இந்நூல் மேலே கூறப்பெற்ற பா, பாவினம் ஆகியனவற்றிற்கு உதாரணச் செய்யுட்களால் இலக்கணம் கூறும் நூலாக அமைந்துள்ளது.

## விருத்தப்பாவியல்

இருபதாம் நூற்றாண்டில் எழுந்த குறிப்பிடத் தகுந்த யாப்பியல் நூல் விருத்தப்பாவியல் ஆகும். இந்நூலினை வீரப்ப முதலியார் என்பார் இயற்றினார். இவர் தமிழ் இலக்கியத்தில் விருத்தப்பாவின் வளர்ச்சியை ஆய்ந்து எழுதியுள்ள ஆங்கில ஆய்வுரை குறிப்பிடத் தகுந்ததாகும்.

## அணியிலக்கண நூல்கள்

இன்று வழக்கில் உள்ள அணியிலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியது தண்டியலங்காரம் ஆகும். தொல்காப்பியர் உவமையியலில் உவமை, உருவகம் ஆகிய அணிகளின் இலக்கணத்தை விளக்கியுள்ளார். தொல்காப்பியத்திற்குப் பின் வீரசோழியம் அணிகளின் இலக்கணம் கூறும் ஐந்திலக்கண நூலாகத் திகழ்கிறது. இவ்விரு நூல்களுக்குப் பின்னர் அணியிலக்கணத்திற்கென எழுந்த இலக்கண நூலாகத் திகழ்வது தண்டியலங்காரமாகும்.

## தண்டியலங்காரம்

தண்டி என்பார் இயற்றிய அணியிலக்கண (அலங்கார) நூலாதலின் நூல் இயற்றியோன் பெயரோடு நூற்பெயர் வழங்கும் மரபு கருதி தண்டியலங்காரம் எனப்பெயர் பெற்றது. வடமொழியில் காவிய தர்ஷம் பாடிய தண்டியே தமிழிலும் அலங்கார நூலைப் பாடினார் என்பர். ஆயினும் இக்கருத்தினை மறுத்துக் கம்பனின் மகனான தண்டி என்பார் இயற்றியதே தண்டியலங்காரம் எனக் கூறுவாரும் உளர். இந்நூல் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் மூன்று இயல்களையும் அவ்வியல்களுக்கு முறையே இருபத்தாறு, அறுபத்தைந்து, முப்பத்தைந்து என மொத்தம் நூற்றி இருபத்தாறு நூற்பாக்களையும் பெற்றுள்ளது. இந்நூலின் பொருளணியியலில் முப்பத்தைந்து அணிகள் விளக்கம் பெற்றுள்ளன. சொல்லணியியலில் மடக்கணி, அதன் விகற்பங்கள் மற்றும் பன்னிரண்டு சித்திரக்கவிகள் விளக்கப் பெற்றுள்ளன.

## மாறனலங்காரம்

பதினாறாம் நூற்றாண்டில் திருநகரி என்னும் ஊரில் வாழ்ந்திருந்த குருகைப் பெருமாள் கவிராயர் என்பார் பாடிய அணியிலக்கண நூல் மாறனலங்காரம் என்பதாகும். இந்நூல் பாயிரம், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்னும் ஐந்தியல்களையும் மொத்தம் முந்நூற்று இருபத்தேழு நூற்பாக்களையும் பெற்றுள்ளது. இந்நூலுக்குக் காரி ரத்தினக் கவிராயர் என்பார் உரையெழுதி உள்ளார். இவர் மூல நூலாசிரியரின் மாணாக்கர் ஆவார். இந்நூலில் அறுபத்துநான்கு பொருளணிகளும், இருபத்தாறு சித்திரக்கவிகளும் விளக்கப் பெற்றுள்ளன.

## சந்திராலோகம்

வடமொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்ட அணியிலக்கண நூல் சந்திராலோகம் ஆகும். முதல் மொழிபெயர்ப்பு விசாகப் பெருமாளையரால் செய்யப் பெற்றது. இம்மொழிப்பெயர்ப்பு உரைநடையில் அமைந்தது. பின்னர் இராமநாதபுர சமஸ்தான வித்துவானாகிய முத்துசாமி ஐயங்கார் வடமொழி சந்திராலோகத்தைத் தமிழில் செய்யுள் வடிவிலேயே மொழிபெயர்த்தார். இந்நூலில் நூறு பொருளணிகள் விளக்கப் பெற்றுள்ளன. சொல்லணிகளை இந்நூல் விளக்கவில்லை.

## குவலயானந்தம்

வடமொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பெற்ற மற்றொரு அணியிலக்கண நூல் குவலயானந்தம் ஆகும். இப்பெயரில் இரண்டு நூல்கள் வழங்கி வருகின்றன. ஒன்று அப்பைய தீட்சிதர் செய்த மொழிபெயர்ப்பு ஆகும். மற்றொன்று மாணிக்கவாசகர் இயற்றியதாக வழங்கப்பெற்று வருவதாகும். இந்நூலில் முந்நூற்று நான்கு நூற்பாக்கள் அமைந்துள்ளன. எண்பத்தேழு பொருளணிகளுக்கும் பதினேழு சித்திரக் கவிகளுக்கும் இந்நூலில் இலக்கண வரையறை செய்யப்பட்டுள்ளன.

வடமொழியில் மகாகவி காளிதாசன் இயற்றிய சந்திராலோகம் என்னும் நூல் அப்பைய தீட்சிதரால் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றது. உரையாலும், சுலோகத்தாலும் அமைந்த இம் மொழிபெயர்ப்பினை எட்டையபுர சமஸ்தானத் தமிழ் வித்வான் முகவூர் மீனாட்சி சுந்தரக் கவிராயர் என்பார் கட்டளைக் கலித்துறை யாப்பில் இலக்கண நூலாக யாத்துக் குவலயானந்தம் என வழங்கினார். இந்நூல் நூற்று அறுபத்தேழு பொருளணிகளை விளக்குகிறது. சித்திரக் கவிகளை இந்நூல் விளக்கவில்லை.

## ஐந்திலக்கண நூல்கள்

### 1. வீரசோழியம்

தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்து இன்று வரை வளர்ந்து வரும் இலக்கண நூல்களுள் ஐந்திலக்கணப் பாகுபாட்டோடு கட்டமைக்கப்பட்டுள்ள முதல் இலக்கண நூல் வீரசோழியம் ஆகும். வீரராசேந்திர சோழன் என்பான் வீரசோழன் என்றும் அழைக்கப் படுபவன். அச்சோழனின் பெயரே நூற்பெயராய்க் கொண்டிலங்கும் இவ்விலக்கண நூலின் ஆசிரியரும் ஓர் அரசனே. பொன்பற்றி என்னும் நாட்டின் சிற்றரசனாக, வீரசோழனின் காலமான கி. பி. பதினோராம் நூற்றாண்டில் விளங்கிய புத்தமித்திரர் என்னும் இயற்பெயருடைய சிற்றரசர் இந்நூலினை இயற்றினார். இந்நூலாசிரியரின் பெயரே இவர் புத்தமதம் சார்ந்தவர் என்பதைத் தெளிவுறுத்தும். மேலும் "போதியின் மேதக் கிருந்தவம் பாதம் தலைமேற் புனைந்து தமிழுரைக்கப் புக்கவன், பைம்பொழில் பொன் பற்றி மன் பூத்த மித்திரனே" என வரும் இந்நூலின் பாயிரச் செய்யுள் தொடரானும் இந்நூலாசிரியரின் பெயர் புத்தமித்திரர் என்பதும் அவர் புத்த மதத்தினர் என்பதும் உணரப்பெறும்.

கட்டளைக் கலித்துறை யாப்பால் பாடப்பெற்றுள்ள இந்நூல் மூன்று பாயிரப்பாடல்களும் நூற்றி எண்பத்தொரு பாடல்களும் என மொத்தம் நூற்றி எண்பத்திநான்கு பாடல்களைப் பெற்றுள்ளது. பாடப்பெற்றுள்ள யாப்பின் பிறிதொரு பெயரான காரிகை என்பதனை நூற்பெயரொடு இயைத்து வீரசோழியக் காரிகை என்னும் பெயராலும் இந்நூல் வழங்கப்பட்டு வருகிறது. இந்நூலின் பெரும் பிரிவு அதிகாரம் எனவும், உட்பிரிவு படலம் எனவும் அமைக்கப்பட்டுள்ளது. எழுத்ததி காரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அலங்காரம் என்பன இந்நூலின் ஐந்ததிகாரங்கள். முதலதிகாரமான எழுத்ததிகாரம் சந்திப்படலம் என்னும் ஒரு படலத்தையும், சொல்லதிகாரம் வேற்றுமைப் படலம், உபகாரகப் படலம், தொகைப்படலம், தத்திதப்படலம், தாதுப்படலம், கிரியாப்பதப்படலம் ஆகிய ஆறு படலங்களையும் பெற்றுள்ளன. பொருளதிகாரம் பொருட்படலம் என்னும் ஒரு படலத்தையும் யாப்பதிகாரம் யாப்புப்படலத்தையும் அலங்காரம் அலங்காரப் படலத்தையும் பெற்றுள்ளதால் இந்நூல் பத்துப்படலங் களைப் பெற்றுள்ளது. வடமொழி இலக்கண மரபும் தமிழ் இலக்கண மரபும் கூறும் இவ்விலக்கண நூலுக்குப் பெருந்தேவனார் இயற்றிய பழைய உரை ஒன்றுண்டு.

### இலக்கண விளக்கம்

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற ஐந்திலக்கண நூல் இலக்கண விளக்கம் என்பதாகும். திருவாரூர் வைத்தியநாத தேசிகர்

என்பார் இயற்றிய இந்நூல் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களையும் அவ்வதிகாரங்களுக்கு முறையே நூற்று ஐம்பத்தெட்டு, இருநூற்றுப் பதினான்கு, முந்நூற்று எண்பத்தெட்டு என எழுநூற்று அறுபது நூற்பாக்களையும் பெற்றமைந்ததாகும். இந்நூலாசிரியரின் மகனான தியாகராய தேசிகர் இயற்றிய பாட்டியல் என்னும் இலக்கண நூல் நூற்றி எண்பத்தொரு நூற்பாக்களை உடையது. இந்நூலும் இலக்கண விளக்கத்தில் இணைக்கப் பட்டுள்ளதால் இலக்கண விளக்கத்தின நூற்பாத் தொகை தொள்ளாயிரத்து நாற்பத்தொன்றாக உள்ளது. ஆயினும் எழுத்ததிகாரத்தில் நாற்பத்து மூன்றும், சொல்லதிகாரத்தில் நாற்பத்தொன்றும், ஆக இவ்விரு அதிகாரங்களுக்கு எண்பத்து நான்கு நூற்பாக்கள் மட்டுமே வைத்தியநாத தேசிகர் இயற்றியது ஆகும். எஞ்சிய இருநூற்றி எண்பத்தெட்டு நூற்பாக்கள் முந்து நூல்களின் நூற்பாக்கள் ஆகும். இந்நூலுக்கு எழுதப்பட்டுள்ள உரை இந்நூலாசிரியரான வைத்தியநாத தேசிகரின் மகன்களுள் ஒருவரான சாதாசிவ நாவலர் இயற்றியது என்று கருதுவர்.

## தொன்னூல் விளக்கம்

இத்தாலி நாட்டவரான கான்ஸ்டைன் ஜோசப் பெஸ்கி என்னும் இயற்பெயர் உடையவரும் பின்னாளில் நான்காம் தமிழ்ச் சங்கத்தினாரால் *'வீரமாமுனிவர்' என்னும் சிறப்புப்* பெயர் வழங்கப் பெற்று இன்றுவரை அப்பெயரால் அறியப்பெறுபவருமான இப்புலவர் பெருமகனார் இயற்றியது தொன்னூல் விளக்கம். ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், சமஸ்கிருதம், இந்துஸ்தானி, தெலுங்கு, *கன்னடம் முதலான பன்மொழிப்* புலமை உடைய இவர் தமிழில் பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார். தேம்பாவணி என்னும் காப்பியமும், கித்தேரி அம்மன் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்களும் கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம் ஆகிய இலக்கண நூல்களும் சதுரகராதி என்னும் அகராதி நூலும் இவர் தம் படைப்புகளில் குறிப்பிடத் தகுந்தன.

தொன்னூல் விளக்கம் எழுத்து முதலான ஐந்திலக்கணம் கூறும் நூல். முந்நூற்று எழுபது நூற்பாக்களை உடையது. இந்நூல் நூலாசிரியரால் எழுதப்பெற்ற உரையுடன் திகழ்வது. காலமாற்றத்தால் தமிழ் இலக்கணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்து மொழிவது. மொத்தத்தில் இந்நூல் புத்திலக்கண நூலாகத் திகழ்வது.

## முத்துவீரியம்

முத்துவீர உபாத்தியாயர் என்பாரால் இயற்றப் பெற்று ஆசிரியர் பெயரால் வழங்கப்பெற்று வரும் ஐந்திலக்கண நூல் முத்துவீரியம் ஆகும்.

ஐந்து அதிகாரங்களும் ஆயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு நூற்பாக்களும் உடைய இந்நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இந்நூலுக்கு திருப்பாற்கடல் நாதன் கவிராயர் என்பார் உரை எழுதியுள்ளார். இவ்வுரையாசிரியர் நூலாசிரியரின் சம காலத்தவர் என்பதும், அணுக்க நட்பினர் என்பதும் அறிய வேண்டிய செய்திகளாகும்.

## பிற இலக்கண நூல்கள்

தமிழில் பிற்காலத்தில் பல புதிய இலக்கணத் துறைகள் எழுந்து வளர்ந்துள்ளன. அத்துறைகளுள் குறிப்பிடத்தகுந்தது பாட்டியல் ஆகும். பாட்டியல் என்னும் சொல் பாட்டு, இயல் ஆகிய இரு சொற்களின் கூட்டுச் சொல் என்றும், எழுத்து பற்றிய இலக்கணம் கூறும் இயல் எழுத்தியல் என்றாற்போல பாட்டு பற்றிய இயல் பாட்டியல் எனலாயிற்று என்றும், பாட்டு என்பது ஆகுபெயராய் அப்பாட்டான் இயலும் இலக்கிய வகை எனப் பொருள்படும் என்றும் ஆதலின் இலக்கிய வகையின் இலக்கணம் கூறும் துறை பாட்டியல் எனலாயிற்று என்றும் கூறுவர். அவ்வாறே பாட்டியல் துறையில் அகத்தியர் மரபு. இந்திரகாளியனார் மரபு என்னும் இரு வேறு பிரிவுகள் வழங்கின என்றும் இவ்விரு பிரிவுகளிலும் பற்பல பாட்டியல் நூல்கள் எழுந்தன என்றும் பழம்பெரும் உரையாசிரியர்களின் கூற்றுகளை எடுத்துக்காட்டி விளக்குவர். ஆயினும் இன்று வழங்கப்பெறும் பாட்டியல்களுள் காலத்தால் முற்பட்டது பன்னிருபாட்டியல். இந்நூல் பத்தாம் நூற்றாண்டில் எழுந்தது எனக் கருதுவர். இந்நூலின்கண் பன்னிரண்டு பாட்டியல் நூல்களின் நூற்பாக்கள் மேற்கோள்களாக ஆளப்பெற்றுள்ளன. பன்னிரு பாட்டியலுக்குப் பின் பல்வேறு பாட்டியல் நூல்கள் எழுந்த போதிலும் வெண்பாப்பாட்டியல், வரையறுத்தப்பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, பிரபந்த தீபம், பிரபந்தத் திரட்டு, சண்முகப் பாட்டியல், பொருத்த விளக்கம் ஆகிய தனிப் பாட்டியல் நூல்கள் மட்டுமே இன்று வழக்கில் உள்ளன. இவற்றுள்ளும் வரையறுத்தப் பாட்டியலும், சண்முகப் பாட்டியலும் பொருத்த விளக்கமும், பாட்டியல் இலக்கணக் கூறுகளுள் ஒன்றான பொருத்த இலக்கணம் கூறுவன. பொருத்தங்கள் பன்னிரெண்டு என்பது பன்னிரு பாட்டியலின் கருத்து. பிற்கால பாட்டியல்கள் பத்து பொருத்தங்களையே கூறுகின்றன. வரையறுத்தப் பாட்டியல் மங்கலப் பொருத்தம் ஒன்றனையும், சண்முகப் பாட்டியல் எழுத்துப் பொருத்தத்தையும் மட்டுமே விளக்குகின்றன. பொருத்த விளக்கம் பத்துப் பொருத்தங் களை மட்டும் விளக்கும் நூலாகும். தனிப் பாட்டியல்கள் மட்டுமே யன்றி பிற்கால ஐந்திலக்கண நூல்கள் சிலவற்றுள்ளும் பாட்டியல் இலக்கணம் பரக்கப் பேசப்பட்டிருப்பதும் உண்டு. இலக்கண விளக்கம்,

தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் ஆகிய ஐந்திலக்கண நூல்களில் பாட்டியல் தனி இயலாக வைத்து விளக்கப்பட்டுள்ளது.

பாட்டியல்கள் பெரும்பான்மை மூன்று கூறுகளாக அமைந்துள்ளன. முதற்பகுதி பொருத்த இலக்கணமும் இரண்டாவது அல்லது நடுப்பகுதி இலக்கியங்களின் இலக்கணமும் இறுதிப்பகுதி ஒழிபியல் செய்திகளும் பெற்றிலங்குமாறு அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் இவ்வமைப்பு முறை எல்லாப் பாட்டியல்களுக்கும் பொருந்து வமில்லை. சில பாட்டியல் நூல்கள் பொருத்த இலக்கணத்தையும் ஒழிபியல் செய்திகளையும் கூறாது இலக்கிய வகைகளின் இலக்கணத்தை மட்டுமே கூறிச் செல்வதும் உண்டு. இத்தகு அமைப்பு முறைக்குப் பிரபந்த மரபியல் தக்க சான்று எனலாம். பாட்டியல்கள் ஏறத்தாழ இருநூற்று ஐம்பது இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறியுள்ளன. இலக்கிய வகைகளில் இலக்கணம் கூறும் தனித் துறையான பாட்டியல் தமிழ் இலக்கண உலகில் செழித்து வளர்ந்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆறாம் இலக்கணம் என்னும் தம் நூலுள் புலமை இலக்கணம் என்னும் புதிய இலக்கணப் பிரிவை விளக்கிச் செல்கிறார். அவ்வாறே பல்வேறு அகராதிகளும் நிகண்டுகளும் தமிழில் தோன்றி சொற்பிறப்பியல் மற்றும் சொல் பொருளியல் ஆகிய புத்திலக்கணத் துறைகளை வளர்த்துள்ளன.

இவ்வாறு தமிழ் இலக்கணப் பரப்பு காலந்தோறும் பற்பல புத்திலக்கண நூல்களோடும் பற்பல புத்திலக்கணத் துறைகளோடும் வளர்ந்து வருகிறது. வளர்ச்சி என்பதே முன்னைய நிலையிலிருந்து மிக்குயர்ந்து செல்வது. ஆதலால் தமிழ் இலக்கணக் கோட்பாடு காலந்தோறும் புதிய மரபுகளோடு வளர்ந்துள்ளது என்பது புலனாகும்.

■

# ஒலி வடிவமும் வரிவடிவமும்

மொழியின் இலக்கணம், அவை எம்மொழி இலக்கணமாயினும் இருவேறு உறுப்புகளைப் பற்றியதாக அமைகிறது. அதாவது மொழியின் இன்றியமையாத உறுப்புகளான எழுத்தும் சொல்லும் பற்றிய அறிவியல் முறையிலான விளக்கமே மொழி இலக்கணம் ஆகும். மொழி இலக்கணம் வேறு பல செய்திகளையும் விளக்குவதாக அமையினும், அச்செய்திகளும் எழுத்தினைப் பற்றியோ சொல்லினைப் பற்றியோ அமைந்தவையே யாம். சுருக்கமாகக் கூறுவதாயின், மொழி இலக்கணம் என்பது எழுத்து, சொல் ஆகியவற்றின் இலக்கணமே ஆகும். இன்னும் சரியாகச் சொல்வ தென்றால் மொழி இலக்கணம் என்பது எழுத்தின் இலக்கணமே.

'மொழி சொற்களின் களஞ்சியம். அதனால் தான் மொழி என்னும் சொல்லுக்கானப் பெயர் அச் சொல்லால் இயங்கும் மொழிக்கும் (language) அமைந்து கிடக்கிறது. ஆங்கிலம், வடமொழி முதலான ஒரு சில மொழிகளில் சொல் (word) வேறு, மொழி (language) வேறு என்றே சுட்டப்படுகின்றன. சொல்லால் இயங்குவதே மொழி. ஆயினும், சொல் மொழியின் ஓர் உறுப்பு என்ற அளவிலேயே நோக்கப்பட்டு மொழியின் ஓர் அலகாகச் சொல் என்பதனைக் கருதி, சொல்லினையும் மொழியினையும் குறிக்கும் குறியீடுகளாக வெவ்வேறு சொற்களை வழங்குவராயினர். ஆனால் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதும், தமிழ் மொழியில் கிடைக்கப் பெற்றுள்ள நூல்களுள் தொன்மையானதுமான தொல்காப்பியம், சொல் வேறு மொழி வேறு எனக் கருதவில்லை. கருதாமையினால்தான் இரண்டிற்கும், மொழி என்னும் பொதுச் சொல்லைக் கையாண்டுள்ளது.

கிளவி, சொல், மொழி என்பன ஒரு பொருள் பன்மொழிகளாகத் தொல்காப்பியரால் கையாளப்பட்டுள்ளன. இச்சொற்கள் அனைத்தும் சொல் (word) என்னும் பொருளினைத் தருவனவே ஆகும். ஆதலின் பிற மொழியியலார் கருதுமாறு மொழி வேறு, சொல் வேறு என்னும் கோட்பாடானது தொல்காப்பியத்தில் இல்லை என்பது அங்கை நெல்லி ஆகும். 'சொல் என்பது மொழியா? சொல்லின் இயக்கம் அல்லது சொற்களின் தொடரியைபு மொழியா என ஆய்ந்தால் இவ்விரண்டில் ஒன்றோ? அல்லது இரண்டுமோ பொருந்தா. ஏனெனின் தமிழில் மொழி என்பது சொல் என்னும் பொருளைத் தருவதாயினும் அச்சொல்லே எழுத்து என்னும் பிறிதொரு பொருளையும் தரும். 'ஆ என் கிளவி,' 'னகர மொழி இறுதி' என வரும் தொடர்களில் எல்லாம் எழுத்தினை மொழி என்னும்

சொல்லால் சுட்டுவதை நோக்குக. இவற்றை யெல்லாம் ஒருங்கு வைத்து ஆழ்ந்து நோக்குங்கால் எழுத்து என்பதே மொழி எனப் பொருள்படும் என்பதும் அதுவே ஆகுபெயராக எழுத்தால் இயங்கும் சொல் எனச் சுட்டி அச்சொற்களின் கூட்டால் இயங்கும் மொழியைச் (Language) சுட்டிற்று என்பதும் புலனாகும். எனவே தமிழில் மொழி என்பது எழுத்து என்னும் பொருளுடையது என்பதும் அது ஆகுபெயராய்ச் சொல்லினையும் சொற்களின் தொடர் இயக்கத்தினையும் சுட்டுகிறது என்பதும் அறிய வேண்டுவனவாகும்' என அறிஞர் கருதுவர்.

மேற்கூறியவாறு எழுத்து என்பது மொழி என்பதின் ஓர் அலகு என்னும் கருத்து ஆங்கிலம் அனைய மொழிகளுக்குப் பொருந்துமே யன்றி தமிழுக்குப் பொருந்தாது. தமிழ் மிகத் தொன்மையான காலத்தில் பிறந்து இன்றளவும் மக்கள் வழங்கும் மொழியாக வாழ்ந்து வருவது. தொடக்கத்தில்; அஃதாவது மொழி உருவாகிய காலத்தில், பல எழுத்துக்களின் கூட்டால் ஆகிய சொல் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. மாறாக ஓர் ஒலிக் குறிப்பே ஒரு பொருளினைச் சுட்டும் சொல் வடிவமாக (எழுத்து) இருந்திருக்கும். காலச் செலவிற்குப் பிறகு தனித்தனி ஒலிக்குறிப்புகள் இணைக்கப்பட்டுப் புதுப்புது சொற்கள் வழக்கில் வந்திருக்கும். தமிழில் உயிர் நெட்டெழுத்துக்கள் ஏழும் பொருள் தரும் சொற்களாக விளங்குவன. உயிர்மெய் எழுத்துக்களுள் பலவும் எழுத்தளவில் நின்று, சொல் நிலையில் பொருள்படுவன. இத்தகு பொருள்தரும் எழுத்துக்களை ஓரெழுத்து ஒரு மொழி எனச் சுட்டுவர். ஓரெழுத்து ஒரு மொழிகள் பிற மொழிகளில் இன்மையும் தமிழில் இன்றுகாறும் வழங்கும் நிலையையும் ஒப்பிட ஓரெழுத்து ஒரு மொழி வழங்கா மொழிகளைக் காட்டிலும் தமிழ் காலத் தொன்மையது என்பது புலனாகும். அவ்வாறே ஓரெழுத்து ஒருமொழி என்னும் தொடரே எழுத்தே மொழி எனப் பொருள்படும் என்னும் கருத்தினையும் அரண் செய்யும்.

எழுத்து ஓரெழுத்தாய் நின்று பொருள் தரும் பாங்கினை மேலே கண்டோம். இனி எழுத்து என்பது எது? என்னும் வினாவிற்கு விடை தேடுவதும் அவசியம். எழுத்து என்பது எழுதப்படுவதினால் வந்த காரணப்பெயர் என்பார் சிலர். எழுதுதல் என்பது எழுத்தினை வரையும் தொழிலினை மட்டுமே குறிப்பது அன்று. மடவார் கண்ணுக்கு மை தீட்டும் தொழிலும், தூரிகையான் பதாகை ஒன்றிலோ பாறை ஒன்றிலோ பிற ஒன்றிலோ வண்ணம் பல கூட்டிச் சித்திரம் வரையும் தொழிலும், பணைத்தத் தோள் மீதும் பருத்த முலை மீதும், பூந்தாது கொண்டு தொய்யில் வரையும் தொழிலும் எழுதுதல் என்றே கூறுதல் நோக்குக. எழுதப்படுதலினால் எழுத்து எனலாயிற்று என்னும் கருத்தினை ஏற்பதாயின் மை எழுதுவது, படம் எழுதுவது, தொய்யில் எழுதுவது எல்லாம் எழுத்தாகுமா? ஆதலினால் எழுதப்படுதலினால் எழுத்து என்னும் பெயர் பற்றிய கருத்தினை ஏற்க இயலாது.

எழுத்து இருவேறு வடிவங்களில் இயங்குவது ஒன்று ஒலி வடிவம், பிறிதொன்று வரி வடிவம். வரிவடிவம் பின்னையது. ஒலிவடிவமே முன்னையது. ஒலிவடிவ எழுத்துப் பயன்பாட்டிற்கு வந்து பன்னூறு ஆண்டுகள் கழிந்த பின்பே வரிவடிவம் தோன்றியிருக்கும். வரிவடிவம் இல்லா எழுத்தும் அவ்வெழுத்தான் இயங்கும் மொழியும் இவ்வுலகில் உண்டு. ஆனால் ஒலிவடிவம் இல்லாது வரிவடிவம் மட்டுமே உள்ள மொழி ஒன்றினைக் காண இயலவே இயலாது. பேச்சு வழக்கற்ற மொழிகள் உண்டு. அம்மொழிகளின் எழுத்திற்கு ஒலிவடிவம் உண்டு. எனவே ஒலிவடிவம் இல்லாது; வரிவடிவம் மட்டுமே உடைய மொழி இருப்பதற்கு வழி இல்லை. எனவே மொழியில் எழுத்தாகிய ஒலிவடிவமே முதல் வடிவம் என்பதும் அவ்வடிவம் இல்லாமல் ஒரு மொழி இராது என்பதும் நோக்க, எழுதப்படுவதினால் எழுத்தாயிற்று என்னும் கருத்து பொருந்தாமையை அறிக. மேலும், வரிவடிவத்திற்கு எழுத்து என வழங்குவதாதலின் ஒலிவடிவத்திற்குப் பிறிதொரு பெயர் வேண்டும். அத்தகு பெயர் இன்மையால் எழுத்து என்பது ஒலிவடிவத்திற்குப் பெயராகிப் பின்னர் அது ஆகுபெயராய் வரிவடிவத்தையும் சுட்டலாயிற்று எனக் கொள்வதே சிறப்பு.

வடமொழியில் எழுத்தின் இருவேறு வடிவங்களை நாதம், விந்து என்பர். நாதம் ஓசையையும் விந்து உருவத்தையும் உணர்த்துகின்றன. ஆங்கிலச் சொல்லான letter என்பது எழுத்துக் குறியீட்டை மட்டுமே உணர்த்துகிறது. அம்மொழியில் வடமொழி போன்று எழுத்தின் ஒலி வடிவினை நாதம் என்று தனித்துக் கூறுதலாகிய சொல் வழக்கிற்கு இணையான வழக்கு இல்லை. தமிழ் மேற்சுட்டிய இருமொழிகளின்றும் தனித்து நின்று தன் நீர்மையாம் பண்பினை உணத்தும் பெற்றியது. வடமொழி போன்று தமிழ், எழுத்து சொல் என இரு நிலைகளில் ஒலி வடிவினைச் சுட்டிச் செல்கிறது. ஆயின் வடமொழியில் விந்து என வரிவடிவைச் சுட்டுவது போன்று சுட்டும் சொல் தமிழில் இல்லை. இதன் கருதி எழுத்து என்னும் சொல் காரண அடியாகப் பிறந்த பெயர்ச்சொல் எனக் கொண்டு எழுதப்படுவதால் எழுத்தெனப்படுகிறது எனக் கூறுவாரும் பிற்காலத்தே தோன்றினர். தொல்காப்பியர்,

**உந்தி முதலா முந்துவளி தோன்றித்**
**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**
**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**
**அண்ணமும் உளப்படஎண்முறை நிலையான்**
**உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி**
**எல்லா எழுத்தும் சொல்லுங் காலை**
**பிறப்பி னாக்கம் வேறுவேறியல**
**திறப்படத் தெரியும் காட்சி யான** **(தொல்.83)**

என்னும் நூற்பாவில் எழுத்து என்பது ஒலிவடிவினையே சுட்டும் என்னும் கருத்தினை நிலைநிறுத்துவது அறிய வேண்டியது. நூற்பாவில் சொல்லுங்

காலை என்னும் தொடர் ஒலிவடிவினைச் சுட்டுவதை அறிக. மேலும், தொல்காப்பியத்திறகுப் பின் எழுந்த எல்லா இலக்கண நூல்களும் இக் கருத்தினை ஏற்றே மொழிகின்றன.

**உந்தி முதலெழும் காற்றுப் பிறந்துஉர மும்சிரமும்**
**பந்தமலி கண்டமும் மூக்குமுற்று அண்ணம் பல்லுடனே**
**முந்து தமிழ்நா மொழிஉறுப் பாகும் முயற்சியினால்**
**வந்து நிகழும் எழுத்தென்று சொல்லுவர் வா ணுதலே (வீர. 6)**

**உந்தியில் தோன்றும் உதான வளிப்பிறந்து**
**கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து – வந்தபின் நா**
**ஆசில் அண்ணம் இதழ்எயிறு மூக்கெனப்**
**பேசும் எழுத்தின் பிறப்பு. (நேமி. 6)**

**நிறைஉயிர் முயற்சியின் உள்வளி துரப்ப**
**எழும்அணுத் திரள் உரம் கண்டம் உச்சி**
**மூக்குஉற்று இதழ்நாப் பல்அணத் தொழிலின்**
**வெவ்வேறு எழுத்தொலி யாய்வரல் பிறப்பே. (நன்.74)**

**……இதழ் மூக்கு அணம்பல்நா**
**ஐந்துதுணை இடத்தாம் அச்சரப் பிறப்பே (தொ.வி.எ.3)**

எனத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் ஒலிவடிவினையே எழுத்தெனக் கூறியுள்ளமை புலனாகும். இவ்வெழுத்து ஒலிவடிவாகத் தோன்றிப் பல காலம் கழிந்த பின்பே வரிவடிவம் பெற்றிருக்கும் என்பதும் புலனாகும். முதலில் தோன்றிய ஒலிவடிவிற்குப் பெயரில்லாது பின்னர்த் தோன்றிய வரி வடிவினுக்கு எழுத்தெனப் பெயரிட்டனர் எனக் கூறுவதும் ஏற்கவியலாத ஒன்று.

எழுத்து என்பது காரணப்பெயர். ஆனால் எழுதுதல் ஆகிய காரியம் கருதி வந்ததன்று. எழுப்புதலாகிய காரியத்தான் வந்தது என்க.

மேற்கூறியவற்றை யெல்லாம் தொகுத்துக் கூறுவதாயின்,

மொழிக்கு எழுத்தே அடிப்படை.

மொழி, சொல்,கிளவி என்பனவெல்லாம் ஒரு பொருள் நுதலிய பல சொற்கள்.

எழுத்து ஒலி, வரி ஆகிய இருவேறு வடிவங்களை உடையது.

ஒலி வடிவ எழுத்தே தொன்மையானது.

எழுப்புதலாகிய காரணம் பற்றி ஒலிவடிவ எழுத்திற்கு எழுத்து என்னும் பெயர் தோன்றிற்று.

ஆகுபெயராய் ஒலிவடிவின் குறியீடாகிய வரி வடிவத்திற்கும் எழுத்தென்றே பெயராயிற்று.

# பெயர்ச்சொல்

எழுத்து தன்னைச் சுட்டியும் வேறொரு பொருளைச் சுட்டியும் நிற்கும் நிலையும் உண்டு. ஆகாரம் தன்னைச் சுட்டுங்கால் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள இரண்டாம் எழுத்தொலியையும் பொருளைச் சுட்டுங்கால் பசுவினையும் உணர்த்துகின்றது. எல்லா எழுத்துக்களும் தன்னைச் சுட்டும் தன்மையனவாயினும் எல்லா எழுத்துக்களுமே பொருள்சுட்டி நிற்பதுமில்லை. தமிழில் ஓரெழுத்து ஒருமொழி என இலக்கணநூல் உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுவனவெல்லாம் தன்னைச் சுட்டியும் வேறொரு பொருளைச் சுட்டியும் நிற்பன. அத்தகு இருநிலை எழுத்துக்கள் நெட்டெழுத்துக்களாகவே உள்ளன. உயிர்மெய் எழுத்துக்களுள் நொ அனைய ஓரிரண்டு குற்றெழுத்துக்களையும் ஓரெழுத்து ஒருமொழி எனக் காட்டும் மரபு அவ் உரையாசிரியர்களிடம் உண்டு. உரையாசிரியர்களின் மேற்படி விளக்கங்களை உற்று நோக்கும் போது நெட்டெழுத்துக்கள் மட்டுமே ஓரெழுத்து ஒருமொழி என்னும் பண்பினைப் பெறுகின்றன என்பதும் உயிர்க்குறில்கள் ஓரெழுத்து ஒருமொழியாக வருவதில்லை என்பதும் உயிர்மெய் எழுத்துக்களுள் ஒருசில குறில்கள் ஓரெழுத்து ஒருமொழியாம் பண்பினைப் பெறுகின்றன என்பதும் ஆகிய கருத்துக்கள் புலனாகின்றன. ஆயின், இதுவே உண்மைநிலையும் இல்லை.

வினா, சுட்டு ஆகிய எழுத்துக்கள் ஒரெழுத்தாக நின்று பொருள்நிலை காட்டுவன. சுட்டாகிய மூன்றும் உயிர்க் குறில்களே. வினாவில் எகரம் உயிர்க்குறிலே. எஞ்சிய ஒகரம் மட்டுமே ஓரெழுத்தாம் பண்பினைப் பெறவில்லை. மேலும் நெட்டெழுத்துகள் குற்றொலிகளின் நீட்டல் விகாரமே. தொடக்கத்தில் நெட்டெழுத்துக்கள் உருவாவதற்கு முன்பு,அதன் இயல்பு வடிவங்கள் அஃதாவது அதனதன் குற்றெழுத்துக்களே ஓரெழுத்து மொழியாக வழங்கிப் பின்னர் அவ்வழக்கினாலேயே நெட்டெழுத்துக்கள் உருவாகி இருக்கலாம். இவற்றின் விளக்கங்களைச் சுட்டுப்பெயர், வினாப்பெயர் என்னும் தலைப்பின் கீழ் நோக்குவோம்.

மேலே கூறியவாறு எழுத்து தன்னையும் உணர்த்திப் பிறிதொன்றினையும் உணத்தும் தன்மையது என்பதனை அறியலாம். சொற்கள் அனைத்தும் தன்னையும் உணர்த்தி தன் பொருளையும் குறிக்கும். இதனையுணர்ந்தே தொல்காப்பியரும்,

**எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொல்.சொல்.152)**

எனக் குறிப்பிடுகிறார். இதற்கு உரைவகுத்த தெய்வச்சிலையார்,

“உலகத்தாரான் வழங்கப்பட்ட எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன – என்கிறார். பொருளின்றி வழங்கும் சொல் இல என்பதனை நுணுகி ஆய்கிறார். தனிமொழிக்கண் பொருளுணர்த்தும் சொற்களும் தொடர்மொழியாயுழி, உள்ள பொருளோடு அதன்கண் இல்லாத பொருணையும் உணர்த்தி நிற்கும். எல்லாச் சொல்லும் பொருள் குறித்து வருமாயின், அசைநிலை, இசைநிறை போன்றன பொருள் குறித்திலவெனின் அவையும் சார்ந்த பொருளைக் குறித்தனவாகின்றன.

சொல்லின் தன்மை ஆராயுமிடத்தும் சொல் தன்னையே குறித்து நிற்கிறது; சொற்பொருளின் தன்மை ஆராயு மிடத்துச் சொல் தன் பொருளைக் குறித்து நிற்கிறது. சொல்லின் தன்மை ஆராய்வார்க்கு **நிலம்** என்னும் சொல் பெயர்ச்சொல் என்றாயிற்று. சொற்பொருளின் தன்மை ஆராய்வார்க்கு **நிலம்** என்பது *மண்ணினால் இயன்றதோர் பூதம்* என்னும் பொருளைக் குறித்ததாயிற்று.

என விளக்குகிறார். இக் கருத்தினுக்குச் சான்று காட்டிய இளம்பூரணர்,

| | |
|---|---|
| **நீ** யென் கிளவி | (தொ. சொ. பெயரியல் 35) |
| **செய்**தென் எச்சம் | (தொ. சொ. வினையியல் 42) |
| **தஞ்சக்** கிளவி | (தொ. சொ. இடையியல் 18) |
| **கடி**யென் கிளவி | (தொ.சொ. உரியியல் 85) |

எனும் நூற்பாக்களில் இடம்பெறும் **நீ, செய், தஞ்சம், கடி** ஆகிய சொற்களுக்கான இலக்கண இயல்புகளைத் தொல்காப்பியர் குறித்துள்ள பான்மையை விளக்கியுள்ளார். இவ்விடங்களில் சொல் தன்னைக் குறிக்கும் பான்மையைப் புலப்படுத்தியுள்ளார்.

சொல்லின் வேறாகிய பொருட்தன்மையினைக் குறிக்குமிடத்து **மரம்** எனும் சொல்லினைச் சான்றாகக் காட்டலாம். மரம் என்றுரைத்ததும் மரத்தின் உரு, கிளை, இலை,காய், கனிகள் போன்றவற்றின் செறிவு உறுதி பற்றி எண்ணுவது மரம் என்னும் சொல்லினது பொருட் தன்மையவாகும். இவை கருதியே தொல்காப்பியனாரும்,

**பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்**
**சொல்லி னாகு மென்மனார் புலவர்** (தொல். சொல். 153)

எனச் சொல்லுக்கு இலக்கணம் வகுத்தனர்.

எழுத்துக்கள் தொடர்ந்து நின்று சொல்லாகும் தன்மையினைக் குறிப்பிடுங்கால் அச்சொல்லின் பொருள்நிலை நோக்கி அதனை நான்காக வகைப்படுத்தும் மரபு தமிழில் உண்டு. தொல்காப்பியர்,

**சொல்லெனப் படுப பெயரேவினை என்று**
**ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே (தொல். சொல். 155)**

என்றும்,

**இடைச்சொற் கிளவியும் உரிச்சொல் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப (தொல். சொல். 156)**

என்றும் நூற்பாக்கள் இயற்றி, மேற்சுட்டிய நான்கு வகைகளையும் குறிப்பிடுகின்றார். ஆயின், இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயராம் பண்பினைப் பெறுவன அல்ல எனக் கருதிய அவ்வாசிரியர் பெயரினையும் வினையினையும் சொல் வகைகளாகச் சுட்டி, அவ்வகைகளின் மருங்கு தோன்றுவனவாகவே இடையினையும் உரியினையும் சுட்டியமையால் சொல் பெயர்ச்சொல், வினைச்சொல் என இரு வகைக்குள் அடங்கும் என்னும் கருத்தினராய் நிற்றல் நுணுகி உணரத்தக்கது.

நன்னூலாரும் இக்கருத்தினரே. அவர்,

**அதுவே,**
**இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை**
**எனவிரண் டாகு மிடையுரி யடுத்து**
**நான்குமாந் திசைவட சொல்லணு காவழி.** (நன்.: 269)

என நூற்பாவமைத்து பெயர் வினை மருங்கு தோன்றுவனவே இடையும் உரியும் என்பதனை உணர்த்தியுள்ளார்.நன்னூலாரின் இச்சூத்திரத் திற்கு விளக்கம் கூறும் சங்கர நமச்சிவாயர்,

> இச்சொற்களை ஒருங்கு ஓதாது முறைதெரித்து ஓதியது என்னை யெனின்:– ஒருவன் ஒருத்தி என்ற மாத்திரையின் அவர் கை கால் முதலிய அகத்துறுப்பும் ஆடை அணி முதலிய புறத்துறுப்பும் அடங்குதல் போலப் பெயர் வினை என்ற மாத்திரையின் அவற்றின் அகத்துறுப்பாகிய விகுதி உருபு முதலிய இடைச் சொற்களும் புறத்துறுப்பாகிய வேற்றுமை யுருபு முதலிய இடைச்சொற்களும் அடங்குதலானும், உரிச்சொல் 'பல்வகைப் பண்பும் பகர்பெயராகி' (442) என்பவாகலின் பெயருள் அடங்குதலானும், திசைச் சொல்லும் வடசொல்லும் இவற்றுள் யாதானும் ஒன்றாய் அடங்குதலானும் இவற்றை

> அடக்கிநின்ற தலைமையும் சிறப்பும் தோன்றப், 'பெயர் வினை என இரண்டாகும்' என வரையறுத்தும், பெயர்வினைகளுள் அடங்கி நின்ற வற்றையே வேறுபாடு அறிதற்கு வேறுபடுத்துத் தொகை கோடலின் இடை உரிக்கு அத்தலைமையும் சிறப்பும் இன்றெனப்து தோன்ற, 'அடுத்து நான்குமாம்' என்றும், கொடுந்தமிழ் முதலிய சொல் செந்தமிழோடு விராயவழி அவற்றைத் 'திசைச்சொல்' என்றும் ஆரியச்சொல் தமிழ்நடை பெற்றுச் செந்தமிழோடு விராயவழி அதனை, 'வடசொல்' என்றும் தமிழோடு தழுவப்படுமாயினும் செந்தமிழ்ச் சொல்லோடு தொகைகோடல் ஒருதலை யன்று என்பது தோன்ற், 'அணுகாவழி' என்றும் முறை தெரித்தோதினார் என்க.

என்றும், அவர்தம் விருத்தியினுள் ஆங்காங்கே விளக்கமளித்துள்ள சிவஞான முனிவர்,

> இச்சொற்களைப் பெயர் முதலியவாக வைத்தது என்னையெனின்:- பெயர்ச்சொல் பொருளை விளக்குதலானும், வினைச்சொல் பொருளது புடை பெயர்ச்சியை விளக்குதலானும், இடைச்சொல் பொருளையும் பொருளது புடைபெயர்ச்சியையும் தம்மாலன்றித் தத்தம் குறிப்பான் விளக்குதலின் பெயர்ச்சொல் வினைச் சொற்களும் ஆகாது அவற்றின் வேறுமாகாது இடை நிகரனவாய் நிற்றலானும், உரிச்சொல் பொருட்பண்பாகிய இசை குறிப்பு பண்பு மூன்றனையும் விளக்கிப் பொருட்கு உரிமை பூண்டு நிற்றலானும், திசைச்சொல் கொடுந் தமிழ் மொழி யாயும் அன்னிய மொழியாயும் வருதலானும், வடசொல் அன்னிய மொழியேயாய் வருதலானும் இம்முறை வைக்கப்பட்டன என்க.

என்றும் விளக்குகிறார்.

> **'பொருளையும் தன்னையும் .... விரிப்பது சொல்லே'**[1]

> என விளக்கி யுரைத்தவர் சொல்லினது பொருண்மை நிலையை நன்கு விளக்கிக் கூறி, அதன் சொன்மை நிலையை இது முதலிய நூற்பாக்களால் விரித்துரைக் கின்றார். மொழிகள்தோறும் பெயர்ச் சொல்லும், வினைச் சொல்லுமே இருதிணை ஐம்பாற் பொருளையும் தம்மையும் முற்ற உணர்த்தும் உயிர் நிலைக் கருவாம் என்பது

> மொழிநூலார் கருத்து. இடை, உரிச் சொற்கள் அவ்வாறின்றி இலக்கணத் துணைகளாக அவற்றோடு வழங்குவனவேயாம். அக்கருத்தானே இவ்வாசிரியர்,
>
> **பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்**
> **தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்**
>
> எனவும், **பெயர்வினை ஒருவா ..... உரிச்சொல்,**
>
> எனவும் அவற்றின் இயல்பை உணர்த்தி நூற்பா செய்துள்ளார்.

என்பது மோசசு பொன்னையாவின் விளக்கமாகும்.

மேற்காட்டிய உரையாசிரியர்களின் விளக்கத்தான் சொல் பெயர் வினை என்ற இரு வகைகளையே உடையது என்பது தமிழ் இலக்கணிகளின் கருத்தாக உள்ளமையை நன்கு உணர்த்தும்.

இடையும் உரியும் பொருள்விளக்கம் தருவனவே ஆயினும் அவையிரண்டும் உருபு ஏற்றல் முதலான பெயருக்கான பண்புகளையோ கால இடைநிலைகளை ஏற்கும் வினைச்சொல்லுக்கான பண்புகளையோ பெறுவன அல்ல. சார்ந்துவரல் மரபு பற்றிக் குற்றிய லிகரம் முதலான எழுத்துக்களைச் சார்பெழுத்துக்கள் என எழுத்துக் களிலிருந்து பிரித்து ஓதியது போன்று, இடையையும் உரியையும் சொல்வகைகளிலிருந்து பிரித்து ஓதினார் என அறிதல் வேண்டும். எனவே, சொல் இருவகைப்படும் என்பதும் அவை பெயர்ச்சொல், வினைச்சொல் என வழங்கப்பெறும் என்பதும் தொல்லாசிரியர் முதலான எல்லா இலக்கணநூலாசிரியர்களது துணிபு.

## பெயர்ச்சொல்

சொல் வகைகளுள் ஒன்றான பெயர்ச்சொல் இலக்கணத்தைத் தொல்காப்பியர் நன்கு விளக்கியுள்ளார். அவர்,

> **பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா**
> **தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே (தொ.தொ.70)**
>
> **வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே**
> **கூறிய முறையின் உருபுநிலை திரியாது (தொ.எ. 116)**
>
> **ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப (தொ. சொ. 69)**
>
> **ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்ப்பொருள்**
> **வேற்றுமை........... (நன். 291)**

என்னும் நூற்பாக்களின் வழியே பெயர்ச்சொல் காலம் காட்டாது,

வேற்றுமை உருபு ஏற்கும், , தொழிற்படு பெயராய் அமையும், ஆகிய தன்மைகளைச் சுட்டுகிறார். காலம் காட்டும் தன்மையன வினைச் சொற்களே. ஆயினும், பெயர்ச்சொல் தன் வடிவில் திரிந்து நிற்கும் ஒரோவழி காலம் காட்டுவதும் உண்டு. அத்தகு சொற்களைத் தொல்லாசிரியர் தொல்காப்பியனார் **தொழிற்படு பெயர்** என்றார்.

தொல்காப்பியத்தைத் தழுவியும் தன்கால வழக்குகளைக் கூட்டியும் நன்னூல் இயற்றிய பவணந்தியார் தொழிற்படு பெயர் என்பதனை வினையாலணையும் பெயர் எனச் சுட்டிச் செல்கிறார். தொழிற்படு பெயர் என்னும் தொடர், வினையாலணையும் பெயர் என்னும் தொடரோடு பொருளமைதியில் ஒற்றுமை உடையது. பாடினான் –வினைமுற்று. பாடியவன் – வினையாலணையும் பெயர்.

பாடு என்னும் வினையடிச் சொல் பாடிய என்று செய்தென் வாய்ப்பாட்டினடியாய் விகாரமாகித் தன் மரபிற்கேற்ப அன் என்னும் ஆண்பால் விகுதி ஏற்றுப் பாடியவன் என நின்றதால் அவ்வினைச் சொல் ஏற்ற பால்விகுதியால் பெயர்ச்சொல்லாகத் தோற்றம் காட்டுகிறது. வினைச்சொல் பெயராகப் படுகிறது (அணைகிறது) . மேலும் இச்சொல் வேற்றுமை உருபேற்று நிற்கும்போதே வினை யாலணையும் பெயராக அறியப்படுகிறது. இவ்வாறு ஒரு வினைச்சொல் வினையாலணையும் பெயராக மாற்றம் பெறுவது குறித்து வினையாலணையும் பெயர் என்னும் தலைப்பினில் விரிவாக நோக்குவோம்.

தொல்காப்பியர்.

**பெயரெனப் படுபவை தெரியுங் காலை**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்குமோர் அன்ன வுரிமையும்**
**அம்மூ வுருபின தோன்ற லாறே** (தொல்.சொல்.160)

என்னும் நூற்பாவின் வழி பெயர்ச்சொல்லினை உயர்திணைப் பெயர், அஃறிணைப்பெயர், விரவுத்திணைப்பெயர் என மூன்றாக வகைப்படுத்திக் காட்டுகிறார். இந்நூற்பாவினைத் தொடர்ந்து அவர் கூறியுள்ள பெயர்க்கான பாகுபாட்டினைப் பின் வருமாறு சுட்டலாம்.:

| | |
|---|---|
| சுட்டுப் பெயர் | **அவன் இவன் உவன்** |
| தன்மைப்பெயர் | **யான், யாம், நாம்** |
| வினாப் பெயர் | **யாவன், யாவள்** |
| நிலப்பெயர் | **சோழியன்,அருவாளன்** |
| குடிப்பெயர் | **சேரன், சோழன், பாண்டியன்** |
| குழுப்பெயர் | **அவையத்தார், அத்திக்கோசத்தார்** |
| வினைப்பெயர் | **தச்சன், கொல்லன்** |

| | |
|---|---|
| உடைமைப்பெயர் | அம்பர் கிழான், பேரூர் கிழான் |
| பண்புப் பெயர் | கரியன், வெள்ளையன் |
| முறைப்பெயர் | தாய், தந்தை |
| சினைப் பெயர் | பெருங்காலன், முடவன் |
| திணைநிலைப் பெயர் | குறவன்,குறத்தி |
| இயற்பெயர் | வள்ளுவன், கம்பன் |
| முன்னிலைப் பெயர் | நீ, நீயிர் |
| விரவுப்பெயர் | சாத்தன், சாத்தி |
| ஆகுபெயர் | வெற்றிலை நட்டான் |

மேற்காட்டிய வகைபாடுகளை நோக்குங்கால் தொல்காப்பியர் பெயர்களைத் திணை, பால் அடிப்படையிலேயே வகைப்படுத்தி யுள்ளமை புலனாகும். தற்காலத்தவர் பெயர்களை மேலும் பல பிரிவுகளாகக் காட்டுவார். அப்பிரிவுகள் வருமாறு.:–

1) உயர்திணைப்பெயர்
2) அஃறிணைப்பெயர்
3) விரவுப்பெயர்
4) இளமைப்பெயர்
5) மகப்பெயர்
6) பிள்ளைப்பெயர்
6) அ) குழவிப்பெயர்
7) ஆண்பால்பெயர்
8) ஆடுஉத் திணைப்பெயர்
9) திணைநிலைப்பெயர்
10) பெண்பால் பெயர்
11) பெண்மை சுட்டிய பெயர்
12) இயற்பெயர்
13) சிறப்புப்பெயர்
14) துறைக் கிழமைப்பெயர்
15) சுட்டுப்பெயர்
16) வினாவின் பெயர்
17) விளிகொள்பெயர்
18) பண்புப்பெயர்

19) குடிப்பெயர்
20) உடைப்பெயர்
21) சினைப்பெயர்
22) சினைமுதற்பெயர்
23) தன்மைப் பெயர்
24) முன்னிலைப் பெயர்
25) படர்க்கைப்பெயர்
26) முறைப்பெயர்
27) கிளைப்பெயர்
28) குழுவின் பெயர்
29) ஆண்மை திரிந்த பெயர்
30) தன்மை திரிபெயர்
31) அளவுப் பெயர்
32) நிறைப்பெயர்
33) எண்ணுப்பெயர்
34) எண்ணியற்பெயர்
35) ஆடியல் பெயர்
36) உணவுப் பெயர்
37) திசைப்பெயர்
38) காயப்பெயர்
39) நாள்பெயர்
40) நிலப்பெயர்
41) பிண்டப்பெயர்
42) இடக்கர்ப்பெயர்
43) ஆகுபெயர்
44) மரப்பெயர்
45) தொழிற்பெயர்
46) தடுமாறு தொழிற்பெயர்
47) தெய்வஞ் சுட்டிய பெயர்
48) வினைப்பெயர்

என்பது அறிஞர் ச.வே.சுப்பிரமணியம் அவர்கள் காட்டும் வகைப்பாடாகும். என்றாலும் சுருக்கம் கருதி பெயர்ச்சொல் வகைப்பாட்டினைக் கீழ்வருமாறு அமைத்துக் கொள்ளலாம்.

1) சுட்டுப்பெயர்
2) வினாப்பெயர்
3) உயர்திணைப் பெயர்
   அ) ஆண்பாற்பெயர்
   ஆ) பெண்பாற்பெயர்
   இ) பலர்பால் பெயர்
4) அஃறிணைப்பெயர்
   அ) ஒருமைப்பெயர்
   ஆ) பன்மைப்பெயர்
5) விரவுப் பெயர்
6) முறைப் பெயர்
7) இடப் பெயர்
   அ) தன்மைப்பெயர்
   ஆ) முன்னிலைப்பெயர்
   இ) படர்க்கைப் பெயர்
8) பிற பெயர்கள்

இதுகாறும் கூறியவற்றான் பெயர்ச்சொல் காலம் காட்டாமை யன்ன மேற்கூறிய மூன்று தன்மைகள் உடையன என்பதும் ஒரோவழி காலம் காட்டும் என்பதும் அதன் வகைப்பாடும் புலனாகும்.

■

# சுட்டுப் பெயர்கள்

**அஇஉ அம்மூன்றும் சுட்டு** (தொல். எ.:31)

என்பது சுட்டினைக் குறித்துத் தொல்காப்பியர் கூறும் விதியாகும். இந் நூற்பாவிடத்துத் தொல்காப்பியர் சுட்டினை எழுத்தென்றோ சொல் லென்றோ சுட்டினார் அல்லர். நன்னூலாரும்,

**அஇஉம் முதல் தனிவரின் சுட்டே** (நன்.: 66)

என்றே குறித்தார். இவரும் சுட்டினை எழுத்து என்றோ சொல்லென்றோ சுட்டவில்லை. ஆயினும், பிற்காலத்தில் சுட்டெழுத்துக்கள் என வழங்கப் படுகின்றன. சுட்டு என்பது எழுத்தா? அன்றிச் சொல்லா? என்பது குறித்து நோக்குதல் அவசியம்.

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களின் வகையும் தொகையும் கூறும் நூன்மரபில் சுட்டுக் குறித்துத் தொல்காப்பியர் கூறியுள்ளமையான்,

**குற்றெழுத்து என்றவற்றுள் சிலவற்றிற்கு வேறோர்**
**குறியிடுதல்**

என நச்சினார்க்கினியரும்,

**குற்றெழுத்து எனப்பட்டவற்றுள் சிலவற்றிற்கு வேறோர்**
**குறியிடுதல் நுதலிற்று**

என இளம்பூரணரும் கூறியுள்ளமையானும் இவற்றினைச் சுட்டெழுத்து எனக் கருதியமை புலனாகும். ஆனால், தொல்காப்பியர் இவற்றினை எழுத்து எனக் கொள்ளாது சொல் என்றே நோக்கினார். அதனால்தான், அவர்,

**அவற்றுள்**
**அஇஉஎஒ என்னும்**
**அப்பாலைந்தும்**
**ஓரளபிசைக்கும் குற்றெழுத் தென்ப** (தொல். எழுத்து.: 3)

என்றும்,

**ஆஈஊ**
**ஏஐ**
**ஓஔ என்னும் அப்பால் ஏழும்**
**ஈரள பிசைக்கும் நெட்டெழுத்தென்ப** (தொல். எழுத்து.: 4)

என்றும்,

**வல்லெழுத்தென்ப கசடதபற** (தொல். எழுத்து.: 19)

**மெல் லெழுத்தென்ப ஙஞணநமன** (தொல். எழுத்து.: 20)

**இடையெழுத் தென்ப யரலவழள** (தொல். எழுத்து.: 21)

என்றும் கூறுமிடங்களிலெல்லாம் எழுத்து எனத் தெளிவுபடக் கூறியுள்ளமையும் சுட்டிற்கும் வினாவிற்கும் அவ்வாறு எழுத்து எனக் கூறாமையும் நோக்க, தொல்காப்பியர் சுட்டு எழுத்து என்னும் கோட்பாட்டிலர்: சுட்டு, சொல் என்னும் கருத்தினர் என்பது புலனாகும். மேலும் தொல்காப்பியரே உயிர் மயங்கியலில்,

**சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்**
**ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்** (தொல்.எழுத்து.: 206)

என்றும்

**சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே** (தொல்.எழுத்து. 239)

என்றும்

**சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும்** (தொல்.எழுத்து.: 256)

என்றும் நூற்பாக்களை வகுத்து முறையே அகரச் சுட்டினையும் இகரச் சுட்டினையும் உகரச் சுட்டினையும் நிலைமொழியாகக் கொண்டு வருமொழியின் புணர்ச்சி நிலையினைக் கூறியுள்ளமையானும் சுட்டினைச் சொல்லாகக் கருதியமை அறிதற்பாலதாம். ஏனெனின், புணர்ச்சிநிலை இரு சொற்களுக்கிடையே நிகழ்தலே இலக்கணமரபு அன்றி எழுத்திடைக் கூறுதல் மரபன்றாம். மேலும்,

**தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிற பொருளைச்**
**சுட்டுதற் கண்ணேயாம் சொல்**

எதைக பழஞ் சூத்திரம் கூறுதலாலும் எழுத்து தன்னை உணர்த்துங்கால் எழுத்தாயும் பிற பொருளைச் சுட்டுங்கால் சொல்லாயும் நிற்கும் பெற்றியது என்பது புலனாகும். ஆகத், தொல்காப்பியனாரும் நன்னூலாரும் சுட்டினை எழுத்து எனக் கருதாது சொல் எனக் கருதினர் என்பதே பொருந்தும் முறை என்க.

அகர இகர உகரங்களாகிய மூவகைச் சுட்டுகளில் அகரம் சேய்மைப் பொருளையும் இகரம் அண்மைப் பொருளையும் உகரம் இடைமைப் பொருளையும் தரும் என்பது தமிழ் இலக்கண உலகில் வழங்கி வரும் பொதுவான கருத்தாகும். ஆனால், உகரம் இடைமைப் பொருளைச் சுட்டும் என்னும் கருத்து ஏற்புடைதன்று. அண்மையைச் சுட்டுங்கால் கருத்து மயக்கம் வருவதற்கு வழியில்லை. ஆயின், சேய்மையைச் சுட்டுங்கால் மயக்கம் வரும். கட்புலன் ஆகும் தூரத்தில் உள்ளதும் சேய்மை. கட்புலன்

ஆகாத் தூரத்தில் உள்ளதும் சேய்மை. கட்புலன் ஆகுவதையும் ஆகாததையும் ஒரே சொல்லால் சுட்டுவது மயக்கம் தரும். ஆதலான், கட்புலன் ஆகும் சேய்மையை உகரச் சுட்டாலும் கட்புலன் ஆகாச் சேய்மையை அகரச் சுட்டாலும் பழந்தமிழர் சுட்டினர் என்று கோடலே பொருந்தும். அகர இகரச் சுட்டுக்களைப் போன்று உகரச்சுட்டுப் பயின்று வரும் இடங்கள் சங்க இலக்கியத்தில் அருகியே காணப்படுகின்றன.

**உதுக்காண் தோழி வம்ப மாரி**

என்னும் தொடர் உகரச்சுட்டுப் பெற்றுவரும் சங்கப்பாடல் தொடராகும். இத்தொடரை உகரச் சுட்டிற்குப் பழைய இலக்கண உரையாசிரியர்கள் மேற்கோளாகக் கொண்டுள்ளனர். இத்தொடரிலேயே கட்புலன் ஆகும் **வம்ப மாரி** உகரச்சுட்டால் சுட்டப்பெறும் தன்மை எண்ணி இன்புறத் தக்கது.

பிற்காலத்தில் **உம்பர்** என்னும் சொல்லாட்சியும் தமிழில் தோன்றியது. இதற்கு இணையாக இம்பர், அம்பர் ஆகிய சொற்களும் ஆக்கம் பெற்று வழங்கப்பட்டன. உம்பர் என்னும் சொல் கட்புலன் ஆகும் பொருளையே சுட்டுகிறது எனலாம். எவ்வாறோ எனின், இவ்வுலகத்தில் வாழ்வோரை இம்பர் என்றும் உள்பொருட்களை யெல்லாம் படைத்து ஆளும் இறைவனை அம்பர் என்றும் வழங்கி, இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வநிலைக்கு உயர்த்தப் பெற்றோர் உம்பர் என்னும் சொல்லால் சுட்டியமையால் உம்பர் என்னும் சொல்லினது உகரமும் கட்புலன் ஆவோரையே குறித்தது என்பது அறிதற் பாலதாம்.

அண்மைக்கு ஒரு சுட்டுச்சொல்லே உள்ளது போன்று சேய்மைக்கும் ஒன்றே போதும் என்ற கருத்தால் உகரச் சுட்டுப் பிற்காலத்தில் விழுந்தது; அகரம் மட்டுமே நின்றது. ஆதலின் வழக்கற்றுப் போன உகரத்தை இடைமைச் சுட்டு எனக் கருதுதல் அடாது. **அது கட்புலனாகும் சேய்மைத்தாம்** என்பதே உண்மை.

இனி, அவன் இவன் உவன், அவள், இவள், உவள், அவர், இவர், உவர் ஆகிய சுட்டுப் பெயர்கள் ஒரு சொல் நீர்மைத்தா? பல சொல் கூட்டா? என்பதும் நோக்குதல் வேண்டும். அவன் முதலாகிய சொற்களைக் கீழ்வருமாறு பகுக்கலாம்:

**அ + அன்**
**இ + அன்**
**உ + அன்**

**அ + அள்**
**இ + அள்**
**உ + அள்**

**அ + அர்**

**இ + அர்**

**உ + அர்**

மேலே காட்டப்பட்டுள்ள பகுப்பிலக்கணப்படி நிலைமொழிகளாக நிற்கும் அகர இகர உகரங்களுக்கும் வருமொழிகளாக வந்து புணர்ந்த அன், அள், அர் ஆகிய பால் விகுதிகளுக்கும் இடையில் வகர ஒற்று வந்துள்ளமை அறிதல் வேண்டும்.

இவ்வாறு கொள்ளுங்கால் ஓர் ஐயம் தோன்றவே செய்யும். அது,

**இஈ ஐவழி யவ்வு மேனை**
**உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்**
**உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்** (நன்.: 161)

என்னும் நன்னூலாரின் விதிப்படி இகரச் சுட்டுப் பால் விகுதியை ஏற்குங்கால் இடையே எகர உடம்படுமெய்யே வருமெனின்

**இ + ய் + அன் = இயன்**

என வரும். இவ்வாறே **இயன், இயள், இயர்** என்றே அமையும். ஆனால் வகர உடம்படுமெய் எவ்வாறு வந்துள்ளது என்பதே அவ் ஐயமாகும்.

**எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
**உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்**

(தொல். எழுத்து.:–140)

என்னும் தொல்காப்பிய நூற்பா தொல்காப்பியர் காலத்தில் உடம்படு மெய் வரும் வழக்கு நிலைப்புப் பெறவில்லை என்பதனைச் சுட்டும். இங்கு மற்றொரு கருத்தும் கூறவேண்டுவது இன்றியமையாதது. உடம்படு மெய்யை உணர்த்தும் நன்னூல் நூற்பா தொல்காப்பியத்தில் கூறப்படாத கருத்துப் பொதிவினை உடையது என்னும் கருத்துப் பரவலாக உள்ளது. இதுவும் ஏற்புடைய கருத்தன்று. மேலே இவன், இவள், இவர் முதலான இகரச் சுட்டுக்கள் உயிர் முதலாகவுடைய பால் விகுதிகளை ஏற்குங்கால் இடையே வகர ஒற்று வரும் என்பதனை,

**சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்**
**ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்** (தொல். எழுத்து.: 206)

என்னும் நூற்பாவின் வழி சுட்டெழுத்துக்கள் ஞகர நகர மகர எழுத்துக்களை முதலாக உடைய சொற்களோடு புணரும்போது அவ்வவ் வெழுத்துக்கள் மிகுதல் வேண்டும் எனக் கூறி, யகரமும் வகரமும் மொழி முதலாகவுடைய சொற்கள் புணரும்போது வகர ஒற்று வரும் என்பதனை

**யவமுன் வரினே வகரம் ஒற்றும்** (தொல். எழுத்து.: 207

என்னும் நூற்பாவால் விளக்குகிறார். அஃதாவது, அ + யாழ் = வகர ஒற்றுப் பெற்று அவ்யாழ் என வந்தது. அவ்வாறே அவ்வளை அவ்வரகு இவ் யானை, இவ்,வீடு என்பது போன்று வரும். பின்னர்,

**உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது** (தொல்.எழுத்து.:207)

என்னும் நூற்பாவில் சுட்டின் முன்னர் உயிர் முதலாக வரும் சொல் வருமொழியாக வந்து புணரும்போது இடையே வகர ஒற்று வரும் என்பதனை விளக்குகிறார். நன்னூலார் கூறியவாறு இகரச்சுட்டு உயிர்முதல் வருமொழியோடு புணரும்போது யகரம் ஒற்றும் என்னும் கோட்பாடு பொருந்தாமையையும், தொல்காப்பியர் கூறியுள்ளவாறே அச் சொற்கள் வகர ஒற்றினை இடையே பெறும் புணர்கூட்டு நிலையைக் கொண்டுள்ளமையை அறிதல் வேண்டும். ஆதலின் சுட்டுப் பெயர்கள் பின்வருமாறு பகுக்கப்படுதல் வேண்டும்:

**1) உயர்திணைப் பெயர்கள்**

| | |
|---|---|
| அ +வ் + அன் = | அவன் |
| இ + வ் +அன் = | இவன் |
| உ + வ் + அன் = | உவன் |
| அ + வ் +அள் = | அவள் |
| இ + வ் +அள் = | இவள் |
| உ + வ் + அள் = | உவள் |
| அ + வ் + அர் = | அவர் |
| இ + வ் +அர் = | இவர் |
| உ + வ் + அர் = | உவர் |

**2) அஃறிணைப் பெயர்கள்**

**அ) ஒருமை**

| | |
|---|---|
| அ + து = | அது |
| இ + து = | இது |
| உ+ து = | உது |

**ஆ) பன்மை**

| | |
|---|---|
| அ + வ் + ஐ = | அவை |
| இ + வ் + ஐ = | இவை |
| உ + வ் + ஐ = | உவை |

சுட்டுப்பெயர்களில் இருவகையினை உரையாசிரியர்கள் காட்டுகின்றனர். அவை **அகச்சுட்டு, புறச்சுட்டு** என்கின்றனர். நன்னூலின் முதல் உரையாசிரியரான மயிலைநாதர் இவ் வகைப் பாட்டினைக் காட்டவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றோரும், இவ்வகைப் பாட்டினைக் கூறவில்லை. நன்னூலினை முதன்முதலில் உரையோடு அச்சேற்றிய விசாகப் பெருமாளையர் அந்நூலுக்கான காண்டிகை யுரையில் இவ் வகைப் பாட்டினைக் கூறுகின்றார். இவருக்கு முன்னர் விருத்தியுரை கண்ட சங்கர நமச்சிவாயர் சுட்டு அகத்தும் புறத்தும் என்று கூறி அகச்சுட்டாகவும் புறச்சுட்டாகவும் வருமென்று முன்மொழிகிறார். சுட்டினை எழுத்து நிலையாகக் கொள்ளும் போது அகம் புறம் என்ற வேறுபாடு வருகின்றது. சொல் நிலையாகக் கொள்ளின் அகம் என்ற பாகுபாடு வர வாய்ப்பு இல்லை. சான்றாக மேலே எடுத்துக்காட்டிய அவன் இவன் உவன் முதலான சொற்கள் அகர இகர உகர சுட்டெழுத்துக்களோடு பால் விருதிகள் இயைந்தன என்று கொள்ளும்போது அவை அகச் சுட்டு என்பது பொருந்தும். ஆனால் அகர இகர உகரங்கள் சுட்டுச்சொற்கள் என்னும்போது அகச்சுட்டு என்கிற வழக்கு பொருந்தாமை காணல் வேண்டும். சுருங்கக் கூறுவதாயின் சுட்டில் **அகச்சுட்டு என வருவதற்கு வாய்ப்பில்லை.**

## சுட்டுத் திரிபுகள்

சுட்டுகள் நீண்டு ஒலிக்கும் நிலையும் உண்டு. அகரச்சுட்டு ஆகாரமாய்த் திரிந்தும் இகரம் ஈகாரமாகவும் உகரம் ஊகாரமாகவும் திரிந்து நிற்றலும் செய்யுளில் உண்டு.

அ + இடை – மேலே சொன்ன விளக்கத்தின்படி இடையில் வகரம் வந்து அவ்விடை என அமைதல் வேண்டும். ஆனால் யகரம் வந்து சுட்டு நீண்டு ஆயிடை என அமைகிறது. இதற்குக் காரணம் இடை என்னும் சொல்லின் இகரம் உயிர் ஒலியாக ஒலிக்காமல் யகர மெய்யோடு கூடிய இகர ஒலியாக ஒலிக்கிறது. இடையில் நின்றது உடம்படுமெய்யல்ல. இதைப் போன்றே ஆங்கு, ஈங்கு, ஊங்கு எனும் சொற்களும் அவண், இவண், உவண் ஆகிய சொற்களும் திரிபு நிலையில் ஆக்கம் பெற்ற புதிய சுட்டுப்பெயர்கள் ஆகும். ஆயிடை நோக்கி ஆங்கு போன்றனவும் உருவாக்கப் பெற்றுள்ளன. அந்த, இந்த, உந்த முதலான பெயரெச்சச் சொற்களும் பிற்கால உருவாக்கங்களே. இவ்வாறு சுட்டுப்பெயர்கள் திரிபு நிலையில் பற்பலவாக உருவாக்கப் பெற்றாலும் அவை யெல்லாம் உணர்த்தும் பொருள் ஒன்றே யாதலால் இப்புத்தாக்கச் சொற்களால் எவ்விதமான மயக்கங்களும் உண்டாவதில்லை. மொழி காலத் தேவைக்கேற்ப விரிந்தும் சுருங்கியும் திரிந்தும் நிற்கும் இயல்பினை யுடையது. இவ்வியல்பினுக்கேற்ப

சுட்டுப்பெயர்களும் காலந்தோறும் பல்வேறு திரிபு நிலைகளை ஏற்று நிற்பதில் வியப்பொன்றுமிலை.

திராவிட மொழிகள் எனத் தற்கால மொழியியலறிஞர்கள் குறிப்பிட்டுக் காட்டும் தமிழ்மொழியினது இணைமொழிகளான தெலுங்கு, மலையாளம் முதலான மொழிகளிலும் சுட்டெழுத்துக்கள் உண்டு. கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளில் அகர இகரச் சுட்டுக்கள் இல்லை. அங்கு *சர்வநாமம்* என வழங்கப்படும் ஆ, ஈ என்னும் சுட்டுக்களே உண்டு. ஊ கன்னடமொழியில் சுட்டாக வழங்கப் பெறுகிறது. பொதுவாக நோக்குங்கால் தமிழ்ச் சுட்டெழுத்துக்களின் மாறுபட்ட வடிவங்களே கன்னடம் முதலான திராவிட மொழிகளில் காணப்படுகின்றன எனக் கூறத் தோன்றும். ஆதலினால் அம்மொழி களில் வழங்கும் சுட்டுக்களே தொன்மை வடிவங்களோ எனக் கருதுவும் தோன்றும். ஆனால், அம்மொழிகள் இலக்கிய வளம் பெறும் முன்னரே தமிழில் ஆகார ஈகார ஊகாரச் சுட்டுப் பெயர்கள் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமையை இவண் குறிப்பிட வேண்டும்.மேலும், குற்றெழுத்தின் விகாரங்களே நெட்டெழுத்தாதலால் அகர இகர உகரமே பழமையான சொல் வடிவம் என்பதும் ஆகார ஈகார ஊகாரங்கள் பிற்காலப் புதிய ஆக்கங்கள் என்பதும் போதரும். எனின். திராவிடமொழிகளில் தமிழ்மொழியில் காணப்பெறும் சுட்டுப்பெயர் வடிவங்களே இயல்பானதும் தொன்மையானதும் என்க.

■

# வினாப் பெயர்

**ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா** (தொல். எழுத்து.: 32)

ஆகாரம் ஏகாரம் ஓகாரம் ஆகிய இம்மூன்றும் வினாப் பொருளைத் தரும் என்பது தொல்காப்பியர் கருத்து. இம் மூன்றும் சொல்லின் ஈற்றில் நின்று வினாப்பொருளைத் தரும். உருபியல் மூன்றாவது நூற்பாவில் யாகார வினாவினையும் தொல்காப்பியர் சுட்டுகிறார். ஆகத், தொல்காப்பியர் மொழிமுதல் வினா எழுத்தாக யாகாரத்தை மட்டுமே சுட்டினார் என்பது போதரும் . ஆனால், நன்னூலார் தொல்காப்பியரின் வினாக் கோட்பாட்டில் முரண்படுகிறார். அவர்,

**எயா முதலும் ஆ ஓ வீற்றும்**
**ஏயிரு வழியும் வினாவா கும்மே** (நன்.:– 66)

என்னும் நூற்பாவில், எகரமும் யாகாரமும் மொழியின் முதலில் நின்றும் ஆகாரமும் ஓகாரமும் ஈற்றில் நின்றும் ஏகாரம் மொழிமுதல் ஈறு ஆகிய இரு இடங்களில் நின்றும் வினாப்பொருள் தரும் என விளக்குகிறார். இவ்விரு ஆசிரியர்கள் வினா குறித்துக் கூறியுள்ளவற்றைக் கீழ்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.:–

| வினா | மொழிநிலை | |
|---|---|---|
| | தொல்காப்பியர் கருத்து | நன்னூலார் கருத்து |
| ஆ | மொழியீறு | மொழியீறு |
| ஏ | மொழியீறு | முதலும் ஈறும் |
| ஓ | மொழியீறு | மொழியீறு |
| எ | குறிப்பிடவில்லை | மொழிமுதல் |
| யா | மொழிமுதல் | மொழிமுதல் |
| எவன் | அஃறிணை இருபால்களுக்கும் உரியது | |

மேற்காட்டிய அட்டவணையின்படி தொல்காப்பியர் குறிப்பிடாத எகரம் வினாப்பொருள் தருமென நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆனால்,

**சுட்டு முதலாகிய இகர இறுதியும்**
**எகரமுதல் வினாவின் இகர இறுதியும்**
**சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்**
**யாவென் வினாவின் ஆயென் இறுதியும்**
**வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவுஞ்**
**சொல்லியல் மருங்கின் உளவென மொழிப** (தொல். எழுத்து.: 159)

என்னும் நூற்பாவில் எகர முதலாகவுடைய இகர ஈற்றுச்சொல் வினாப்பொருள் தரும் என்கிறார். இதற்கு உரையாசிரியர்கள், **எதோளிக் கொண்டான்** என்னும் தொடரினைச் சான்றாகக் காட்டி எகர முதலும் இகர ஈறும் உடைய வினாச்சொல்லாக **எதோளி** என்ற சொல்லைக் குறிப்பிடுகின்றனர். இச்சொல் தற்காலத்தில் வழக்கற்றுப் போயிற்று.

தொல்காப்பியர்,

**யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்**
**அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்**

(தொல். எழுத்து.: **31)**

என்னும் நூற்பாவில் எவன் என்னும் எகர முதலான எவன் என்னும் வினாப்பெயரைச் சுட்டுகிறார். ஆனால் அவர், எவன் என்னும் எகர முதல் வினாப்பெயர் அஃறிணைக்கு உரிய இருபால்களுக்கும் உரித்து என்னும் கோட்பாட்டினை உடையவர்.

**அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்**
**ஒக்கும் என்ப எவனென் வினாவே** (தொல். சொல்.: 219)

என்னும் தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பா அஃறிணை ஒருமைப் பன்மைப் பால்களுக்குரியதாக **எவன்** என்னும் வினாவினைச் சுட்டுகிறது.

எவன் அது – அஃறிணை ஒருமை

எவன் அவை – அஃறிணை பன்மை

என எவன் என்னும் வினா வரும். ஆதலின் தொல்காப்பியர் காலத்தில் எகர வினா உயர்திணைக்கு வாராது என்பது புலனாகிறது. பிற்காலத்தில் எவன் என்னும் வினா உயர்திணைக்கு உரியதாக அமைந்தது.

அஃறிணைக்குரிய எவன் என்னும் சொல் உயர்திணைக்கு மாற்றப்பட்ட பிறகு ஒப்புமையாக்க நிலையில் எதன் என்னும் சொல் உருவாக்கப் பெற்று அஃறிணைக்கு உரிமைப்படுத்தப்பட்டது. ஆயினும் எவன் போன்று அஃறிணை ஒருமைக்கு எதன் என்னும் சொல் பயன்படுத்தப் படுவதில்லை. பன்மைக்குப் பயன்படுத்தப்படுகிறது. அடுத்த நிலையில் இதே ஒப்புமையாக்கக் கோட்பாட்டின்படி எத்துணை என்னும் சொல் அஃறிணைப் பன்மைக்குரிய வினாவாக வழங்கப்பெற்று வருகிறது.

எத்தனை என்பது எண் அளவில் அறியப்பெறும் தொகையைக் கிளக்கும் வினாப் பெயராகவும் எத்துணை என்பது எண் அளவில் அறிய இயலாத் தொகையினைக் கிளத்துவதற்குரிய வினாக்கிளவியாகவும் வழங்கப் பெறுகிறது.

எதன் கருதி வந்தாய்?

எத்தனைப் பூக்கள்?

எத்துணை இறை உணர்வு?

மேற்சுட்டிய வினாப்பெயர்களைப் போன்று உருவாக்கப்பெற்ற மற்றொரு வினாப்பெயர் எவற்றை என்பதாகும். சுட்டுப் பெயர்கள் வற்றுச் சாரியை பெறுதல் உண்டு.

**சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி**
**வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே** (தொல்.எழுத்து.: 177)

என்னும் நூற்பாவில் ஐகார ஈற்று அகர இகர உகரங்களான அவை இவை உவை என்பன வற்றுச் சாரியை பெற்று வருதலும் உண்டு என்றதனால் அவற்றை இவற்றை உவற்றை என்னும் சொற்கள் பயன்பாட்டில் உள்ளன என்பதனைப் புலப்படுத்தி,

**யாவென் வினாவின் ஐயென் இறுதியும்**
**ஆயியல் திரியா தென்மனார் புலவர்**
**ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே** (தொல். எழுத்து.: 178)

என்னும் நூற்பாவால் யாவற்றை என்னும் வினாப்பெயரையும் அவர் சுட்டுகிறார். பிற்காலத்தில் தொல்காப்பியர் சுட்டாத எகர வினா சுட்டப்பெற்ற பின் சுட்டிற்கும் யாவென் வினாவிற்கும் தொல்காப்பியர் கூறிய வற்றுச் சாரியையை எகரத்திற்கும் புணர்த்தி எவற்றை என்னும் சொல்லாக்கம் செய்யப்பெற்றது.

எவன் என்னும் சொல் எ+ வ் + அன் எனப் பகுக்கப் பெறுமாதலால் ஈற்று அன் விகுதி நோக்கி அது உயர்திணை ஆண்பாலிற்கு உரிமைப்படுத்தப் பெற்றது. அவ்வாறே, ஒப்புமையாக்க நிலையில் பிற பால் விகுதிகளையும் ஒட்டி ஐம்பால்களுக்கும் உரிய வினாப்பெயர்கள் ஆக்கப் பெற்றன. ஒப்புமையாக்க நிலையில் உருவாக்கப் பெற்றுள்ள ஐம்பால்களுக்கான வினாப்பெயர்கள் பின்வருமாறு பகுக்கப் பெறும்:

**உயர்திணை**

| | | |
|---|---|---|
| எ + வ் + அன் | = | எவன் |
| எ + வ் + அள் | = | எவள் |
| எ + வ் + அர் | = | எவர் |

**அஃறிணை**

| | | |
|---|---|---|
| எ + து | = | எது |
| எ + வ் + ஐ | = | எவை |

இவ்வாறு உருவாக்கப் பெற்று வழக்கில் ஏறிய எகர வினாப் பெயர்களைக் கருத்தில் கொண்டே நன்னூலார் எகரத்தையும் வினாவாகக் கூறினார்.

சுட்டுப் பெயர் ஒப்புமையாக்க நிலையில் பல்வேறு வகைத்தான சுட்டுப் பெயர்களாக உருவாக்கப் பெற்று வழங்கப்பெறும் திறன் முன்னர் விளக்கப்பட்டது. அது போன்றே வினாப்பெயரும் ஒப்புமையாக்க நிலையில் பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்பெற்று வழங்கப்பட்டு வருகின்றன. அப்பெயர்கள் வருமாறு:–

எப்படி நிகழ்த்தினான்?
எப்படி நிகழ்த்தினாள்?
எப்படி நிகழ்த்தினர்?
எப்படி நிகழ்ந்தது?
எப்படி நிகழ்ந்தன?

இவ்வாறே பிறபிற ஆக்க வினாப்பெயர்களும் திணை, பால் வேறுபாடின்றிப் பயன்படுத்தப் பெறுகின்றன.

| | |
|---|---|
| எதற்கு | எதற்கு வந்தான்?<br>எதற்கு வந்தாள்?<br>எதற்கு வந்தனர்?<br>எதற்கு வந்தது?<br>எதற்கு வந்தன? |
| எங்ஙனம் | எங்ஙனம் வந்தான்?<br>எங்ஙனம் வந்தாள்?<br>எங்ஙனம் வந்தனர்?<br>எங்ஙனம் வந்தது?<br>எங்ஙனம் வந்தன? |
| எவ்வாறு | எவ்வாறு வந்தான்?<br>எவ்வாறு வந்தாள்?<br>எவ்வாறு வந்தனர்?<br>எவ்வாறு வந்தது?<br>எவ்வாறு வந்தன? |

| | |
|---|---|
| எங்கு | எங்கு வந்தான்?<br>எங்கு வந்தாள்?<br>எங்கு வந்தார்?<br>எங்கு வந்தது?<br>எங்கு வந்தன? |
| எதன் (கருதி) | எதன் (கருதி) வந்தான்?<br>எதன் (கருதி) வந்தாள்?<br>எதன் (கருதி) வந்தார்?<br>எதன் (கருதி) வந்தது?<br>எதன் (கருதி) வந்தன? |
| எத்தனை | எத்தனை தந்தான்?<br>எத்தனை தந்தாள்?<br>எத்தனை தந்தனர்?<br>எத்தனை தந்தது?<br>எத்தனை தந்தன? |
| எத்துணை | எத்துணைத் தந்தான் ?<br>எத்துணைத் தந்தாள் ?<br>எத்துணைத் தந்தனர் ?<br>எத்துணைத் தந்தது?<br>எத்துணைத் தந்தன? |
| என்று | என்று வந்தான்?<br>என்று வந்தாள்?<br>என்று வந்தனர்?<br>என்று வந்தது?<br>என்று வந்தன? |
| எவ்வளவு | எவ்வளவு தந்தான் ?<br>எவ்வளவு தந்தாள் ?<br>எவ்வளவு தந்தனர் ?<br>எவ்வளவு தந்தது?<br>எவ்வளவு தந்தன? |
| எந்த | எந்தப் பையன்<br>எந்தப் பெண்<br>எந்த இனத்தார்<br>எந்த மாடு<br>எந்த மந்தை |

# யாகார வினா

யாகாரத்தை வினா அடியாகத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

**யாவென் வினாவின் ஐயென் இறுதியும் (தொல். எழுத்து.: 159)**

**பலரறி சொன்முன் யாவ ரென்னும்**
**பெயரிடை வகரங் கெடுதலும் ஏனை**
**ஒன்றறி சொன்முன் யாதென் வினாவிடை**
**ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்**
**மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே (தொல். எழுத்து.: 172)**

**யாதெவ னென்னு மாயிரு கிளவியும்**
**அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்**
**(தொல். சொல்.: 31)**

**அவற்றுள்**
**யாதென வரூஉம் வினாவின் கிளவி**
**அறிந்த பொருள்வயின் ஐயந்தீர் தற்குத்**
**தெரிந்த கிளவி யாதலு முரித்தே. (தொல். சொல்.: 32)**

என்னும் நூற்பாக்களின்வழி யா என்னும் வினா அடி பால் விகுதிகளை ஏற்று உயர்திணை அஃறிணை ஆகியனவற்றிற்குரிய ஐம்பால்களுக்கும் வினாப் பொருளைக் கிளத்தும் என்பது புலனாகிறது.

யா – வினா அடியே வினாப்பொருளில் வந்துள்ளமையை உரையாசிரியர்கள்,

**யா பன்னிருவர் மாணாக்கர் அகத்தியனார்க்கு**

என்னுந் தொடரைக் காட்டி விளக்குவர் . இன்று யா தனியாக நின்று வினாப்பெருளைத் தருவதில்லை. அது பால் விகுதிகளை ஏற்ற நிலையிலேயே வினாப்பெயராக அமைகிறது.

**யாவர்**

**யாது**

**யாவை**

**யாவன்**

**யாவள்**

ஆகிய ஆறு நிலைகளில் யாகாரம் வினாவாக அமைகின்றது.

சுட்டுப் போன்று வற்றுச் சாரியை பெற்றுத் தொடர்நிலை மொழியாக வினாப் பொருளைக் கிளத்துவதே யாகாரத்தின் பண்பாகக் காணப்படுகிறது.

யா + வற்று + ஐ = யாவற்றை

யாவை + வற்று + ஐ = யாவையற்றை

வற்றுச் சாரியை போன்றே யாவாகிய வினாப்பெயர் அன் என்னும் சாரியையினையும் ஏற்கும் இடமும் உண்டு.

**யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய**
**ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்**
**ஆய்தங் கெடுதல் ஆவயி னான (தொல். எழுத்து.:– 200)**

என்னும் நூற்பாவினால் யாது என்னும் சொல் உருபு ஏற்குங்கால் இடையே அன் சாரியை பெறும் என்பது புலனாகிறது.

யாது + அன் + ஐ = யாதனை

அர் என்னும் பலர்பால் ஈறு, யா என்னும் வினா அடியோடு சேர்ந்து யாஅர் என்னும் வினாப் பெயரை உருவாக்குகிறது. பிற்காலத்தில் யகரம் அகரமாகத் திரியும் நிலையில் யார் என்பது ஆர் என மருவி வினாப் பொருளைத் தரும் சொல்லாக வழங்கிற்று. யாகாரத்தைப் போன்றே ஒப்புமையாக்க நிலையில் ஏகாரமும் வினா அடியாக நின்று பால் விகுதிகளை ஏற்றுக் கூட்டு வடிவாய் அமைந்து பல வினாப் பெயர்களை உருவாக்கித் தந்துள்ளது.

ஏவன்

ஏவள்

ஏவர்

ஏது

ஏவை

என வரும் வினாப் பெயர்கள் மேற்கூறிய ஒப்புமையாக்க நிலையில் உருப்பெற்றன. என் என்னும் வினாப்பெயர் முதல் நீண்டு ஏன் என்னும் வினாப் பெயராக உருவாயிற்று. ஆயினும் என் என்னும் சொல்லும் ஏன் என்னும் சொல்லும் ஒரே பொருளைத் தரும் வினாப் பொருளைத் தருவதில்லை. என் – என்ன என்ற பொருளையும் ஏன் – எதற்காக என்னும் வினாப் பொருளையும் தருகின்றன. என்ன என்பதின் கடைக்குறையாக என் எனக் சொள்ளலாமோ எனின் என் என்னும் பெயரே இலக்கண ஆசிரியர்களால் சுட்டப் பெற்றுள்ளது. எனவே என் என்பதின் மருவுச் சொல்லாக என்ன என்பது வழக்கத்திற்கு வந்துள்ளது எனக் கருதுவது பிழையாகாது.

சுட்டெழுத்து முதல் நீளும் என்பது தொல்காப்பியர் சுட்டிக் காட்டும் ஒரு கோட்பாடாகும். அங்கு என்பது ஆங்கு எனவும் இங்கு என்பது ஈங்கு எனவும் முதல் நீளுவது முன்னரே விளக்கப்பட்டது. அவ்வாறே வினா எழுத்தக்களில் குற்றெழுத்தான எகரம் நீண்டு ஏகாரமாகி

எது – ஏது

எவை – ஏவை

ஆகிய வினா வடிவங்களை உருவாக்கிற்று.

**சுட்டுமுதலாகிய இகர இறுதியும்**
**எகரமுதல் வினாவின் இகர இறுதியும்**
**சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்**
**யாவென் வினாவின் ஆயென் இறுதியும்**
**வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவுஞ்**
**சொல்லியல் மருங்கின் உளவென மொழிப.**

**(தொல். எழுத்து.: 159)**

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் கூறும் நச்சினார்க்கினியர்,

> அதோளிக் கொண்டான், இதோளிக்கொண்டான், உதோளிக்கொண்டான், எதோளிக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்; ஆண்டைக் கொண்டான், ஈண்டைக்கொண்டான், ஊண்டைக் கொண்டான், யாண்டைக்கொண்டான் எனவும் இவை மிக்கன. அதோளி அவ்விடமென்னும் பொருட்டு, அவ்வழி கொண்டான் அவ்வழிக் கொண்டான் , இவ்வழி கொண்டான் இவ்வழிக் கொண்டான், உவ்வழி கொண்டான் உவ்வழிக் கொண்டான், எவ்வழி கொண்டான் எவ்வழிக் கொண்டான் என உறழ்ந்தன. சுட்டுச்சினை நீண்டதற்கும் யா வினாவிற்கும் வரும் ஐகார ஈற்றுக்கு உதாரணம் அக்காலத்து ஆயிடைகொண்டான் ஆயிடைக்கொண்டான் என்றாற் போல ஏனைய வற்றிற்கும் வழங்கிற்றுப் போலும்.

என விளக்குவாராதலின், எவ்வழி , யாண்டு ஆகிய வினாப்பெயர்களும் அக்காலத்திலேயே வழங்கின என்பதும் புலனாகிறது.

■

# உயர்திணைப் பெயர்

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே (தொல். சொல்.:1)**

திணை இருவகைப்படும். அவை உயர்திணை அஃறிணையாம். மக்கள் உயர்திணை என்றும் அவரல்லாத பிறவல்லாம் அஃறிணை என்றும் கூறிய தொல்காப்பியர்,

**பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வஞ் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும்**
**இவ்வென வறியுமந் தந்தமக் கிலவே**
**உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும் (தொல். சொல்.:4)**

என்னும் நூற்பாவின்வழி பேடி, தெய்வம் முதலானவையும் உயர்திணைக் குரியன என விளக்குகிறார். இளம்பூரணர்,

> இவ்வென வறியும் அந்தம் தமக்கிலவே என்னும் இலேசினானே நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் என்பன கொள்க எனக் கூறி நரகரும் உயர் திணையின்பாற்படுவர்

என விளக்குகிறார். இவ்விருவர்தம் கூற்றுக்களை உற்று நோக்கிய நன்னூலார்,

**மக்க டேவர் நரக ருயர்திணை**
**மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை (நன்.:260)**

என நூற்பா அமைத்து மக்கள், தேவர், நரகர் உயர்திணை என்றும் மற்ற அனைத்தும் அஃறிணை என்றும் பகுக்கிறார். இருவர்தம் பகுப்பு முறையும் ஒன்றே ஆயினும், தொல்காப்பியர் நரகரைச் சுட்டவில்லை என்பது அவர்க்கு வினைக்கோட்பாடு (நல்வினை, தீவினை) உடன்பாடில்லை என்பதை உணர்த்துவதாகக் கருதலாம். உயர்திணையில் அடங்கும் பேடி அஃறிணை முடிபையும் கொள்ளும் என்பது நன்னூலார் கருத்து. இதனை,

**பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்**
**ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்**
**இருமையு மஃறிணை யன்னவு மாகும் (நன்.: 263)**

என்னும் நூற்பாவில் அன்னவும் ஆகும் என்றமையால் தொல்காப்பி யரின் கருத்துப்படி உயர்திணை முடிவினைக் கொள்ளும் என்பதும் அஃறிணை முடிவேற்று நிற்கும் என்பதும் நன்னூலார்தம் கருத்தியலாகப் புலனாகிறது.

உயர்திணையில் மக்கள், தெய்வம் அடங்கும் என்றமையால் ஆண், பெண், அலி ஆகிய பகுப்பினரும் தெய்வமும் அடங்கும். எனின், தொல்காப்பியர் கூறியுள்ள உயர்திணைப் பெயர்களை ஆண்பால், பெண்பால் என வகுத்துக் கொள்ளலாம். இவ்விரு பால்களுக்கும் பொதுப் பன்மையான் பலர்பாலும் உயர்திணைக்குள் அடங்கும். தொல்காப்பியர் முதலான தமிழிலக்கண ஆசிரியர்கள் பால் விகுதிகளை வகுத்தும் தொகுத்தும் காட்டுகின்றனர். அவற்றை இனி நிரல்படக் காண்பாம்.

■

# உயர்திணைப் பெயர் ஈறுகள்

அன், ஆன், அள், ஆள், அர், ஆர் முதலானவை உயர்திணைப் பெயர் ஈறுகளாகச் சுட்டப் பெறுகின்றன.

**ஆடுஉ வறிசொன் மகடூஉ வறிசொற்**
**பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி**
**அம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே.** (தொல்.சொல்.: 2)

**னஃகான் ஒற்றே ஆடுஉ அறிசொல்** (தொல். சொல்.:5 )

**ளஃகான் ஒற்றே ஆடுஉ அறிசொல்** (தொல். சொல்.: 6 )

**ரஃகான் ஒற்றும் பகர விறுதியும்**
**மாரைக் கிளவி யுளப்பட மூன்றும்**
**நேரத் தோன்றும் பலரறி சொல்லே** (தொல். சொல்.:7 )

இவ்வீறுகள் சுட்டு, வினா , குடி, நிலம் முதலான பெயர்களுக்கு இறுதியில் வந்து பால் உணர்த்தும் திறத்தனவவாக அமைகின்றன. இவ்விகுதிகள் விரவுப் பெயர்களில் அன்றி வேறிடங்களில் மயங்குதல் கூடாது. ஆயினும், பெண்மைக்கான ஈறு ஆண்மைக்கான பெயரோடு ஒட்டி வழங்கும் வழக்குப் **பெருமாள்** என்னும் சொல்லிடைக் காணப்படுகிறது. பால் விகுதி மயங்கிய வேறொரு சொல் வழக்காறு தமிழில் காண்பதற்கு இல்லை. இவ்வீறுகள் வினையடியின்பின் ஒட்டும்போது திணை, பால், எண், இடம் ஆகியனவற்றைக் காட்டும் திறமுடையனவாய் விளங்குகின்றன. வினையடிகள் விகுதி ஏற்று நிற்குங்கால் முற்று வினையாகிப் பொருள் உணர்த்தவும் செய்கின்றன. ஆக, முற்று வினைகளின் முற்றாகிய தன்மைக்கு இவ்விகுதிகளே அடிப்படையாக அமைகின்றன. இவ்விகுதிகள் பழங்காலம் முதற்கொண்டே தற்காலம் வரை தமிழில் மாற்றம் எதுவும் பெறாது வழங்கி வருகின்றன. ஆயினும் இடைக்காலத்தில் ஒரு சில புதிய விகுதிகள் தோன்றின. அவை புதியன போன்று தோன்றினும் அவற்றின் ஈறும் இலக்கண ஆசிரியர்கள் காட்டும் பால் விகுதிகளுக்கான ஈறுகளையே கொண்டு முடிகின்றன. சான்றாகக் காரன், காரி விகுதிகளைக் கூறுவர். இவை முறையே உயர்திணை ஆண், பெண் பால்களின் விகுதிகளாக வழங்குபவை ஆகும். இவ்விகுதிகள் பெரும்பான்மை தொழில் அடியாக வரும் பெயர்களுக்கு விகுதிகளாக நிற்கின்றன. வேலைக்காரன், வேலைக்காரி என்னும் சொற்களிலும் சமையல்காரன், சமையல்காரி என்னும் சொற்களிலும் ஒட்டும் காரன்,

காரி விகுதிகள் தமிழுக்குப் புதிய வரவாக இருப்பினும் ஆண், பெண் பால் ஈறுகளையே தம் ஈறுகளாய்க் கொண்டு முடிகின்றன. இவற்றைப் போன்று உயர்திணைப் பலர்பால் விகுதியிலும் மாற்றம் நிகழ்ந்துள்ளது. அர், மார் என்பன பலர்பால் விகுதிகளாகச் சுட்டுவது தமிழின் தொன்மை மரபு. இவ்விகுதிகள் உயர்திணைப் பன்மையைச் சுட்டுகின்ற போதிலும் தொல்காப்பியர் அஃறிணைப் பன்மைக்கு உரித்தெனக் காட்டும் கள் விகுதியை உயர்திணைப் பன்மை விகுதிகளுக்குப் பின்னும் ஒட்டி வழங்குவது புதிய வழக்காகத் தமிழில் தோன்றி நிலைத்துள்ளது.

| | |
|---|---|
| அரசன் | அரசி |
| அரசர் | அரசியர் |
| அரசர்கள் | அரசியர்கள் |
| மாந்தன் | |
| மாந்தர் | |
| மக்கள் | |
| ஆசிரியன் | ஆசிரியை |
| ஆசிரியர் | |
| ஆசிரியர்கள் | ஆசிரியைகள் |

பால்பகாப் பொதுமைப் பெயராகி வழங்கிய சில பெயர்கள் இடைக்காலத்தில் பால் விகுதிகளை ஒட்டி வேறுபடுத்திக் காட்டும் போக்கும் தமிழில் தோன்றியுள்ளது. மாணாக்கர் என்னும் பால்பகாச் சொல், அர் என்னும் உயர்திணைப் பலர்பால் விகுதி பெற்றுத் திகழ்கிறது. இச் சொல்லடியோடு பால் விகுதிகளை ஒட்டி தனித்தனியான ஆண்பால் பெண்பால் பெயர்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

மாணாக்கன் – மாணாக்கி

மாணவன் – மாணவி

இறை என்னும் சொல் தெய்வம் சுட்டும் பால்பகாப் பொதுப்பெயராம். இச்சொல் மாந்தருள் அரசனையும் குறித்தது. தற்காலத்தில் இது பால்விகுதிகளை ஏற்று ஆண், பெண் ஆகிய பால்களுக்கான தனித்தனிச் சொற்கள் உருவாக்கப் பெற்றுள்ளன.

இறைவன் – இறைவி

ஆயினும் இத்தகு ஒருசில மாற்றங்களைத் தவிர பால் விகுதிகள் பழங்காலம் முதற்கொண்டு ஒரேநிலையில் வழங்கி வருகின்றன. இனி அவ்விகுதிகள் குறித்து நோக்குவாம்.

தொல்காப்பியர்,

**னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்** (தொல். சொல்.: 5 )

என்னும் நூற்பாவில் ஆண்பால் அன் ஈறும் ஆன் ஈறும் பெறும் என்றனர். இவ்வீறுகள் சுட்டு, வினா முதலான பல்வேறு பெயர்களுக்கு விகுதிகளாக அமையும் என்பதனைப் பின்வரும் நூற்பாக்களில் விளக்குகிறார்.

**அவ்வழி**
**அவன் இவன் உவன் என வருஉம் பெயரும்**
**அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்**
**அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்**
**யான் யாம் நாம் என வரூஉம் பெயரும்**
**யாவன் யாவள் யாவர் என்னும்**
**ஆ வயின் மூன்றோடு அப் பதினைந்தும்**
**பாலறி வந்த உயர்திணைப் பெயரே**
(தொல். சொல்.: 157)

என்றும்,

**ஆண்மை அடுத்த மகன் என் கிளவியும்**
**பெண்மை அடுத்த மகள் என் கிளவியும்**
**பெண்மை அடுத்த இகர இறுதியும்**
**நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்**
**முறைமை சுட்டா மகனும் மகளும்**
**மாந்தர் மக்கள் என்னும் பெயரும்**
**ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும்**
**சுட்டு முதல் ஆகிய அன்னும் ஆனும்**
**அவை முதல் ஆகிய பெண்டுஎன் கிளவியும்**
**ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகை**
**அப் பதினைந்தும் அவற்று ஓரன்ன.**
(தொல். சொல்.: 1158)

என்றும்,

**எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்**
**எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்**
**பெண்மை அடுத்த மகன் என் கிளவியும்**
**அன்ன இயல என்மனார் புலவர்** (தொல். சொல்.: 159)

என்றும்,

**நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே**
**வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள்**
**பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே**
**பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே**
**பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே**
**கூடி வரு வழக்கின் ஆடியற் பெயரே**

**இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோடு**
**அன்றி அனைத்தும் அவற்று இயல்பினவே**
(தொல். சொல்.:160)

ரன்றும்,

**அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்**
**பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**என்ன பெயரும் அத்திணை அவ்வே**
(தொல். சொல்.:161)

என்றும் கூறிச் செல்கிறார். அவர் குறித்துள்ள உயர்திணை பால் ஈறுகள் பெயல்களில் ஒட்டும் வகை கீழ் வரும் சான்றுகளால் அறியப்பெறும்.:

### *பாலறி வந்த உயர்திணைப் பெயர்கள்*

(பதினைந்து பெயர்ச்சொல்)

ஆண் மகன்
பெண் மகள்
பெண்டாட்டி
நம்பி
நங்கை
மகன் மகள்
மாந்தர் மக்கள்
ஆடூஉ மகடூஉ
அவ்வாளன் இவ்வாளன் உவ்வாளன்
அன்னன் அனையன்
அம்மாட்டான் இம்மாட்டான் உம்மாட்டான்
அன்னான் அனையான்
அப்பெண்டு இப்பெண்டு உப்பெண்டு
பொன் அன்னான் பொன் அன்னாள் பொன் அன்னார்

நிலப்பெயர் – அருவாளன், சோழியன்
குடிப்பெயர் – மலையமான், சேரமான்
குழுவின் பெயர் – அவையத்தார், அத்திகோசத்தார்
வினைப்பெயர் – தச்சன், கொல்லன்
உடைப்பெயர் – அம்பர் கிழான், பேரூர் கிழான்
பண்புகொள் பெயர் – கரியான், செய்யான்
பல்லோர்க் குறித்த முறைநிலைப்பெயர் – தந்தையார், தாயர்
பல்லோர்க் குறித்த சினைநிலைப்பெயர் – பெருங்காலர், பெருந்தோளர்

பல்லோர்க் குறித்த திணைநிலைப்பெயர் – பார்ப்பார், அரசர்,
வணிகர், வேளாளர்,
ஆயர், வேட்டுவர்

கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர் – பட்டி புத்திரர், சங்கிராமத்தர்

இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர் – ஒருவர், இருவர், மூவர்,
முப்பத்து மூவர்

அன்ன பிற – ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான்,
பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான்,
பெண்டிர், பெண்டுகள், பிறன், பிறள், பிறர்,
தமன், தமள், தமர், நுமன், நுமள், நுமர்,
மற்றையான், மற்றையாள், மற்றையார்,
தலைவன், தலைவி, அமைச்சர், காவலன்,
புரவலர், சேவகி, தாதி, ஆசிரியர்,ஆசிரியை

# அஃறிணைப் பெயர் ஈறுகள்

தொல்காப்பியர்,

**எஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல் (தொல். சொல்.:– 6)**

என்னும் நூற்பாவில் பெண்பால் அள் ஈறும் ஆள் ஈறும் பெறும் என்றனர். இவ்வீறுகள் சுட்டு, வினா முதலான பல்வேறு பெயர்களுக்கு விகுதிகளாக அமையும் என்பதனைப் பின்வரும் நூற்பாக்களில் விளக்குகிறார்.:

**அது இது உது என வரூஉம் பெயரும்**
**அவை முதல் ஆகிய ஆய்தப் பெயரும்**
**அவை இவை உவை என வரூஉம் பெயரும்**
**அவை முதல் ஆகிய அகரப் பெயரும்**
**யாது யா யாவை என்னும் பெயரும்**
**ஆ வயின் மூன்றோடு அப் பதினைந்தும்**
**பாலறி வந்த அஃறிணைப் பெயரே (தொல். சொல்.:– 167)**

என்றும்,

**பல்ல பல சில என்னும் பெயரும்**
**உள்ள இல்ல என்னும் பெயரும்**
**வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்**
**இனைத்துஎனக் கிளக்கும் எண்ணுக் குறிப்பெயரும்**
**ஒப்பின் ஆகிய பெயர்நிலை உளப்பட**
**அப்பால் ஒன்பதும் அவற்று ஓரன்ன. (தொல். சொல்.:– 168)**

என்றும்,

**கள்ளொடு சிவணும் அவ் இயற் பெயரே**
**கொள் வழி உடைய பலவறி சொற்கே (தொல். சொல்.:– 169)**

என்றும்,

**அன்ன பிறவும் அஃறிணை மருங்கிற்**
**பன்மையும் ஒருமையும் பாலறி வந்த**
**என்ன பெயரும் அத்திணை அவ்வே. (தொல். சொல்.:– 170)**

என்றும் கூறிச் செல்கிறார். அவர் குறித்துள்ள உயர்திணைப் பால் ஈறுகள் பெயல்களில் ஒட்டும் வகை கீழ்வரும் சான்றுகளால் அறியப்பெறும்.:

## பாலறி வந்த உயர்திணைப் பெயர்கள்

பல்ல பல சில
உள்ள இல்ல
வினைபெயர்க் கிளவி – வருவது செல்வது,
பண்புகொள் பெயர் – கரியது செய்யது
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக் குறிப்பெயர் – ஒன்று நூறு
ஒப்பினாகிய பெயர்நிலை – பொன்னன்னது பொன்னன்னவை

பிறிது பிற மற்றையது மற்றையவை
பல்லவை சில்லவை
உள்ளது இல்லது
உள்ளன இல்லன
அத்தன்மையது அத்தன்மைய

## பால்பகா அஃறிணைப் பெயர்கள்

ஆ வந்தது ஆ வந்தன
குதிரை வந்தது குதிரை வந்தன

பொருள் – ஆ, தெங்கு
இடம் – அகம், புறம்
காலம் – யாண்டு, திங்கள்
சினை – இலை, பூ
குணம் – கருமை, வட்டம்
தொழில் – உண்டல், ஓடல்

ஆ வந்தது என்பது ஒருமை
ஆ வந்தன என்பது பன்மை

தெங்கு விழுந்தது என்பது ஒருமை.
தெங்கு விழுந்தன என்பது பன்மை .

| | | |
|---|---|---|
| ஒருமை | – | மயில் பறந்தது |
| பன்மை | – | பூங்குயில் கூவின |

■

# விரவுப் பெயர்கள்

இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலை தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே (தொல்.சொல்.;–172)

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லா நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவு மாஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே
(தொல். சொல்.:–174)

ஆகிய நூற்பாக்கள் இருதிணைக்கும் உரியதான விரவுப்பெயர்களை விளக்குகிறது. இவ்விரவுப்பெயர்கள் தொடரில் அமையுங்கால் அவை கொள்ளும் வினை முடிபுகளை நோக்கியே திணை அறியப் பெறும். தொல்காப்பியர் சுட்டிக் கூறியுள்ள விரவுப்பெயர்களுக்கான சான்றுகள் கீழே நிரல்படுத்தப்பட்டுள்ளன.

சாத்தி வந்தாள்
சாத்தி வந்தது
(பசுவினைச் சாத்தி என்றழைத்தல் பழம் மரபு)

சாத்தி சாந்தரைக்கும்
சாத்தன் இசைபாடும்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | – | சாத்தன், சாத்தி |
| சினைப்பெயர் | – | செவியன், முடவன், முடத்தி |
| சினைமுதற்பெயர் | – | நெடுஞ்செவிச் சாத்தன், கொடும்புற மருதி |
| முறைப்பெயர்க் கிளவி | – | தந்தை, மகவு |
| அஃறிணை | – | தான், தாம், எல்லாம், நீயிர், நீ |

**இயற்பெயர்**

| | | |
|---|---|---|
| பெண்மை இயற்பெயர் | – | சாத்தி வந்தாள், சாத்தி வந்தது |
| ஆண்மை இயற்பெயர் | – | சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது |

| | | |
|---|---|---|
| பன்மை இயற்பெயர் | – | நல்லமணி வந்தது, நல்லமணி வந்தன, நல்லமணி வந்தார் |
| ஒருமை இயற்பெயர் | – | பாண்டி வந்தது, பாண்டி வந்தான், பாண்டி வந்தாள் |

**சினைப்பெயர்**

| | | |
|---|---|---|
| பெண்மைச் சினைப்பெயர் | – | முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் |
| ஆண்மைச் சினைப்பெயர் | – | முடவன் வந்தது, முடவன் வந்தான் |
| பன்மைச் சினைப்பெயர் | – | முடம் வந்தது, முடம் வந்தன, முடம் வந்தார் |
| ஒருமைச் சினைப்பெயர் | – | குருடு வந்தது, குருடு வந்தான், குருடு வந்தாள் |

**சினைமுதற் பெயர்**

| | | |
|---|---|---|
| பெண்மை சுட்டிய சினைமுதற் பெயர் | – | கொடும்புற மருதி வந்தது, கொடும்புற மருதி வந்தாள் |
| ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயர் | – | கொடும்புற மருதன் வந்தது, கொடும்புற மருதன் வந்தான் |
| பன்மை சுட்டிய சினைமுதற் பெயர் | – | செங்கண் அரிமா வந்தது, செங்கண் அரிமா வந்தன, செங்கண் அரிமா வந்தனர் |
| ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர் | – | கொடும்புற மருது வந்தது, கொடும்புற மருது வந்தான், கொடும்புற மருது வந்தாள் |

**இருவகை முறைப்பெயர்**

| | | |
|---|---|---|
| பெண்மை முறைப்பெயர் | – | அம்மா பால் கொடுத்தது,<br>அம்மா பால் கொடுத்தாள் |
| ஆண்மை முறைப்பெயர் | – | தந்தை அழைத்தது,<br>தந்தை அழைத்தான் |

முடவன் வந்தது, முடவன் வந்தான்

முடம் வந்தது, முடம் வந்தன, முடம் வந்தனர்

யானை வந்தது

யானை வந்தனன்

யானை வந்தனள்

யானை வந்தன

■

# வினையாலணையும் பெயர்

வினையாலணையும் பெயர், பெயர்ச்சொல்லின் தன்மை யினையும் வினைச்சொல்லின் தன்மையினையும் ஏற்று வரும் அமைப்பினை உடையது. பெயரினைப் போன்று உருபு ஏற்கும், திணை பால் இடம் எண் ஆகியவற்றினைக் காட்டும். அவ்வாறே வினைச்சொல் போன்று காலத்தையும் உணர்த்தும். வினையாலணையும் பெயரைத் தொல்காப்பியர் **தொழில்நிலை ஒட்டு** என்னும் தொடரால் குறிப்பிடுகின்றார். வினையாலணையும் பெயரென்றது நன்னூலார் உருவாக்கித் தந்த பெயராகும்.

> **பெயர்நிலைக் கிளைவி காலந் தோன்றா**
> **தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே (தொல்.சொல்.:71)**

என்னும் நூற்பாவில் தொழில்நிலை ஒட்டு என்றதனையே நன்னூலார் வினையாலணையும் பெயர் எனக் கூறுகிறார்.

தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் வினையடியைக் கொண்டு பிறப்பன. தொழிற்பெயர் காலம் காட்டுவதில்லை. வினையாலணையும் பெயர் காலம் காட்டும்.பிற்கால இலக்கண ஆசிரியர்கள் தொழிற்பெயர் என்றும் வினையாலணையும் பெயரென்றும் கூறினா ரேனும் தொல்காப்பியர் இவ்விரண்டினையும் ஒன்றாக அடக்கித் தொழிற்பெயரென்றே கூறினார். தொல்காப்பியத்திற்கு விளக்கம் கூறிய உரையாசிரியர்கள்,காலம் காட்டும் தொழிற் பெயர் என்றும் காலங்காட்டாத் தொழிற்பெயர் என்றும் தொழிற்பெயரை இரு கூறாக்கி விளக்கம் கூறினர். உண்டல் தின்றல் என்பன காலம் காட்டாத் தொழிற் பெயராம்.உண்டான், தின்றான் என்பன காலம் காட்டும் தொழிற் பெயர்கள்.காலம்காட்டாத் தொழிற்பெயர்கள் தொழிலை மட்டுமே உணர்த்துகின்றன.காலம் காட்டுந் தொழிற்பெயர்கள் தொழிலொடு அத்தொழில் செய்வோனையும் உணர்த்துகின்றன.இக்காலங் காட்டுந் தொழிற்பெயர்களையே நன்னூலார் போன்றோர் வினையாலணையும் பெயர் என அழைத்தனர்

வினைமுற்றும் வினையாலணையும் பெயரும் அமைப்பொழுங்கில் ஒப்புமை உடையன.

| | |
|---|---|
| உண்டான் | – வினைமுற்று |
| உண்டவன் | – வினையாலணையும் பெயர். |
| பாடினான் | – வினைமுற்று |
| பாடியவன் | – வினையாலணையும் பெயர். |

வினைமுற்று வேற்றுமை உருபினை ஏற்பதில்லை.ஆயின் வினையாலணையும் பெயர் வேற்றுமை உருபினை ஏற்கும். ஆதலால் இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடு சொல்நிலையில் உணரப்படுவதை விட தொடர்நிலையிலேயே நன்கு புலனாகிறது.

அவன் உண்டான், உண்டானைக் கண்டேன்.

இதில் உண்டான் வினைமுற்று.உண்டானை என்பது வினையாலணையும் பெயர். உண்டான் என்பதற்கும் உண்டானை என்பதற்கும் உள்ள வேறுபாடு வேற்றுமை உருபேற்றலாகிய நிலை மட்டுமே. வினைச்சொல் உருபு ஏற்காது. ஆனால் வினைமுற்று உருபு ஏற்கும். உருபு ஏற்ற வினைமுற்றினைத்தான் வினையாலணையும் பெயர் என்கிறோம்.

**வினையாலணையும் பெயர் – வரைவிலக்கணம்**

1) தொல்காப்பியர் தொழில்நிலை ஒட்டு என்னும் தொடரால் குறிப்பிடுவது.

2) தொழில்நிலை ஒட்டாகிய பெயர் காலம் காட்டுவனவாகவும் காட்டாதனவாகவும் இரு நிலையில் அமைகிறது.

3) காலம் காட்டாத தொழில்நிலை ஒட்டுப்பெயரே தொழிற்பெயரென வழங்கப்படுகிறது.

4) காலம் காட்டும் தொழில்நிலை ஒட்டுப்பெயர் வினையாலணையும் பெயராக வழங்கப்படுகிறது.

5) தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் வினையடியால் உருவாகப் பெறுவன.

6) வினைமுற்றும் வினையாலணையும் பெயரும் திணை, பால், எண், இடம் ஆகிய நான்கினையும் காட்டுவன.

7) பொதுவாக வினைவடிவங்கள் உருபு ஏற்காது. ஆனால், தொடரமைப்பினில் வினைமுற்றுக்கள் உருபு ஏற்கும் நிலையும் காணப்பெறுகிறது.

8) உருபு ஏற்ற வினைமுற்றின் மாற்றுப் பெயரே வினையாலணையும் பெயர்.

9) சொல்நிலையில் வினைமுற்றாகவும் செயல்பாட்டு நிலையில் வினையாலணையும் பெயராகவும் செயல்படக் கூடியது. ஆக வினைமுற்றே செயல்நிலையில் வினையாலணையும் பெயராக அமைகிறது.

■

# எண்ணுப் பெயர்

எண்ணுப்பெயர்கள் வேற்றுமை உருபேற்குங்கால் சாரியையினை ஏற்கின்றன.பெரும்பான்மை அன் சாரியை வருகிறது.

**எண்ணின் இறுதி அன்னொடு சிவணும் (தொல்.எழுத்து.:198)**

என்றும்

**அன்னென் சாரியை ஏழ னிறுதி**
**முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப (தொல்.எழுத்து.:194)**

என்றும் கூறுவார் தொல்காப்பியர்.

| | |
|---|---|
| ஒன்று + அன் + ஐ | ஒன்றனை |
| | ஒன்றனொடு |
| | ஒன்றனுக்கு |
| | ஒன்றனின் |
| | ஒன்றனது |
| | ஒன்றன்கண் |
| இரண்டு + அன் + ஐ | இரண்டனை |
| | இரண்டனொடு |
| | இரண்டனுக்கு |
| | இரண்டனது |
| | இரண்டன்கண் |
| மூன்று + அன் + ஐ | மூன்றனை |
| | மூன்றனொடு |
| | மூன்றனுக்கு |
| | மூன்றனின் |
| | மூன்றனது |
| | மூன்றன்கண் |
| நான்கு + அன் + ஐ | நான்கனை |
| | நான்கனொடு |
| | நான்கனுக்கு |
| | நான்கனின் |
| | நான்கனது |
| | நான்கன்கண் |

| | |
|---|---|
| ஐந்து + அன் + ஐ | ஐந்தனை |
| | ஐந்தனொடு |
| | ஐந்தனுக்கு |
| | ஐந்தனது |
| | ஐந்தன்கண் |
| ஆறு + அன் + ஐ | ஆறனை |
| | ஆறனொடு |
| | ஆறனுக்கு |
| | ஆறனின் |
| | ஆறனது |
| | ஆறன்கண் |
| ஏழு + அன் + ஐ | ஏழனை |
| | ஏழனொடு |
| | ஏழனுக்கு |
| | ஏழனின் |
| | ஏழனது |
| | ஏழன்கண் |
| எட்டு + அன் + ஐ | எட்டனை |
| | எட்டனொடு |
| | எட்டனுக்கு |
| | எட்டனின் |
| | எட்டனது |
| | எட்டன்கண் |
| ஒன்பது + அன் + ஐ | ஒன்பதனை |
| | ஒன்பதனொடு |
| | ஒன்பதனுக்கு |
| | ஒன்பதனின் |
| | ஒன்பதனது |
| | ஒன்பதன்கண் |
| பத்து + அன் + ஐ | பத்தனை |
| | பத்தனொடு |
| | பத்தனுக்கு |
| | பத்தனின் |
| | பத்தனது |
| | பத்தன்கண் |

**இன்சாரியை**

**நிறையு மளவும் வரூஉங் காலையுங்**
**குறையா தாகும் இன்னென் சாரியை (தொல்.எழுத்து.: 436)**

என்னும் விதியான் நிறைப்பெயர், அளவுப்பெயர் ஆகியவை பத்து என்னும் எண்ணுப்பெயரின் முன் வந்து புணருங்காலை இன் என்னும் சாரியை வரும் என்பது புலனாகிறது.

| | |
|---|---|
| பத்து + இன் + கழஞ்சு | பதின்கழஞ்சு |
| +தொடி | பதின்தொடி |
| + பலம் | பதின்பலம் |
| + கலம் | பதின்கலம் |
| + சாடி | பதின்சாடி |
| + தூதை | பதின்தூதை |
| + பானை | பதின்பானை |
| + நாழி | பதின்நாழி |
| + மண்டை | பதின்மண்டை |
| + வட்டி | பதின்வட்டி |

ஒன்பது என்னும் சொல்லும் மேற்காட்டியவாறு வரும் என்பதனை,

**ஒன்பான் இறுதி உருபுநிலை திரியா**
**தின்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே (தொல்.எழுத்து.:459)**

என்னும் நூற்பா உணர்த்துகிறது.

| | |
|---|---|
| ஒன்பது + இன் + கழஞ்சு | ஒன்பதின்கழஞ்சு |
| + தொடி | ஒன்பதின்தொடி |
| + பலம் | ஒன்பதின்பலம் |
| + கலம் | ஒன்பதின்கலம் |
| + சாடி | ஒன்பதின்சாடி |
| + தூதை | ஒன்பதின்தூதை |
| + பானை | ஒன்பதின்பானை |
| + நாழி | ஒன்பதின்நாழி |
| + மண்டை | ஒன்பதின்மண்டை |
| + வட்டி | ஒன்பதின்வட்டி |

**நிறைப்பெயர், அளவுப்பெயர் ஆகியன நூறு என்னும் சொல்லின் முன்னர் வந்து புணருங் காலத்து இன ஒற்று மிகுவதோடு வல்லெழுத்து மிகுந்து முடியும் என்பதை,**

**அளவும் நிறையும் ஆயியல் திரியாது**
**குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்**
**முற்கிளந் தன்ன என்மனார் புலவர்**

**(தொல்.எழுத்து.:474)**

எனின் அப்பெயர்கள் நூறின் முன் வந்து புணரும் நிலை பின்வருமாறாம்.:

| | | | |
|---|---|---|---|
| நூறு + | இன் | + கழஞ்சு | நூற்றுக்கழஞ்சு |
| | | + தொடி | நூற்றுத்தொடி |
| | | + பலம் | நூற்றுப்பலம் |
| | | + கலம் | நூற்றுக்கலம் |
| | | + சாடி | நூற்றுச்சாடி |
| | | + தூதை | நூற்றுத்தூதை |
| | | + பானை | நூற்றுப்பானை |
| | | + நாழி | நூற்றுநாழி |
| | | + மண்டை | நூற்றுமண்டை |
| | | + வட்டி | நூற்றுவட்டி |

பத்து என்னும் எண்ணுப்பெயர், உயிரெழுத்தை முதலாக உடைய அளவுப்பெயரொடு புணருங்கால் இன் சாரியை வரும் என்பார் தொல்காப்பியர்.

**அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை**
**னஃகான் றஃகானாகிய நிலைத்தே** (தொல்.எ.:121)

என்னும் விதிவழி உயிரெழுத்தை முதலாக உடைய அளவுப்பெயர் பத்து என்னும் எண்ணுப்பெயர் முன் வந்து புணரும் திறம் பின்வருமாறு அமையும்.

பத்து + இன் + அகல் = பதிற்றகல்

பத்து + இன் + உழக்கு = பதிற்றுழக்கு

பதிற்றகல், பதிற்றுழக்கு ஆகிய சொற்களிடத்தே இற்றுச் சாரியை வந்தது என்பாரும் உளர்.அவர்தாம்,

“இதற்கு (இந்நூற்பாவிற்கு) உரையாசிரியர்கள் பதிற்றகல் (பது – இற்று – அகல்), பதிற்றுழக்கு (பது – இற்று – உழக்கு) போன்ற எடுத்துக்காட்டுக்களைத் தருகின்றனர்.எனவே இங்கு அமையும் சாரியையின் வடிவம் – இற்று – எனத் தெரிகின்றது.” என விளக்குவர். ஆனால் பதிற்றகல், பதிற்றுழக்கு ஆகிய சொற்களிடையே இன் சாரியையே வந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

நச்சினார்க்கினியர் மேற்சுட்டிய தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாவிற்கு,

பதிற்றகல், பதிற்றுழக்கு. இவற்றைப் பத்தென நிறுத்தி 'நிறையுமளவும்' என்னுஞ் சூத்திரத்தால் இன் சாரியை கொடுத்துக், 'குற்றிய லுகர மெய்யொடுங் கெடுமே' என்றதனாற் குற்றுகரம் மெய்யொடுங் கெடுத்து வேண்டுஞ் செய்கை செய்து 'முற்றவின் வரூஉம்' என்பதனான் ஒற்றிரட்டித்து முடிக்க.

நிலைஇய என்றதனாற் பிறவழியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க. பதிற்றெழுத்து, பதிற்றடுக்கு, ஒன்பதிற்றெழுத்து, பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றொன்பது என எல்லாவற்றொடும் ஒட்டிக் கொள்க. அச்சூத்திரத்திற், 'குறையாதாகும்' என்பதனாற் பொருட் பெயர்க்கும் எண்ணுப்பெயர்க்கும் இன் கொடுக்க

என விளக்கம் கூறியுள்ளமையும் இவண் குறிப்பிட வேண்டுவதாம். ஆதலின், பதிற்றகல் (பது + இன் + அகல்) என்னுஞ் சொல் இன் சாரியை பெற்று அச்சாரியையின் னகர ஒற்று றகரமாகத் திரிந்து இரட்டித்துப் புணர்ந்துள்ளது. அவ்வாறே பதிற்றுழக்கு எனுஞ் சொல்லும் அமைந்துள்ளது எனக் கோடலே பொருந்தும். அவ்வாறே பதிற்றுக்கை, ஒன்பதிற்றுக்கை ஆகிய சொற்களில் இற்றுச் சாரியை வந்துள்ளது என்பதும் போதரும்.

மவ்வீற்றுச் சொல்லான ஆயிரம் என்பது பிற எண்ணுப்பெயர்களோடு புணரும்போது அத்துச் சாரியை பெறுகிறது. விதிப்படி ஈற்று மெய்யான மகரம் கெடுகிறது.

அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி
ஒத்த எண்ணு முன்வரு காலை (தொல்.எழுத்து.:317)

ஆயிரம் + ஒன்று = ஆயிரத்தொன்று
ஆயிரம் + இரண்டு = ஆயிரத்திரண்டு
ஆயிரம் + மூன்று = ஆயிரத்து மூன்று
ஆயிரம் + நான்கு = ஆயிரத்து நான்கு
ஆயிரம் + பத்து = ஆயிரத்துப் பத்து
ஆயிரம் + நூறு = ஆயிரத்து நூறு

ஆயிரம் என்னும் சொல்முன் அளவு மற்றும் நிறைப்பெயர்கள் வரினும் மகரம் கெடும். வருமொழியின் முதலெழுத்து வல்லெழுத்தாயின் வந்த வல்லெழுத்து மிகும்.

அளவும் நிறையும் வேற்றுமை யியல (தொல்.எழுத்து.:319)

என்றும்,

மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே (தொல்.எழுத்து.:310)

என்றும் வரும் விதிகளின்படி அப்புணர்ச்சி அமையும் நிலை பின்வருமாறாம்.:

| | | |
|---|---|---|
| ஆயிரம் | + கழஞ்சு | ஆயிரக்கழஞ்சு |
| | + தொடி | ஆயிரத்தொடி |
| | + பலம் | ஆயிரப்பலம் |
| | + கலம் | ஆயிரக்கலம் |
| | + சாடி | ஆயிரச்சாடி |
| | + தூதை | ஆயிரத்தூதை |
| | + பானை | ஆயிரப்பானை |
| | + நாழி | ஆயிரநாழி |
| | + மண்டை | ஆயிரமண்டை |
| | + வட்டி | ஆயிரவட்டி |

எண்ணுப் பெயரல்லாத பிற பெயர்களுடன் புணரும்போது மவ்வீறு கெட்டு வருமொழியின் முதலெழுத்து வல்லெழுத்தாயின் அதன் இனமான மெல்லெழுத்து மிகும் நிலையும் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| ஆயிரம் | + கலம் | = | ஆயிரங்கலம் |
| ஆயிரம் | + சான்றோர் | = | ஆயிரஞ்சான்றோர் |
| ஆயிரம் | + தேர் | = | ஆயிரந்தேர் |
| ஆயிரம் | + பேர் | = | ஆயிரம் பேர் |

## எண்ணுப்பெயரின் முன் எண்ணுப்பெயர்

எண்ணுப்பெயர் முன் எண்ணுப்பெயர் வந்து புணரும் நிலையும் இலக்கணவாசிரியர்களால் நன்கு விளக்கப் பெற்றுள்ளது.தொல்காப்பியர்,

**முதலீ ரெண்ணி னொற்று ரகரம் ஆகும்**
**உகரம் வருதல் ஆவயி னான.** **(தொல்.எழுத்து: 439)**

**இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கும்**
**நடைமருங் கின்றே பொருள்வயி னான.(தொல்.எழுத்து: 440)**

**ஆயிரக் கிளவி வரூஉங் காலை**
**முதலீ ரெண்ணின் உகரங் கெடுமே** **(தொல்.எழுத்து: 464)**

**முதனிலை நீடினும் மான மில்லை** **(தொல்.எழுத்து: 465)**

1. ஒன்று, இரண்டு ஆகிய எண்ணுப் பெயர்களின் முன் பத்து என்னும் எண்ணுப்பெயர் வந்து புணரின் ஒன்று என்பதன் னகர ஒற்றும், இரண்டு என்பதன் ணகர ஒற்றும் ரகரவொற் றாகத் திரிய அங்கு உகரம் வரும்.

இவ்வெண்களின் முன் ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வரின் மேற் சொன்ன உகரம் கெடும்; முதலெழுத்து நீளும்.

இவ்வெண்ணுப்பெயர்களின் முன் உயிரெழுத்தை முதலாக உடைய மொழி வந்து புணரின் உகரம் கெடும், அக்காலை முதலெழுத்து நீளும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | பத்து | – | ஒருபத்து, ஒருபஃது |
| இரண்டு | + | பத்து | – | இருபத்து, இருபஃது |
| ஒன்று | + | ஆயிரம் | – | ஓராயிரம், ஓராயிரம் |
| இரண்டு | + | ஆயிரம் | – | இராயிரம், ஈராயிரம் |
| ஒன்று | + | அகல் , உழக்கு | – | ஓரகல், ஒருழக்கு |
| இரண்டு | + | அகல் , உழக்கு | – | ஈரகல், ஈருழக்கு |

**மூன்றன் ஒற்றே வந்த தொக்கும் (தொல்.எழுத்து: 447)**

**மூன்று மாறும் நெடுமுதல் குறுகும் (தொல்.எழுத்து.:438)**

**மூன்றன் ஒற்றே பகார மாகும் (தொல்.எழுத்து.:441)**

**ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்**
**ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும் (தொல்.எழுத்து: 469)**

**மூன்ற னொற்றே வகரம் வருவழித்**
**தோன்றிய வகரத் துருவா கும்மே (தொல்.எழுத்து.:452)**

**மூன்றன் ஒற்றே வந்த தொக்கும் (தொல்.எழுத்து.:447)**

**மூன்றன் ஒற்றே வகார மாகும் (தொல்.எழுத்து.:466)**

2. மூன்று, ஆறு ஆகிய எண்ணுப் பெயர்களின் முன் பத்து என்னும் எண்ணுப்பெயர் வந்து புணரின் மூன்று, ஆறு ஆகிய எண்ணுப் பெயர்களின் முதலெழுத்துக் குறுகும். மூன்று என்னும் எண்ணின் னகர ஒற்றுப் பகர ஒற்றாய்த் திரியும்.

மூன்றின் முன் ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வரின் மேற் சொன்ன உகரம் கெடும்; னகரம் வகரமாய்த் திரியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்று | + | பத்து | – | முப்பத்து, முப்பஃது |
| ஆறு | + | பத்து | – | அறுபத்து, அறுபஃது |
| மூன்று | + | ஆயிரம் | – | முவ்வாயிரம், மூவாயிரம் |
| ஆறு | + | ஆயிரம் | – | அறாயிரம், ஆறாயிரம் |

**நான்க னொற்றே றகாரம் ஆகும் (தொல்.எழுத்து: 442)**

**நான்க னொற்றே லகாரம் ஆகும் (தொல்.எழுத்து: 453)**

**நான்க னொற்றே லகாரம் ஆகும் (தொல்.எழுத்து.: 467)**

3. நான்கு என்னும் எண்ணுப் பெயர்களின் முன் பத்து என்னும் எண்ணுப்பெயர் வந்து புணரின் குகரம் கெட்டு அயல் நின்ற னகரம் றகரமாகத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| நான்கு | + பத்து | – | நாற்பத்து, நாற்பஃது |

**ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்** (தொல்.எழுத்து: 443)

**ஐந்த னொற்றே மெல்லெழுத் தாகும்** (தொல்.எழுத்து: 448)

**ஐந்தும் மூன்றும் நமவரு காலை**
**வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே** (தொல்.எழுத்து.: 448)

**ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே** (தொல்.எழுத்து: 454)

**கசதப முதன்மொழி வருஉங் காலை** (தொல்.எழுத்து: 449)

4. ஐந்து என்னும் எண்ணுப் பெயரின் முன் பத்து என்னும் எண்ணுப் பெயர் வந்து புணரின் துகரம் கெட்டு அயல் நின்ற நகரம் மகரமாகத் திரியும். வல்லெழுத்தை முதலாக உடைய வருமொழி வரின் வந்த வல்லெழுத்திற்கு இனமான மெல்லெழுத்தாய்த் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| ஐந்து | + பத்து | – | ஐம்பத்து, ஐம்பஃது |
| ஐந்து | + கலம் | – | ஐங்கலம், |
| ஐந்து | + சாடி | – | ஐஞ்சாடி, |
| ஐந்து | + தூதை | – | ஐந்தூதை, |
| ஐந்து | + பானை | – | ஐம்பானை, |
| ஐந்து | + கழஞ்சு | – | ஐங்கழஞ்சு, |
| ஐந்து | + தொடி | – | ஐந்தொடி, |
| ஐந்து | + பலம் | – | ஐம்பலம், |
| ஐந்து | + கஃசு | – | ஐங்கஃசு |
| ஐந்து | + வட்டி | – | ஐவட்டி |

**எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்** (தொல்.எழுத்து: 444)

**நமவ என்னும் மூன்றொடு சிவணி**
**யகரம் வரினும் எட்டன்மு னியல்பே** (தொல்.எழுத்து: 450)

5. எட்டு என்னும் எண்ணுப் பெயரின் முன் பத்து என்னும் எண்ணுப் பெயர் வந்து புணரின் டுகரம் கெட்டு அயல் நின்ற டகரம் ணகரமாகத் திரியும். ந ம வ ஆகிய எழுத்துக்கள் வரின் ணகரம் இரட்டித்து இயல்பாகப் புணரும். வல்லெழுத்தை

முதலாக உடைய வருமொழி வரின் எண் என்பதனோடு இயல்பாகப் புணரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எட்டு | + | பத்து | – | எண்பத்து, எண்பஃது |
| எட்டு | + | நாழி | – | எண்ணாழி |
| எட்டு | + | மண்டை | – | எண்மண்டை, |
| எட்டு | + | வட்டி | – | எண்வட்டி, |
| எட்டு | + | அகல் | – | எண்ணகல், |
| எட்டு | + | உழக்கு | – | எண்ணுழக்கு, |
| எட்டு | + | கலம் | – | எண்கலம், |
| எட்டு | + | சாடி | – | எண்சாடி, |
| எட்டு | + | தூதை | – | எண்தூதை, |
| எட்டு | + | பானை | – | எண்பானை, |
| எட்டு | + | கழஞ்சு | – | எண்கழஞ்சு, |
| எட்டு | + | தொடி | – | எண்தொடி, |
| எட்டு | + | பலம் | – | எண்பலம், |
| எட்டு | + | கஃசு | – | எண்கஃசு |

**ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்**
**முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்**
**பஃதென் கிளவி யாய்தபக ரங்கெட**
**நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி**
**ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்** **(தொல்-எழுத்து: 445)**

**அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியும்**
**கிளந்த இயல தோன்றுங் காலை** **(தொல்.எழுத்து: 446)**

**ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே**
**முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்**
**நூறென் கிளவி நகார மெய்கெட**
**ஊஆ வாகும் இயற்கைத் தென்ப**
**ஆயிடை வருதல் இகார ரகாரம்**
**ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்** **(தொல்-எழுத்து: 463)**

6. ஒன்பது என்னும் எண்ணுப் பெயரின் முன் பஃது என்னும் எண்ணுப் பெயர் வந்து புணரின் நிலைமொழி முதல் ஒகரத்தின் மீது தகரம் ஒட்டும் .ணகர ஒற்று இரட்டிக்கும். பஃது என்னும் வருமொழியின் பகரமும் ஆய்தமும் கெட

ணகரத்தின் மேல் ஊகாரம் ஏற, துகரத்தின் தகர ஒற்று றகரொற்றாகத் திரிய தொண்ணூறு என முடியும்.

மேலே காட்டப் பெற்ற தொல்காப்பிய நூற்பாவின் பொருள் இஃதே ஆயினும் தொண்ணூறு என்பதற்கான ஏற்கத் தக்க விளக்கமாக அது அமையவில்லை.

"ஒன்பது என்னும் எண்ணுக்குப் பழம் பெயர் தொண்டு என்பது. 'தொண்டு தலையிட்ட' (தொல்.1358) என்று ஆசிரியரும், தொண்டு திவவு' (மலைபடு.21) என்று பெருங்கௌசிகனாரும் கூறுதல் காண்க. தொண்டு எனுஞ் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுப் போய்விட்டது. அவர் காலத்திற்கு முன் தொண்டு, தொண்பது,தொண்ணூறு,தொள்ளாயிரம் என்பன முறையே 9, 90, 900, 9000 என்னும் எண்களைக் குறிக்கும் பெயர்களாயிருந்தன. தொண்டு என்னும் ஒன்றாமிடப் பெயர் வழக்கறவே, தொன்பது என்னும் பத்தாமிடப்பெயர் ஒன்றா மிடத்திற்கும், தொண்ணூறு என்னும் நூறாமிடப் பெயர் பத்தாமிடத்திற்கும், தொள்ளாயிரம் என்னும் ஆயிரமா மிடப்பெயர் நூறாமிடத்திற்குமாக வழங்கத் தலைப்பட்டன. தொன்பது என்னும் பெயர்முறையே தொன்பது,ஒன்பது என மருவிற்று.ஆயிரமாமிடப்பெயர் நூறாமிடத்திற்கு வழங்கவே, 9000 என்னும் எண்ணைக் குறிக்க ஒன்பது என்னும் பெயருடன் ஆயிரம் என்னும் என்னும் பெயரைச் சேர்க்க வேண்டிய தாயிற்று.முதற்பத்து எண்ணுப் பெயர்களில் ஒன்பது என்பதைத் தவிர மற்றவை யெல்லாம் ஒரு சொல்லாய் இருப்பதையும் ஒன்பது என்பது இரு சொல்லாய்ப் பது (பத்து) என்று முடிவதையும் தொண்ணூறு என்பது நூறு என்றும் தொள்ளாயிரம் என்பது ஆயிரம் என்றும் முடிவதையும் நோக்குக. தொண்பது என்பதின் திரிபான ஒன்பது என்னும் சொல்லுக்குப் பொருந்தாப் புகலும் முறைபற்றி ஒன்று குறைந்த பத்து என்று பொருள் கூறுவர் சிலர்.அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றிற்கும் அப்பொருள் ஏற்க வேண்டும். அங்ஙனம் ஏலாமையின் அது போலிவுரையென மறுக்க. ஆகவே தொண்டு + பத்து – தொண்பது, தொண்டு + நூறு – தொண்ணூறு, தொண்டு + ஆயிரம் – தொள்ளாயிரம்

என்று புணர்ப்பதே முறையென்றும், தொண்டு என்னும் எண்ணுப் பெயர் வழக்கற்றதினால் அதன் மேலிடப் பெயர்கள் மூன்றும் ஒவ்வோரிடமாய்த் தவழ்ந்துவந்து வழங்கின என்றும் அறிந்து கொள்க."

என அறிஞர் கூறுவதே ஏற்கத் தக்கதாய் உள்ளது.

| | | |
|---|---|---|
| ஒன்பது + பத்து | – | தொண்ணூறு |
| (தொண்பது + பத்து | – | தொண்ணூறு) |
| ஒன்பது + கலம் | – | ஒன்பதின்கலம் |
| ஒன்பது + சாடி | – | ஒன்பதின்சாடி |
| ஒன்பது + தூதை | – | ஒன்பதின்தூதை |
| ஒன்பது + பானை | – | ஒன்பதின்பானை |
| ஒன்பது + நாழி | – | ஒன்பதின்நாழி |
| ஒன்பது + மண்டை | – | ஒன்பதின்மண்டை |
| ஒன்பது + வட்டி | – | ஒன்பதின்வட்டி |
| ஒன்பது + அகல் | – | ஒன்பதினகல் |
| ஒன்பது + உழக்கு | – | ஒன்பதினுழக்கு |
| ஒன்பது + கழஞ்சு | – | ஒன்பதின்கழஞ்சு |
| ஒன்பது + தொடி | – | ஒன்பதின்தொடி |
| ஒன்பது + பலம் | – | ஒன்பதின்பலம் |

மேலே எண்ணுப் பெயர்கள் புணரும் நிலை ஒருவாறு சுட்டப் பெற்றது.ஆங்காங்கே அப்புணர்ச்சிகளுக்கான விதிகளும் தரப் பெற்றுள்ளன. ஒரே முடிபினைப் பெறும் சொற்களைத் தொகுத்து ஓரிடத்திலேயே இலக்கணங் கூறிச் செல்வது ஆசிரியர் தொல்காப்பியரின் உத்தியாதலால் அவ்வுத்தியின்படி அவர் எண்ணுப்பெயர் புணர்ச்சியில் தொகுத்துக் கூறியுள்ள நூற்பாக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவ்விதிகள் வழி வரும் சொற்புணர்நிலை முன்னரே காட்டப்பெற்றுள்ளது.

**ஒன்றுமுத லாக எட்ட னிறுதி**
**எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்**
**குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே**
**முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே.** **(தொல்.: 434)**

**ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது.** **(தொல்.: 436)**

**நிறையு மளவும் வரூஉம் காலையும்**
**குறையா தாகும் இன்னென் சாரியை** **(தொல்.: 437)**

ஒன்பா னிறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே (தொல்.: 459)

ஒன்பா னிறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மரபே (தொல்.: 470)

நூறு முன் வரினுங் கூறிய இயல்பே (தொல்.: 460)

நூறா யிரமுன் வருஉங் காலை
நூற னியற்கை முதனிலைக் கிளவி (தொல்.: 471)

நூறென் கிளவி ஒன்றுமுத லொன்பாற்கு
ஈறுசினை யொழிய இனவொற்று மிகுமே (தொல்.: 472)

அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும் (தொல்.: 473)

அளவும் நிறையும் ஆயியல் திரியாது
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர் (தொல்.: 474)

ஒன்று முதலாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும் (தொல்.: 475)

ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயி னொற்றிடை மிகுத லில்லை (தொல்.: 476)

அளவும் நிறையும் ஆயியல் திரியா (தொல்.எழுத்து.: 477)

முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்
முதனிலை யியற்கை என்மனார் புலவர் (தொல்.எழுத்து.: 478)

அதனிலை உயிர்க்கும் யாவரு காலை
முதனிலை ஒகரம் ஓவா கும்மே
ரகரத் துகரந் துவரக் கெடுமே (தொல்.எழுத்து.: 479)

## எண்ணடிப் பெயர்கள்

எண்ணுப்பெயர்களை அடியாகக் கொண்டு பல உயர்திணைப்பெயர்கள் உருவாக்கப் பெற்று வழங்கப்படுகின்றன. ஒருவர், இருவர், மூவர், நால்வர், ஐவர், ஆறுவர், எழுவர், எண்மர், ஒன்பதின்மர், பதின்மர், நூற்றுவர் என எண்ணடியாகப் பிறந்த பெயர்கள் வழங்கி வருகின்றன. இவ்வெண்ணடிப் பெயர்களுள் ஒன்பதடியாகப் பிறக்கும் ஒன்பதின்மர் என்னும் சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் காணப்பெறவில்லை. பிற சொற்கள் சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. சான்றிற்காக அவற்றுள் சிலவற்றைக் கீழே நோக்குவோம்.:

நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் (ஐங்.கடவுள்.வாழ்.)
ஏனல் காதலின் இடையுற்று ஒருவன்

கண்ணியன் கழலன் தாரன் (நற்.; 128:7)

ஒருவனை ஒருவன் அடுதலும் (புறம்.:76:1)

மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ (பரி.: 1:47)

எம்மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும் (கலி.:9:6)

முளைநிரை முறுவவல் ஒருத்தியொடு நெருநல் (ஐங்.:369:2)

எம்போல் ஒருத்தி நலன்நயந்த் என்றும் (புறம்.:144:11)

ஒருவரு மில்லை மாதோ (புறம்.:311:5)

ஒருவரும் இருவரும் அல்லர் (ஐங்.:64:3)

இருவர் சுட்டிய பல்வேறு தொல்குடி (திருமுரு.:178)

தமிழ்கெழு மூவர் காக்கும் (அகம்.:31:14)

முரசு முழங்கு தானை மூவருள்ளும் (பெரும்.:33)

வாலிழை மகளிர் நால்வர் கூடி (அகம்.:86:12)

தோலா நல்லிசை நால்வ ருள்ளும் (புறம்.:56:10)

ஆராச் செருவின் ஐவர் போல (பெரும்.:417)

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ (புறம்.:2:13)

பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த (மதுரை.:775)

அறுவர் பயந்த ஆறமர் செல்வ (திருமுரு.:255)

அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர் (பரி.:5:45)

எழுவர் நல்வலம் அடங்க ஒருபகல் (அகம்.:36:20)

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் (சிறுபாண்.;113)

மாசில் எண்மரும் பதினொரு கபிலரும் (பரி.:3:7)

மருந்துரை இருவரும் திருந்து நூல் எண்மரும் (பரி.:8:5)

யாமுனியா ஏறுபோல் வைகற் பதின்மரை (கலி.:108:48)

உலகிருள் அகற்றிய பதின்மரும் (பரி.;8;4)

## எண்ணுப் பெயர்: சொல்லாக்கமும் உருபுகளும்

எண்ணுப்பெயர்களை அடியாகக் கொண்டு புதிய சொல்லாக்கங்கள் உருவாகியுள்ளன.பேச்சு வழக்கில் மட்டுமின்றி அவை இலக்கிய வழக்கிலும் ஆள்ப்பெறுகின்றன. ஒன்று என்னும் சொல் ஆவது என்னும் சொல்லாக்க உருபினைப் பெற்று ஒன்றாவது என வழங்குவதுமுண்டு. ஆயினும் எழுத்து

வழக்கில் ஒன்று என்னும் எண்ணுப்பெயருக்குப் பதிலியாக முதல் என்பதனை வழங்கும் வழக்கு உண்டாதனால் ஆவது என்னும் சொல்லாக்க உருபினை அதனோடு இயைத்து முதலாவது என வழங்குவதே பெரும்பான்மையாக உள்ளது.பிற எண்ணுப் பெயர்களும் இச்சொல்லாக்க உருபினை ஏற்கின்றன. அவ்வுருபு இயைந்த ஆக்கச்சொற்கள் வருமாறு.:

ஒன்றாவது முதலாவது

இரண்டாவது

மூன்றாவது

நான்காவது

ஐந்தாவது

ஆறாவது

ஏழாவது

எட்டாவது

ஒன்பதாவது

பத்தாவது

நூறாவது

இச்சொல்லாக்கங்களில் நிலைமொழியான எண்ணுப்பெயர்கள் எவ்வித மாற்றத்திற்கும் உள்ளாவதில்லை. அவ்வாறே இவ்வுருபேற்குங்கால் எவ்விதச் சாரியையும் வருவதில்லை.எண்ணுப் பெயர்களின் முழு வடிவம் இயல்பாக ஆவது என்னும் சொல்லாக்க உருபொடு இயைகிறது. ஆவது என்னும் சொல்லாக்க உருபினைப் போன்றே ஆம் என்னும் உருபினையும் இவ்வெண்ணுப்பெயர்களில் இணைத்து ஆக்கப் பெற்றுள்ள புதிய சொல்வடிவங்கள் வழக்கில் உள்ளன. ஆவது உருபினைப் போன்றே ஆமும் எண்ணுப்பெயர்களுடன் இயல்பாகவே புணர்கின்றன.

ஒன்றாம் முதலாம்

இரண்டாம்

மூன்றாம்

நான்காம்

ஐந்தாம்

ஆறாம்

ஏழாம்

எட்டாம்

ஒன்பதாம்

பத்தாம்

நூறாம்.

இச்சொல்லாக்க உருபுகள் குறித்துக் கூறுகையில், "ஆம் என்பதற்குப் பதிலாகத் தமிழில் ஆவது என்பதும் சேர்த்து வழங்கப்படும்" என்பார் டாக்டர் மு.வரதராசனார். ஆவது ஆம் ஆகிய இரு சொல்லுருபுகள் தற்காலப் பேச்சு மற்றும் எழுத்து வழக்குகளில் உண்டெனினும் பெரும்பான்மையாகப் பேச்சு வழக்கில் ஆவதும் எழுத்து வழக்கில் ஆமும் பயன்படுத்தப் பெறுகின்றன.

# ஆகுபெயர்

எல்லாச் சொல்லும் பொருள் குறிப்பனவே ஆயினும் பொருள் குறிக்கும் திறம் வேறுபடுவதாய் உள்ளது. சொல் இருநிலையில் பொருள் குறிக்கும். ஒன்று, வெளிப்படையான பொருள். மற்றொன்று குறிப்புப் பொருள். சொற்கள் பல தொடர்ந்து வர அமையும் தொடரில் குறிப்புப்பொருள் காட்டும் சொற்களை ஆகுபெயர் என்கிறேம். அஃதாவது தனக்குரிய பொருளை உணர்த்தாமல் தன்னோடு இயைபுடைய பிறிதொன்றனை உணர்த்துவது ஆகுபெயராகிறது. ஒன்றன் பெயர் மற்றொன்றுக்கு ஆகி வருவதால் இது ஆகுபெயர் எனலாயிற்று.

> "ஆகுபெயர் என்ற பொருண்மை என்னை யெனின், ஒன்றன்
> பெயர் ஒன்றற்கு ஆய் நிற்றல்"

என விளக்குவார் இளம்பூரணர்.

> "யாதானும் ஓர் இயைபு பற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்கு
> ஆதல்"

எனத் தெளிவுபடுத்துவார் சேனாவரையர்.

> "ஆக்கவாகும் பெயர் ஆகுபெயராயிற்று."

என்பது மயிலைநாதரின் விளக்கம்.

தொல்காப்பியர்,

> **முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்**
> **சினையிற் கூறும் முதலறி கிளவியும்**
> **பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்**
> **இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்**
> **வினைமுத லுரைக்கும் கிளவியொடு தொகைஇ**
> **அனைமர பினவை ஆகுபெயர்க் கிளவி (தொல்.: சொல்.:110)**

என்றும்,

> **அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி**
> **உளவென மொழிப உணர்ந்திசி னோரே (தொல்: சொல்.: 113)**

என்றும்

> **கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்**
> **கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே (தொல்.சொல்.: 114)**

என்றும் விதிகளமைத்து ஆகுபெயரை விளக்குகிறார்.

**பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி**
**கருவி காரியங் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதை**
**தொன்முறை உரைப்பன ஆகு பெயரே (நன்.: 290)**

என்பது நன்னூலார் கூறும் ஆகுபெயர் குறித்த விளக்கமாகும். இவ்விரு ஆசிரியர்களின் விளக்கங்களின்படி ஆகுபெயர்,

1. முதலாகுபெயர்
2. சினையாகு பெயர்
3. இடவாகுபெயர்
4. காலவாகுபெயர்
5. குணவாகுபெயர்
6. தொழிலாகுபெயர்
7. அளவையாகுபெயர்
8. நிறையாகுபெயர்
9. சொல்லாகுபெயர்
10. தானியாகுபெயர்
11. கருவியாகுபெயர்
12. காரியவாகுபெயர்
13. கருத்தாவாகுபெயர்
14. விட்டவாகுபெயர்
15. விடாதவாகுபெயர்
16. உவமையாகுபெயர்
17. இருமடியாகுபெயர்
18. மும்மடியாகுபெயர்
19. நான்மடியாகுபெயர்
20. அடையடுத்தவாகுபெயர்
21. இருபெயரொட்டாகுபெயர்

எனப் பலவாறாக வகைப்படுத்தப் பெற்றுள்ளது

**1.முதலாகுபெயர்**

**தாமரை புரையுங் காமர் சேவடி** – இதில் தாமரை என்னும் முதற்பொருளின் பெயர் அதன் சினைப்பொருளாகிய மலருக்கு ஆதலாற் முதலாகுபெயராயிற்று.

**2.சினையாகு பெயர்**

**வெற்றிலை நட்டான்** – இதில் வெற்றிலை என்னுஞ் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்காதலாற் சினையாகு பெயராயிற்று.

**3.இடவாகுபெயர்**

**அகனமர்ந்து செய்யாளுறையும்** – அகமென்னும் உள்ளிடப் பெயர் அங்கிருக்கின்ற மனதிற்கு ஆதலால் இடவாகு பெயராயிற்று.

**4.காலவாகுபெயர்**

**காரறுத்தது** – இதில் காரென்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்து விளையும் பயிருக்கு ஆதலாற் காலவாகு பெயராயிற்று.

**5. குணவாகுபெயர்**

**நீலஞ் சூடினாள்** – நீலம் என்னும் நிறமாகிய குணப்பெயர் அதனையுடைய குவள்ளமலருக்கு ஆதலாற் குணவாகு பெயராயிற்று.

**6.தொழிலாகுபெயர்**

**வற்றலுண்டான்** – வற்றலென்னுந் தொழிற்பெயர் அதனைப் பொருந்திய உணவிற்கு ஆதலாற் தொழிலாகு பெயராயிற்று.

**7.அளவை யாகுபெயர்**

**காலாலே நடந்தான்**– காலென்னும் எண்ணலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட உறுப்பிற்கு ஆதலால் எண்ணலளவை யாகுபெயராயிற்று.

**8. எடுத்தலளவை யாகுபெயர்**

**இரண்டு வீசை தந்தான்** – வீசை என்னும் எடுத்தலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட பொருட்கு ஆதலால் எடுத்தலளவையாகு பெயராயிற்று.

**8. நீட்டலளவை யாகுபெயர்**

**நாழி யுடைந்தது** – தடியென்னும் நீட்டலளவைப் பெயர். அதனால் அளக்கப்பட்ட கழனிக்காதலால் நீட்டலளவையாகுபெயர்.

**9.சொல்லாகுபெயர்**

இந்நூற்குரை செய்தான்– உரையென்னுஞ் சொல்லின்பெயர் அதன் பொருளுக்காதலாற் சொல்லாகுபெயராயிற்று.

**10.தானி யாகுபெயர்**

விளக்கு முரிந்தது என்புழி விளக்கென்னுந் தானியின்பெயர் அதற்குத் தானமாகிய தண்டிற்கு ஆதலாற் றானியாகுபெயராயிற்று.

(விளக்கு – விளக்கும் ஒளியையுடைய பிழம்பு, தானி – தானத்தை யுடையது. தானம் – இடம்)

**11.கருவி யாகுபெயர்**

திருவாசகம் – அடையடுத்த வாசகமென்னு முதற் கருவியின்பெயர் அதன் காரியமாகிய ஒரு நூலிற்கு ஆதலாற் கருவியாகுபெயராயிற்று.

**12.காரியவாகுபெயர்**

இந்நூலலங்காரம் – அலங்கார மென்னுங் காரியத்தின் பெயர் அதனை யுணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்காதலாற் காரியவாகுபெயராயிற்று.

**13.கருத்தாவாகுபெயர்**

இந்நூல் வள்ளுவர் – திருவள்ளுவரென்னும் கருத்தாவின் பெயர் அவராற் செய்யப்பட்ட நூலிற்காதலாற் கருத்தாவாகுபெயராயிற்று.

**14.உவமையாகுபெயர்**

காளை வந்தான், பாவை வந்தாள் – காளை பாவை ஆகிய உவமைகள் அவற்றால் சுட்டப்பெறும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆகி வருதலாற் உவமை யாகுபெயராயிற்று.

**15.விடாதவாகுபெயர்**

கடுத்தின்றான், புளிதின்றான் – கடுவும் புளியஞ், சுவையாகிய தத்தம் பொருளைவிடாது நின்று தம்பொருளின் வேறல்லாத காய் கனி என்னும் பொருளை உணர்த்தலால், விடாதவாகுபெயராயிற்று.

**16.விட்டவாகுபெயர்**

அவ்வூர்வந்தது – ஊரென்பது, இடமாகியதன் பொருளைவிட்டுத் தன்னிடத்துள்ள மனிதரை யுணர்த்தலால் விட்டவாகுபெயராயிற்று.

**17.இருமடியாகுபெயர்**

புளிதின்றான் – புளியென்னுஞ் சுவைப்பெயர் அதனையுடைய பழத்திற்காதலால் ஆகுபெயர், புளிமுளைத்தது என்புழிப், புளியென்பது, சுவைப்பெயர் பழத்திற்காய்ப், பழத்தின்பெயர் மரத்திற்காதலால், இருமடியாகுபெயர்.

**18.மும்மடியாகுபெயர்**

கார்நிகர்வண்கை – காரென்னுநிறப்பெயர் அதனையுடைய மேகத்திற் காதலால் இருமடியாகு பெயர். காரறுத்தது என்புழிக், காரென்பது, நிறப்பெயர் மேகத்திற்காய், மேகத்தின்பெயர் பருவத்திற்காய், அப்பருவத்தின்பெயர் அதில் விளையும் பயிருக்கு ஆதலால் மும்மடியாகுபெயர்.

**19. அடையடுத்தவாகுபெயர்**

வெற்றிலைநட்டான், மருக்கொழுந்துநட்டான், அறுபதமூரலும் – இவற்றில் இலை, கொழுந்து, பதம் என்னுஞ் சினைப்பெயர்கள், முறையே வெறுமை, மரு, ஆறு என்னும் அடையடுத்து, முதற்பொருள்களுக் காதலால், அடையடுத்தவாகுபெயர்.

**20. இருபெயரொட்டாகுபெயர்**

வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்பன, ஒருபொருட்கு இருபெயரொட்டி நிற்க, அவற்றுள் ஒருபெயர் ஆகுபெயராக நிற்றலால், இருபெயரொட்டாகுபெயர். வகரக்கிளவியென்பதிற் கிளவியென்பது சொல்லை யுணர்த்தும் போது இயற்பெயர். சொற்குக் கருவி யாகிய எழுத்தை யுணர்த்தும்போது ஆகுபெயர். வகரக்கிளவி வகரமாகிய எழுத்து எனப் பொருள் படும். மக்கட் சுட்டென்பதிற் சுட்டென்பது நன்கு மதிப்பை யுணர்த்தும்போது இயற்பெயர். நன்கு மதிக்கப்படு தலையுடைய பொருளை யுணர்த்தும் போது ஆகுபெயர். மக்கட்சுட்டு மக்களாகிய நன்குமதிக்கப்படு பொருள் எனப் பொருள்படும்.

வெற்றிலை முதலியனவற்றைப் பொற்றொடி முதலியனபோல அன்மொழித் தொகைப் பெயரென்று கொள்ளலாகதோ எனின்; அன்மொழித் தொகைப்பெயர், செய்யுள் செய்யும் புலவன் ஒருவரை வியப்பு முதலிய காரணத்தினாலே தன்கூற்றாகவேனும் பிறர்கூற்றாகவேனும் பாடுமிடத்து அங்கங்கே வருவதன்றி, ஆகுபெயர்போல நியதிப்பெயராய் வருவதன்று; ஆதலால், ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் ஒன்றெனக் கொள்ளலாகாது. அங்ஙனமாயினும், ஆகுபெயரும் அன்மொழித் தொகைப்பெயருந் தம்பொருளுணர்த்தாது பிறிதொரு பொருளுணர்த்தலால் ஒக்குமாதலின், அவை தம்முள் வேற்றுமையாதோ எனின், ஆகுபெயர் ஒன்றன்பெயரால் அதனோடியைபு பற்றிய பிறிதொன்றை யுணர்த்தி ஒருமொழியிடத்து வருவதாம்; அன்மொழித்தொகை இயைபுவேண்டாது இருமொழியுந் தொக்க தொகை நிற்றலினாலே பிறிது பொருளுணர்த்தி இருமொழியிடத்து வருவதாம். இனி இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாட்டினை நன்னூல் உரையாசிரியர் வ.குமாரசாமிப் புலவர் கூறுமாறு காண்க:–

> "அன்மொழித்தொகை பிறிதுபொருளை இயைபு வேண்டாது உணர்த்து மென்றகருத்துத் தகுமோ தகாதோ என ஆராயுங்கால்; தாமரை புரையுந் தாள் என்பதில் தாமரை என்னும் ஆகுபெயர் இயைபுபற்றி மலரையுணர்த்தியது போல், தாழ்குழல் என்னும் அன்மொழித் தொகையிலும் குழல் என்பது இயைபுபற்றி அக்குழலையுடையாளை யுணர்த்திற்று. பான்மொழி என்னும் ஆகுபெயரிலும் அப்படியே உணர்த்திற்று. பிறவு மன்ன, இங்ஙனமாகவும் அன்மொழித்தொகை, இயைபுவேண்டாது. பிறிது

பொருளுணர்த்துமென்று கூறியது ஒக்குமோ ஒவ்வாதோ என்று ஆராய்ந்து துணிவது விவேகிகளுக்குக் கடனாம்.

இனி இந்த ஆகுபெயர்ச்சொற்கள் தம்பொருளை விட்டு நீங்காது நின்று தம்பொருளின் வேறல்லாத பொருளை யுணர்த்தலும், தம்பொருளைவிட்டுப் பிறிது பொருளுணர்த்தலும் ஆகிய இலக்கணத்தையுடைய விடாத ஆகுபெயரும் விட்ட ஆகுபெயரும் என இருவகை எனவும், அவற்றிற்கு உதாரணம் முறையே கடுத்தின்றான், புளித்தின்றான், தாமரைத் தாளினான் (எனவருமிவற்றில் தம்பொருளின் வேறல்லாத பொருள் காய் கனி மலர் என்பன ஆதலால்) விடாத ஆகு பெயரெனவும், குழிப்பாடிநேரிது, உயர்நிலந் துன்புற்றது (எனின் குழிப்பாடியென்னும் ஊரிலுள்ளோர் நேர்மை யிதுஎனவும், உயர்நிலத்துள்ள குடிகள் துன்புற்றன எனவும் இடத்தைவிட்டு இடத்து நிகழ்பொருளை யுணர்த்துதலால்) விட்ட ஆகுபெயரெனவும் பிறர்கூறுதலு முய்த்துணர்ந்து கொள்க.

**முதலிற்கூறுஞ்சினையறிகிளவியுஞ்**
**சினையிற்கூறு முதலறிகிளவியும்,**
**பிறந்த வழிக்கூறலும் பண்புகொள் பெயரு,**
**மியன்றதுமொழிதலுமிரு பெயரொட்டும்,**
**வினைமுதலுரைக்குங்கிளவியொடு தொகைஇ,**
**யனைய மரபினவேயாகுபெயர்க்கிளவி,**

எனவும்,

**அவைதாம்**
**தத்தம்பொருள் வயிற்றம்மொடுசிவணலு,**
**மொப்பில் வழியாற்பிறிது பொருள்சுட்டலு,**
**மப்பண் பினவேநு வலுங்காலை,**

எனவும்

**அளவுநிறையுமவற்றொடு கொள்வழி,**
**யுளவெனமொழிபவுணர்ந்தி சினோரே.**

எனவும்.

**கிளந்த வல்லவேறுபிற தோன்றினுங்,**
**கிளந்தவற்றியல் பாலுணர்ந்தனர் கொளலே.**

எனவும்,ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க."

இதனான் அன்மொழித்தொகைக்கும் ஆகுபெயர்க்கும் இடையே உள்ள வேற்றுமை புலனாம்.

■

# மூவிடப் பெயர்கள்

எண்ணுப் பெயர்கள், வேற்றுமையுருபுகள், வினையடிகள் போன்று பழமையான வடிவங்களாய்த் திகழும் தன்மை மூவிடப் பெயர்களுக்கும் உரியது. அவை என்றும் மாறா இயல்பின. மொழி என்பது காலப்போக்கில் மாறுந் தன்மை உடையதாயினும் மூவிடப் பெயர்கள் சிற்சில மாற்றங்களை மட்டுமே அடையத் தக்கன. ஏனைய பெயர்களைக் காட்டிலும் இப்பெயர்களே முன்தோன்றியிருக்க வேண்டுமென மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். சைகை மொழியாய்ப் பயன்படுத்தப் படுவதாலும் எளிதாய் எழுவனவாய் விளங்குவதானும் இப்பெயர்கள் ஏனைய பெயர்வடிவங்களைக் காட்டிலும் மிகப் பழமை வாய்ந்தது எனக் குறிப்பிடுவார் ப்ரில் என்னும் அறிஞர்[1]

தமிழ் மொழியினது இலக்கணச் சிறப்பே திணை, பால், எண், இடம், காலம் எனும் கூறுகளாகும். ஒரே வினைமுற்றுச் சொல் மட்டுமே இக்கூறுகள் அனைத்தையும் ஒருங்கே பெற்ற தன்னிகரற்ற பண்பினைக் கொண்டதாக விளங்கும். பாடினான் எனும் சொல் உயர்திணை – ஆண்பால் – ஒருமை – படர்க்கை – இறந்தகாலம் ஆகிய தன் விளக்கச் சொல்லாக விளங்குவதைக் காணலாம். இவற்றுள் இடப்பெயர் எனப்பெறும் மூவிடப் பெயர் திராவிடமொழிக் குடும்ப மொழிகள் அனைத்திலும் நிலைபேற்றினை உடையதாகக் காணப்பெறுகிறது. தன்மை முன்னிலை படர்க்கை என்னும் இம் மூன்று பெயர்களும் ஓரின மொழிகளுக் கிடையேயான தொடர்பினை உணர்த்துவனவாக விளங்கும் இன்றியமையாக் கூறாகும். பிற இலக்கணக் கூறுகளைப் போன்று இவையும் காலப்போக்கில் மாற்றமடையும் தன்னையுடையது. அம்மாற்றம் மிகச் சிறிய மாற்றமாகவே இருக்கும். மொழிகளின் பழமையைப் பாதுகாக்கும் கருவியாய் மூவிடப்பெயர் விளங்குகின்றது. தமிழ் மொழியின் தொன்மையைப் பறைசாற்றும் இடப்பெயர் ஒழுங்கான அமைப்பு முறையினைக் கொண்டதாகக் காணப்படுகிறது. வேற்றுமை உருபுகளை ஏற்குங்கால் அவை தன்னுரு திரிகின்றன.

---

1.The species of word which must first have been distinguished from all the others is,in my opinion, the Pronoun. I believe this to be the more primitive than the substantive, becuase it *demands less invention*, and because it is more instinctive, more easily explaines by gestures. We must not therefore allow ourselves to be led astray by the appellation

மூவிடப்பெயரினைக் கீழ்வருமாறு பாகுபடுத்தலாம்

| | | | |
|---|---|---|---|
| **தன்மை** | **தன்மை ஒருமை** | – | யான், நான் |
| | வேற்றுமை ஏற்கும் வடிவம் | – | என்– |
| | **தன்மைப் பன்மை** | | |
| | அ) உளப்பாட்டுத்தன்மைப்பன்மை | – | யாம்,நாம் |
| | வேற்றுமை ஏற்கும் வடிவம் | – | எம்–,நம்– |
| | ஆ) உளப்படாத் தன்மைப்பன்மை | – | நாங்கள் |
| | வேற்றுமை ஏற்கும் வடிவம் | – | எங்கள்– |
| **முன்னிலை** | **முன்னிலை ஒருமை** | – | நீ |
| | வேற்றுமை ஏற்கும் வடிவம் | – | நின்–<br>உன்– |
| | **முன்னிலைப் பன்மை** | – | நீம், நீர், நீயிர்,<br>நீவிர், நீங்கள் |
| | வேற்றுமை ஏற்கும் வடிவம் | – | நும்–,உம்,<br>நிங்கள்–,உங்கள்– |
| **படர்க்கை** | **படர்க்கை ஒருமை** | | |
| | ஆண்பால் | – | அவன், வளவன் |
| | பெண்பால் | – | அவள், கயல்விழி |
| | ஒன்றன்பால் | – | அது,மாடு, மரம் |
| | **வேற்றுமை ஏற்கும் வடிவம்** | | |
| | ஆண்பால் | – | அவன்–, வளவன்– |
| | பெண்பால் | – | அவள்–, கயல்விழி– |
| | ஒன்றன்பால் | – | அது–, மாடு–, மரம்– |
| | **படர்க்கைப் பன்மை** | | |
| | பலர்பால் | – | அவர், அரசர் |
| | பலவின்பால் | - | அவை, யானைகள்<br>மலைகள் |

வேற்றுமை ஏற்கும் வடிவம்

| | | |
|---|---|---|
| பலர்பால் | – | அவர்–, அரசர்– |
| பலவின்பால் | – | அவை–, யானைகள்–, மலைகள்– |

## தன்மை இடப்பெயர்

தமிழ்மொழியில் மட்டுமல்லாது பழந்தமிழிலிருந்து பிரிந்து வந்த குடும்ப மொழிகளான மலையாளம், தெலுங்கு, துளு, குடகு போன்ற மொழிகளிலும் தன்மையிடப் பெயர்களை ஒப்பிட்டுக் காணலாம்:

| மொழி | எண் | எழுவாய் வடிவம் | உருபேற்கத் திரிந்த வடிவம் | விகுதிகள் |
|---|---|---|---|---|
| தமிழ் | ஒருமை | யான், நான் | என் | என், ஏன்,அன் |
| | பன்மை | யாம், நாம், | எம், நம், | |
| | நாங்கள் | | எங்கள் | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| மலையாளம் | ஒருமை | ஞான் | என், ஏன் | ஏன் |
| | பன்மை | நாம், நோம், | எம், நோ, நோம், ஓம், நங்கள், ஞுங்கள் | எங்கள் |
| தெலுங்கு | ஒருமை | ஏனு, நேனு | நா, நன் | து, நி, வு, வி |
| | பன்மை | ஏமு, மேமு, மனமு | மா, மம், மன | மு, மி |
| கன்னடம் | ஒருமை | யான், ஆன், நானு,நா | என், நன் | என், ஏனு, ஏனெ, எ |
| | பன்மை | ஆம், ஆவு, நாவு | எம், நம் | எவு, ஏவு, ஏவெ |
| துளு | ஒருமை | யான் | யென், யென | எ |
| | பன்மை | எங்குளு, நம | எங்குளு, நம, நம் | அ |
| குடகு | ஒருமை | நன் | என் | அ, எ, உ |
| | பன்மை | நன்க, என்க | என்க | அ, இ, உ |

தமிழ்மொழியின்கண் பயின்றுவரும் மூவிடப்பெயர்தம் தொல்வடிவம் எண்ணி எண்ணி வியத்தற்குரியது. உருபேலாத இடப்பெயர்களையும் வேற்றுமை உருபேற்ற இடப்பெயர்களையும் மூவிட வினைமுற்று விகுதிகளையும் ஒப்பிட்டு நோக்க வேண்டும்.

## தன்மையிடப் பெயரின் தொல்வடிவம் எது?

யான் என்பது பழைய வடிவமேயாயினும் ஆன் என்பதும் தொல்வடிவமாய் உள்ள நிலையைக் காண முடிகிறது. இவ்விரண்டனுள் பழமையானது எது என்பதனை சில ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஆன் – யான் எனத் திரிவதனைக் காட்டிலும் யான் – ஆன் என்று திரிய மிகுதியான வாய்ப்புகள் உண்டு. சொல்முதல் யாகாரம் ஆகாரமாய்த் திரிந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

| | | |
|---|---|---|
| யார் | – | ஆர் |
| யாண்டு | – | ஆண்டு |
| யபறு | – | ஆறு |

இச்சான்றுகளின்வழி யாகாரம் எளிதில் திரியக் கூடிய ஒலி என்பது புலனாகிறது. யாவர் – எவர் எனத் திரிந்தமையும் காணக் கிடக்கிறது. ஆக, ஆன் என்பது யான் என்பதன் திரிபே. யாகாரம் எகரமாகவும் திரிந்தமையின் யான் என்னும் தன்மை ஒருமை வேற்றுமை உருபு ஏற்குங்கால் என் எனத் திரிகிறது. யான் – நான் என்னும் சொல்லுடன் கொண்டுள்ள தொடர்பினையும் இங்ஙனமே ஆராயலாம். இவ்ஆய்வு மொழிமுதல் ஒலிகளாகிய யா–, நா– என்பனவற்றின் தொடர்பினை ஆய்வதாகும். மொழிமுதல் நகரம் நிலைபேறின்றி ஒழிவதும் உண்டு. தமிழில் நீந்து என்னும் சொல்லானது தெலுங்கில் ஈது எனவும் ஞண்டு அல்லது நண்டு என்னும் சொல் அம்மொழியில் எண்டி எனவும் கன்னடத்தில் எண்ட்ரி எனவும் மாற்றம் பெறும் நிலையினைக் காண முடிகிறது.

தமிழ்மொழியில் யகரம் நகரமாய்த் திரிதல் என்னும் நிலையும் உண்டு. தமிழ்மொழிச் சொற்களைப் போன்றே வடமொழிச் சொற்களான யுகம்(நுகத்தடி என்னும் பொருளில் வழங்கும்) என்பது நுகம் எனவும் யமன் என்னும் சொல் நமன் எனவும் திரிகிறது. இச்சான்றுகளின் வாயிலாய் நகரத்தைக் காட்டிலும் யகரமே பழமையான வடிவம் என்பது புலனாகிறது. இம்முடிவினை மேலும் சான்றுகள் சிலவற்றைக் கொண்டு நிறுவ இயலும். தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற குடும்ப மொழிகளில் நான் என்னும் சொல் உருபேற்கும்போது என் என்ற வடிவினையே பெறுகிறது. என் என்பது நான் என்பதனின்றும் வந்தது என்று கூறுவதைக் காட்டிலும் யான் என்பதனின்றே வந்தது என்பதனை நிறுவ மேலும் சில சான்றுகள் காணக்கிடக்கின்றன:

**தமிழ்**

| | | |
|---|---|---|
| யாவர் | – | எவர் |
| யாங்கு | – | எங்கு |
| யாது | – | எது |

**பிறமொழி**

| | | |
|---|---|---|
| யஜமான் | – | எசமான் |
| யந்திரம் | – | எந்திரம் |

சொல்முதல் யகரம் எகரமாகப் பலவிடங்களில் திரிவதால் யான் என்பதே என் எனத் திரிந்துள்ளது என்பதனை உணர முடிகிறது. எனவே, யான் என்பது நான் என்பதனைவிட தொல்வடிவமாய் வழங்குகிறது. இருப்பினும் நான் என்பதனைப் புதிய வடிவமாய்க் கொள்ளவியலாது. இவ்விரு இடப் பெயர்களுமே பழமையான வடிவங்கள்தான். எனினும், யான் என்பது மிகப் பழமையானது எனக் கொள்ளவியலும். ஏனெனில், இவ்விரண்டனுக்குமே என் என்பதுதான் உருபேற்ற வடிவாகும். ஆனால், தன்மைப் பன்மைகளான யாம், நாம் என்னும் இடப்பெயர்களுக்கு எம், நம் என்னும் உருபேற்ற வடிவங்கள் காணப்படுகின்றன. நன் என்னும் உருபேற்ற வடிவம் காணப்படவில்லை. ஆனால், தமிழ்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் இவ்வடிவம் காணப்படுகிறது. பழந்தமிழிலிருந்து பிரிந்த பின்னரே இம்மொழிகளில் இம்மாற்றம் நிகழ்ந்துள்ளது.

## முன்னிலை இடப் பெயர்

பழந்தமிழ்க் குடும்பத்தில் முன்னிலை இடப்பெயர்கள் பெரும் ஆய்வுக்குரியன. தமிழின் இன மொழிகளான தமிழ், தெலுங்கு முதலான பல்வேறு மொழிகளிலும் இடம்பெறும் இப்பெயர்களை நோக்கின் இதன் பழைய வடிவத்தைக் கண்டறிய முடியும்.

| மொழிகள் | எண் | எழுவாய் வடிவம் | உருபேற்கத் திரிந்த வடிவம் | விகுதிகள் |
|---|---|---|---|---|
| தமிழ் | ஒருமை | நீ, நீய் | நின், நுன், உன் | ஆய், ஓய்,ஐ,இ |
| | பன்மை | நீர், நீயிர், நீவிர், நீங்கள் | நும், உம், உங்கள் | இர், ஈர், மின் |
| மலை. | ஒருமை | நீ | நின் | – |
| | பன்மை | நிங்கள், நீங்கள் | நிங்கள், நிம் | – |
| தெலுங்கு | ஒருமை | நீவு, நீ, ஈவு நீ, நின் | | வு, வி |
| | பன்மை | மீரு, ஈரு | மீ, மிம் | ரு, ரி |
| கன்னடம் | ஒருமை | நீன், நீ, நீனு | நின் | அய், இ,ஈ,ஈயெ, எ |
| | பன்மை | | நீம், நீவு | நிம் இர், இரி, ஈரி, அரி |

| | | | | |
|---|---|---|---|---|
| துளு | ஒருமை | ஈ | நின, நி | அ |
| | பன்மை | நீடுளு, ஈ | நிகுளு, ஈரெ | அர் |
| குடகு | ஒருமை | நின் | நின் | இய |
| | பன்மை | நின்க | நின்க | இர |

தமிழ்மொழியின்கண் காணலாகும் முன்னிலை ஒருமை இடப்பெயரின் தொன்மை ஆய்வுக்குரியதாகும். தமிழின் இனமொழிகளை நோக்கின் இவ்விடப் பெயர் பெற்றுள்ள பல்வேறு வடிவங்களை ஆய்வுக்குட்படுத்தலாம். அங்ஙனம் ஆயுங்கால் இப்பெயர்கள் பெற்றுள்ள பன்மை வடிவங்கள், உருபேற்ற வடிவங்கள், வினைமுற்று விகுதிகள் என அனைத்து வடிவங்களையும் கருத்தில் கொண்டு ஆய்தல் உண்மையை அறிய துணைபுரியும். முன்னிலை ஒருமை இடப்பெயரைப் பொறுத்தளவில் தமிழில் நீ என்னும் வடிவம் மட்டுமே காணப்படுகிறது. இம்மொழியில் தன்மை ஒருமையிடப் பெயராய் யான், நான் என்ற வடிவங்களே காணப்பெறுவதால் நீ என்னும் முன்னிலை வடிவமும் பழங்காலத்தில் நீன் என்றே வழங்கப்பட்டிருக்கலாம். தமிழில் முன்னிலை ஒருமையிடப்பெயரின் வேற்றுமை உருபேற்கத் திரிந்த வடிவமாய் நின் என்னும் மசொல் காணப்படுவதனையும் கருத்தினில் கொள்ள வேண்டும். இன்றும் பேச்சுவழக்கினில் தமிழ்க்கிளைமொழியினில் நீனு என முன்னிலைப் பெயர் அமைவதனைக் காணவியலும்.

தமிழ்மொழிதனில் நீன் வடிவம் இருந்தமை இவ்ஆய்வின்வழி உறுதியானாலும் இனமொழிகளின்கண் காணலாகும் ஈன் வடிவத்தையும் உற்றாய்தல் வேண்டும். நீ, ஈ என்னும் முன்னிலைகளை நா, ஆ என்னும் தன்மையிடப் பெயர்களோடு ஒப்பிட்டு நோக்குங்கால் நான் என்பதிலுள்ள மொழிமுதல் நகரம் மூலத்தோடு ஒட்டியதன்று; மெல்லினத்தின் சேர்க்கை பின்பு நிகழ்ந்திருக்கலாம். நீ என்பதிலுள்ள மொழிமுதல் நகரம் முன்னிலையிட வினைமுற்று விகுதிகளில் காணப்பெறவில்லை என்பதனை ஆய்வின்வழி அறியும்போது இதற்கான காரணத்தை முற்றிலும் உணரவியலும். எனவே, நகர மெய் ஈகாரத்தோடு வந்து பொருந்தியதாகவே கொள்ளப்படும் என்பதும் நீ என்பதனைக் காட்டிலும ஈ என்பதே பழமையானது என்பதும் உணரப்படும்.

எனினும், நீ என்பதனைப் பிற்கால வடிவமாயும் கொள்ளவியலாது. தமிழ்மொழியோடு அமைப்புமுறையினில் ஒற்றுமையுடைய மொழிக்குடும்பமான சித்திய மொழிகளில் நகரமே உள்ளது. பெகிஸ்தன் அட்டவணையில் காணப்படும் சித்திய மொழிநடையில் நி என்பதே முன்னில இடப்பெயராக உள்ளது. அதனோடு பழமைவாய்ந்த சீனமொழிகளிலும்

முன்னிலை இடப்பெயர் நி என்பதேயாகும். எனவே, தமிழ்மொழியிலும் நீ என்னும் வடிவம் பழமையான வடிவமேயாகும். எனினும், ஈ என்பதனைக் காட்டிலும் பழமையானது எனவும் கூறிவிட முடியாது. ஆக, நீ என்னும் முன்னிலை ஒருமை வடிவத்தில் இடம்பெற்றுள்ள உயிரான ஈகாரத்தையே தமிழ்மொழியின் மூலமாய்க் கொள்ளவியலும். ஆனால், அதன் தொல்லுருவம் யாது என்பதனையும் ஆய்ந்தறிதல் வேண்டும். தமிழ் மொழியிலும் அதன் இனமொழிகளிலும் இகரத்தின் வடிவோடு உகரத்தையும் காண்கிறோம். முன்னிலை இடப்பெயரின் உருபேற்காத எழுவாய்ப் பெயர்வடிவங்களில் இகரமும், அருபேற்கத் திரிந்த பெயர் வடிவங்களுள் நுன், உன், தும் , உம் ஆகியனவற்றில் உகரமும் காணப்பெறுகின்றன. உகரம் இகரமாய் மாறுதல் தமிழில் பலவிடங்களில் காணமுடியும்.

| | | |
|---|---|---|
| புலி | – | பிலி |
| புல் | – | பில் |

என்னும் சொற்களைப் பேச்சுத்தமிழில் காணலாம். இலக்கியத்தமிழைக் காட்டிலும் பேச்சுத்தமிழே மிகப்பழமையானது என்பதால் உகரத்தைக் காட்டிலும் இகரமே பழமைவாய்ந்தது எனக் கூறவியலும். எனவே, நுன், உன், நும், உம் ஆகியன நின், நிம் என்பனவற்றிற்குப் பின்பே தோன்றியிருத்தல் வேண்டும்.

மேற்காணும் ஆய்வுகளையும் கருத்துக்களையும் ஒருசேர நோக்கின் முன்னிலை ஒருமையிடப் பெயரில் இடம்பெற்றுள்ள மூலவடிவம் ஈ என்னும் வடிவமேயாகும் என்பது புலனாகும். எனினும், ஆய்வின்படி இவ்வுயிரும் இவ்வுயிர் ஏறிய நகரமும் (ஈ, நீ) ஆகிய இரு வடிவங்களுமே தமிழ்மொழியின் முன்னிலையிடப்பெயர்களாக தொன்மைக் காலத்தில் வழங்கியிருத்தல் வேண்டும் என்பதும் உணரப்படுகிறது.

## படர்க்கைப் பெயர்கள்

பழந்தமிழின் படர்க்கை இடப்பெயர்கள் (அவன், இவன், அவள், இவள் போன்றன) சுட்டுப்பெயர்களே. தான் என்னும் பன்மைப்பெயர் மூவிடப்பெயர்களின் தன்மைகள் அனைத்தையும் பெற்றிருப்பதோடு உருபேற்கும் நிலையினில் சுட்டுப்பெயர்கள் போன்றே திரிந்து வேறுபடுகிறது. இது தனித்து நின்று எழுவாயாக வருங்கால் படர்க்கை வினைமுற்றையும் கொண்டு முடியுமாதலின் இதனைப் படர்க்கை இடப்பெயராகவும் கொள்ளலாம். இதன் எழுவாய் வடிவம் ஒருமையில் தான்: பன்மையில் தாம், தாங்கள் என்பன. வேற்றுமை உருபேற்பதற்காகத் திரிந்த அளவிலேயே உடைமைப் பொருளை உணர்த்தும் திறம் பெற்றன இவ்வடிவங்கள் (தன் வீடு, தம் நிலம், தங்கள் குழந்தைகள்).பொருளை உணர்த்தும் திறம் பெற்றன இவ்வடிவங்கள் (தன் வீடு, தம் நிலம், தங்கள் குழந்தைகள்).

பழங்கன்னடத்தில் இதன் எழுவாய் வடிவம் தான் என்றும் கற்காலக் கன்னடத்தில் தானு என்றும் வழங்கப்படுகிறது. நானு என்னும் தன்மை வடிவத்தோடு நா என்பதனையும் நீனு என்னும் முன்னிலை வடிவத்தோடு நீ என்பதனையும் பெற்றிருப்பது போன்று தான் என்னும் படர்க்கை இடப்பெயரும் தா என்னும் வடிவத்தைப் பெற்றுள்ளது. தமிழ், கன்னட வடிவங்களை ஒத்துள்ளது தெலுங்கு மொழி. இம்மொழியில் தானு என்பது ஒருமையிலும் தாமு, தமரு, தாரு என்பது பன்மையிலும் வழங்கப்படுகின்றன. படர்க்கைப் பெயர்கள் உருபேற்கும்போது தன, தம என மாற்றுவடிவங்களைப் பெறுகின்றன. இவற்றையெல்லாம் நோக்குங்கால் படர்க்கை இடப்பெயரானது தா என்பதேயாகும். தான் என னகரம் பெற்று வழங்குவதும் பழமையான வடிவமேயாகும்.

தான் என்னும் சொல் பிறிதொரு பெயரோடு இணைந்து வழங்கப்பெறின் அது அப்பெயர் கொண்டுமுடியும் வினைமுற்றோடு ஒத்து நிற்கும். தெளிவும் உறுதியும் கருதி மூவிடப்பெயர்களோடு இணைந்து வழங்கப்பெறும். மூவிட ஒருமைப்பெயர்களோடு சேர்ந்து நான்தான், நீதான், அவன்தான், அவள்தான், அதுதான் என வரும். தாம் என்னும் பன்மைப்பெயரானது மூவிடப் பன்மைப் பெயர்களோடு சேர்ந்து நாம்தாம், நீவிர்தாம், அவர்தாம், அவைதாம் எனவும் வரும்.

தான், தாம் என்பன விரவுத்திணைக்குரியன என்பர்.

**தாம் என் கிளவி பன்மைக் குரித்தே**

**(தொல். எழுத்து.:184)**

**தான் என் கிளவி ஒருமைக் குரித்தே**

**(தொல். எழுத்து.:185)**

என ஒருமைப் பன்மை வேறுபாட்டினைக் காட்டுவர் தொல்காப்பியர்.

## தான், தாம் படர்க்கைப் பெயரே

சொற்கள் பல மூவிடப்பெயர்களைக் கொண்டே இணைந்துள்ளன. இவற்றினைப் பிரித்தால் தான், தாம் என்பன படர்க்கைக்கே உரியன என்பது தெளிவாகும். இப்பெயர்களின் உடைமைப் பொருளுணர்த்தும் வடிவம் வேற்றுமை உருபேற்பதற்காக்க் குறுகிய வடிவமாகிய தன் அல்லது தம் என்பதாம். இவ்விரண்டு வடிவங்களும் இவற்றின் மூல வடிவாகிய த என்பதும் தந்தை, தமையன், தங்கை போன்ற உறவுணர்த்தும் உண்மையான தமிழ்ச்சொற்களின் முன்னர் உயர்வு குறிக்கும் முன்னிணையாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலமாகத் தமிழில் அரிய தொகைச்சொற்கள் பல தோன்றுகின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| நம்பி | உம்பி | தம்பி |
| நங்கை | நுங்கை | தங்கை |
| எந்தை | நுந்தை | தந்தை |
| யாய் | ஞாய் | தாய் |
| எவ்வை | நுவ்வை | தவ்வை |
| எமக்கை | நமக்கை | தமக்கை |

தம்பிரான் என்னும் தொகைச்சொல்லில் தலைவன் என்னும் பொருள் தரும் பிரான் என்பதனோடு தம் என்பது முன்னிலையாய் வந்துள்ளது. இதுபோன்றே இப்படர்க்கைப் பெயரோடு எம், உம் என்பன சேர்ந்து எம்பிரான், உம்பிரான் எனவும் தொகைச்சொற்கள் ஆக்கச் சொற்களாய் உருவாகும்.

தந்தை என்னும் சொல் இலக்கியத் தன்மை வாய்ந்தது. இம் முறைப்பெயர் கன்னடத்தில் தந்தெ எனவும் தெலுங்கில் தண்ட்ரி எனவும் மலையாளத்தில் தந்த எனவும் வழங்கும். எம் தந்தை, நும் தந்தை என்னும் பொருள்படும் சொற்கள் தமிழ்மொழியில் தந்தை, நுந்தை என்றாகின்றன. இச்சொற்களில் எம், நும் என்பன முன்னிணைகளாக வருவது போலவே, தந்தை என்னும் சொல்லில் வரும் முன்னிணை தம் என்பதேயாகும் என்பதில் ஐயமில்லை. தன்னை, தள்ளை (தாய்) என்னும் பொருளதாகிய இச்சொல்லின்கண் அன்னை என்னும் சொல்லுக்கு இம்மூவிடப் பொதுப்பெயரின் மூலமாகிய த என்னும் சொல் முன்னிணையாகியுள்ளது.

தமக்கை (அக்காள்) என்னும் சொல் அக்கை எனவும் வழங்கப்படும். அக்கை என்னும் சொல்லுக்குத் தம் முன்னிணையாக வந்துள்ளது. இங்ஙனமே தன், தம் ஆகிய மூவிடப் பொதுப்பெயர் வடிவங்கள் முன்னிணையாக நிற்கத் தோன்றிய சொற்களுள் தமிழில் தம்பி, தங்கை, நம்பி எனவும் தமிழின் இனமொழியான குடகுமொழியினில் தம்மாவு (மாமன்), தம்மாவி (மாமி) ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

## மூவிடப் பொதுப்பெயரின் தொல்வடிவம்

தா, த அடியினையுடைய தான்–தாம், தன்,தம் என்னும் படர்க்கைக்கு மட்டுமே உரியதான இச்சொல் மூவிடப்பொதுப் பெயராகவும் விளங்கிய தன்மையை மேற்சுட்டிய பல்வேறு சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. தமிழ்மொழி மற்றும் அதன் இனமொழிகளினது மூவிடப் பொதுப்பெயரின் அடியாய் வரும் தா அல்லது த என்பன தூய தமிழ் மூலமே என்பது உண்மை. தான் என்பது தன் என உருபேற்கத் திரிந்த பின்பு தன்மை அல்லது இயல்பு என்னும் பண்புப்பொருளை உணர்த்தும் தன்மை அல்லது தனம் என்ற சொல்லைத் தோற்றுவிக்கிறது. இவ்வுறவுகள்

மொழிவரலாற்றில் நனிமிகப் பழங்காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்ல வல்லதாய் விளங்குகின்றன. தாம், தான் என்னும் இடப்பெயர்களில் உள்ள தகரம் இன்றும் அழியாது நிலைபெற்றுள்ளது. அவ்வடிவம் என்றும் அழியாத் தன்மை வாய்ந்ததாகும்.

## படர்க்கையின் பல்வேறு வடிவங்கள்

பழந்தமிழில் தான், தாம் என இருவகையாக மட்டுமே காணப்பட்ட படர்க்கை வடிவங்கள் தற்போது ஐவகைப் பாலுணர்த்தும் சுட்டுப்பெயர்களாகிய அவன், அவள், அவர், அது, அவை என்னும் வழக்குகளைப் பெற்றுள்ளன. சங்கத் தமிலேயே இச்சுட்டுப்பெயர்கள் தான், தாம் என்பனவற்றிற்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என வழங்கும் ஐவகை படர்க்கை இடப்பெயர்கள் மரியாதைப் பன்மையைக் குறிக்கும் ஒருமை என்னும் வடிவத்தையும் பெற்று அறுவகையாய் அமைந்துள்ளன. இம்மரியாதைப் பன்மை இக்காலச் சிறப்பு வளர்ச்சியாகும். எனினும், இவ்வடிவம் சங்கப்பாடல் உரைகளில் காணப்படு கின்றது. புறநானூற்றிற்குரிய பழைய உரைகளில் *அவனை அவர் பாடியது* என வரும். அவன் என்னும் படர்க்கைச் சொல் அரசனையும் அவர் என்பது புலவரையும் குறிப்பிடும் சுட்டுப்பெயர்களாகும். இவண் அவர் என்பது ஒருமையாய் இருப்பினும் மரியாதைப்பன்மைக் குறித்து அர் விகுதியைப் பெற்றுள்ளது. தற்காலப் பேச்சுவழக்கினில் படர்க்கை இடத்தை எண் வகையாய்ப் பகுக்கலாம்:

**உயர்திணை**

1) ஆண்பால் ஒருமை
2) ஆண்பால் பன்மை
3) பெண்பால் ஒருமை
4) பெண்பால் பன்மை
5) மரியாதைப் பன்மை
6) உயர்திணைப் பன்மை

**அஃறிணை**

7) அஃறிணை ஒருமை
8) அஃறிணைப் பன்மை

## மூவிடப்பெயர்களும் திணைபால் இயைபும்

பெயர்ச்சொல்லுடன் வினைமுற்று இயைந்து வருவது என்பது தமிழ்மொழி மற்றும் அதன் இன மொழிகளுக்கான பண்பாகும். பெயர்ச்சொல் ஏற்கும் திணையையும் பாலையும் வினைமுற்றும் ஏற்றுவரும். இம்மூவிடப்பெயர்கள் தாம் சேர்ந்து வரும் வினைமுற்றோடு இயைந்து வரும்

தன்மையினை உடையதாக விளங்குவதால்தான் அவை திணை, பால், எண், இடம் ஆகியன உணர்த்தும் பண்பினைப் பெறுகின்றன.

| | | |
|---|---|---|
| உயர்திணை ஆண்பால் ஒருமை | – | அவன் வந்தான் |
| உயர்திணைப் பெண்பால் ஒருமை | – | அவள் வந்தாள் |
| உயர்திணைப் பலர்பால் | – | அவர் வந்தார் |
| அஃறிணை ஒருமை (ஒன்றன்பால்) | – | அது வந்தது |
| அஃறிணைப் பன்மை(பலவின்பால்) | – | அவை வந்தன |

படர்க்கை வினைமுற்றுக்களில்தான் திணையும் பாலும் வெளிப்பட்டு நிற்கும். தன்மை, முன்னிலைப் பெயர்கள் ஒருமைப் பன்மை மட்டுமே உணர்த்தும் தன்மையைப் பெற்றன. ஆனால், இடப்பெயர்களை எழுவாய்ப் பெயர்களாய்க் கொண்டிலங்கும் தொடர்களில் இடம்பெறும் பயனிலைகளான வினைமுற்றுக்கள் அனைத்தும் திணைபால் இயைபுடைய சொற்களே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தொல்காப்பியத்தின்கண் உயர்திணை, அஃறிணைக்குரிய சொற்களைக் குறிப்பிடும் தொல்காப்பியர்,

**இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவி (தொல். 646)**

எனப் படர்க்கைப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். மேலும்,

அவன் இவன் உவன்என வரூஉம் பெயரும்
அவள் இவள் உவள்என வரூஉம் பெயரும்
அவர் இவர் உவர்என வரூஉம் பெயரும் **(தொல். 647)**

என உயர்திணைப் படர்க்கைப் பெயர்களையும்,

**அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்**
**அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்**
**அவைஇவை உவைஎன வரூஉம் பெயரும்**
**அவை முதலாகிய வகரப் பெயரும் (தொல். 652)**

என அஃறிணைப் படர்க்கைப் பெயர்களையும் பெயர்ப் பாகுபாடுகளைக் குறிப்பிடுமிடத்துக் குறித்துச் செல்கிறார்.

பெயரியலில் உணர்த்தப்படும் அனைத்துப் பெயர்ப்பாகுபாடுகளின் வகைப்பாட்டினுள் அடங்கும் பெயர்கள் அனைத்துமே மூவிடப்பெயர்களுள் ஒன்றாகிய படர்க்கைப் பெயர்களையே குறிப்பிடுகின்றன என்பது ஆய்ந்துணரின் தெற்றென விளங்கும்.

## மூவிடப்பெயர்களின் சிறப்புக்கள்

தமிழ்மொழிக்கண் பயின்றுவரும் மூவிடப்பெயர்கள் மாற்றுப் பெயர்களாய் ( Pronouns Substitutes) விளங்குகின்றன. பதிலிடு பெயர்கள் (Substitutes) எனவும் பதிற்பெயர்கள் எனவும் அவை வழங்கப்படுகின்றன.

குறித்த பொருட்களுக்குரிய பெயராய் அமையாமல் அவற்றினுக்கு ஈடாய் நின்று மாற்றுப்பெயர்களாய் பொருளுணர்த்தும் பெயர்களே இம்மூவிடப் பெயர்கள். இவை எளியன; நுண்பொருளன; வழக்கத்தில் உள்ளன; மொழியில் தொன்றுதொட்டு பயின்று வருவன. பழமையான மொழிகளின் சிறப்பினையும் தொன்மையினையும் மொழியினங்களின் உறவினையும் புலப்படுத்தும் விதமாக இம்மூவிடப்பெயர்கள் விளங்குகின்றன.

# பெயர்ச்சொல்லின் செறிவு

தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்குங்கால் இலக்கண வாசிரியர்கள் தமிழ் மொழியைக் காத்தோம்பி, அவ்வக் காலக்கட்டத்தில் அம்மொழி அடைந்த வளர்ச்சி நிலைகளை உரைப்பவராகவும் உயர்ந்தோங்கிய இலக்கண இலக்கிய வளங்களை விளம்புவராகவும் விளங்குகின்றனர். தமிழரின் பண்பாடு, கலை, சமயம், நாகரிகம் ஆகியனவற்றின் அருமை பெருமைகளை வெளிக் கொணர்ந்து, இன்றமிழ் சான்றோர்களாக விளங்கிய சிறப்பு அவர் தமக்கே உரியதாகும். அத்தகைய உயர்வான இலக்கண நூல்கள் இல்லையெனின், எல்லையற்ற கருவூலங்களாம் நம் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களின் இனிமை, புலமை, நுட்பம் ஆகியவற்றை எங்ஙனம் நாம் எளிதாய் உணர்ந்திருத்தல் கூடும்?

இங்ஙனம் தமிழ்ப்புலமையைப் பலவாறாகப் பறை சாற்றும் இலக்கணக் கருத்துக்கள், கொள்கைகள் காலந்தோறும் வழிவழியாக வாய்மொழியாக உரைக்கப்பட்டு, ஒரு காலகட்டத்தில் ஓலைச்சுவடியில் எழுதப்பெற்றன.மரபு வழியாக உரைக்கப்பட்டு வந்த இவ்விலக் கணங்கள் வாழையடி வாழையாகக் கூறுவோர் கூற, கேட்போர் கேட்டு முன்னோர் மொழிந்தவற்றைப் பின்னோர் கூறி, அவ்வக் காலகட்டத்தில் தம் கருத்துக்களைக் கூறுவோரும் கேட்போரும் கூட்டியும், குறைத்தும் மறுத்தும் வினாவிடையாகவும் விளக்கமாய் விளம்பி வந்தனர்.அவர்தம் இலக்கண நுட்பங்களை வெளிப்படுத்து வதும் அப்புலப் பாட்டிற்கு அவ்விலக்கண ஆசிரியர்கள் பயன்படுத்திய பொருத்தமான பெயர்ச்சொற்களும் அவை உணர்த்தும் உரிய பொருட்களும் தமிழ்மொழிதம் வளமையினை வான்புகழ எடுத்துக் காட்டும் சான்றுகளாய் விளங்கும்.

வாய்மொழியாக வழங்கப்பட்ட தமிழ் இலக்கணங்கள் ஏட்டில் எழுதப்பட்ட நிலையிலும், வினா–விடை அதாவது மாணவர் ஐயங்களை எழுப்ப, ஆசிரியர் அவ்வையங்களைக் களையும் பொருட்டு மாணவருக்கு விடையளிக்கும் போக்கினில் அமைந்திருந்தன.

## மூலங்களும் புரிதலும்

பண்டு தொட்டு, வெவ்வேறு காலகட்டங்களில் தோன்றிய இலக்கண – இலக்கியங்களை, அவ்வக்கால கட்ட மக்கள் புரிந்து கொண்டிருந்தனர். உரையில்லாத மூலநூல்களையே படித்தும் இன்புற்றிருந்தனர். இக்கருத்தைப் புலப்படுத்த வந்த சேனாவரையர் மரபியலில் (மரபியல் :98) 'உரையன்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டு' என

மொழிகிறார். மூலநூல்களைக் கற்றுப் புரிந்து கொண்ட காலகட்டங்களும் உண்டு என்பதைத் தம் உரையின் மூலம் புலப்படுத்தியுள்ளார்.

## புலமைத்திறன்

இலக்கணவாசிரியர்கள் பலர் பல்திறப் புலமைத்திறன் வாய்க்கப்பெற்ற பல்துறை வல்லுநர்களாகவும் விளங்கினர். அவர்களுள் சிலர் நூலாசிரியர்களாகவும், நூற்கற்பிக்கும் நல்லாசிரியர்களாகவும், அறிவுக்கொடை வழங்கும் ஞான ஆசிரியர்களாகவும் திகழ்ந்து பல்வேறு திறன்களைத் தம்மையறியாமல் வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

இலக்கணச் சான்றோர் ஒவ்வொருவரும் கலைபல கற்ற கருத்துக் கருவூலமாக விளங்குகின்றனர். இத்தகையவரை 'தமிழ் மீட்ட தகுவேந்தர்கள்' என்றே கூறலாம். இடைக்காலத்தில் தமிழ் மொழியானது வடமொழியின் ஆதிக்கத்திற்குட் பட்டிருந்த போது, பண்டைத்தமிழின் சிறப்பை எண்ணி, அம்மொழியை மீட்கும் போராட்டத்திலும், புலவரல்லாத மற்றையவரும் பெருநூல்களைக் கற்கும்படி எளிய தமிழை உண்டாக்கவும் இப்பெரியோர் பாடுபட்டு வந்து தமிழ்மொழியினை வளர்த்து வந்த தமிழ்ப் பண்பாட்டுக் காப்பகமாக விளங்கி வந்தனர்.

## பொற்காலம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பழம்பெருமை வாய்ந்த இலக்கண - இலக்கியப் படைப்பாளியர்க்கு நனிச்சிறப்பு எக்காலத்திலும் உண்டு. அத்தகைய பெருமையும் பழமையும் புகழும் ஒருசேர வாய்க்கப்பட்ட அச்சான்றோர் ஆழ்ந்த ஈடுபாட்டுடனும், ஆர்வத்துடனும் மூல நூல்களை முன்னோர் வகுத்த வழியிலே நின்று அவ்வக்கால மொழியினது வளர்ச்சி நிலையினைப் பதிவாக்கும் பண்பாட்டுப் பெட்டகங்களாய் விளங்கியுள்ளனர். அவர்தம் மொழித்திறன் உள்ளி உள்ளி உளம் மகிழும் பெற்றியது.

பழமையான இலக்கண - இலக்கியங்கள் படைக்கப் பட்ட பண்டைக்காலம் முதல் தற்காலம் வரை தமிழ்மொழிக்கண் பயின்று வரும் எண்ணற்ற சொற்களின் களஞ்கியங்களாய் இவ்விலக்கண வாசிரியர் சிறப்புற்று விளங்கி வருவாராயினர். பழங்காலத்தையும் இக்காலத்தையும் இணைக்கும் உறவுப் பாலமாக விளங்குபவர் இச்சான்றோர். இங்ஙனம் சிறப்புடைய அவர்தம் இலக்கண நூல்கள் சற்றேறக்குறைய கி.மு. 3—ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 21—ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்தன. இடையினில் சில காலமாகக் குறிப்பிடும்படியான அரிய படைப்புகள் எதுவும் தோன்றியிருக்கவில்லை. பல்வேறு காலகட்டங்களில் எழுந்த சொற்களின் பதிவு நூற்களாய் சான்றோர்தம் இலக்கணங்கள் பல விளங்கின.

இலக்கண வரலாற்றை நோக்குங்கால் தமிழ் மொழியில் கிடைக்கப்பெறும் இலக்கண நூல்களுள் மிகப் பழமை வாய்ந்த நூல் தொல்காப்பியமேயாகும். தமக்கு முன் தோன்றி இலக்கண நூல்களின் கருத்துக்களைப் போற்றியும், தமக்குப் பின்னெழுந்த இலக்கியப் பெட்டகமாம் சங்க இலக்கியங்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டி யாகவும் அமைந்த பேரிலக்கண நூலாம் தொல்காப்பியம்.

தம் காலத்தில் வாழ்ந்த தமிழ்மொழியினது தமிழ் எழுத்துக்கள் பற்றியும்,தமிழ்ச்சொற்கள் குறித்தும் தொடரியல் மட்டுமல்லாது அச்சொற்களும் தொடர்களும் உணர்த்தும் பொருள் குறித்தும் கொண்டிருந்த கருத்துக்களின் பதிவாகவே தொல்காப்பியம் விளங்குகின்றது. அப்பெருநூலின் கருத்துக்களை அனைவரும் அறியுமாறு உணர்த்திய பெருமை அந்நூலின்கண் இடம்பெற்றுள்ள சொற்களையே சாரும். இவ்விலக்கணச் சொற்களின் பொருட்களைப் புலப்படுத்திச் சிறப்பித்த பெருமை அவ்வக்கால உரையாசிரியர்களுக்கு உரியதாகும்.

இளம்பூரணாரால் தொடங்கப்பட்ட தொல்காப்பிய உரைப்பணி சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோரால் தொடரப்பட்டு பழங்கால உரைகளாக இவர்தம் உரைகள் இலக்கண மரபைப் பறை சாற்றுகின்றன. பதினேழாம் நூற்றாண்டில் தொடங்கப் பட்ட தொல்காப்பிய உரைவளம் மீண்டும் சிவஞான முனிவர், அரசன் சண்முகனார் போன்றோரால் வளர்க்கப்பட்டு, இருபதாம் நூற்றாண்டில் டாக்டர் ச.சோமசுந்தர பாரதியார், பின்னங்குடி ச.சுப்பிரமணிய சாஸ்திரியார் இளவழகனார், சி.கணேசையர், ஞா.தேவ நேயப்பாவாணர், ஆ.பூவராசம் பிள்ளை, கு.சுந்தர மூர்த்தி, மு.இராகவ ஐயங்கார், கா.சுப்பிரமணிய பிள்ளை, கி.வா.ஜகந்நாதன், வெங்கடராஜுலு ரெட்டியார், க.வெள்ளைவாரணன், லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார், சி.இலக்குவனார், ந.சுப்புரெட்டியார், புலவர் குழந்தை ஆகியோரால் ஆய்வுரையாகவும், விளக்கவுரையாகவும் பரிணாம வளர்ச்சியடைந்து, தமிழ் இலக்கண மரபுக்குப் பேரொளியாக விளங்கி வருகிறது எனக் கூறின் மிகையாகாது.

## தொல்காப்பியரின் பெயர்ச்சொல் ஆளுமை

தமிழ் இலக்கண உலகில் ஒல்காப்புகழ் தொல்காப்பியத்திற்குப் பலர் உரை செய்தாராயினும், அவற்றுள் பீடும் பெருமையும் கொண்டு, தொல்காப்பிய சொல்லதிகார உரைசெய்து பலர் போற்றுதலுக்கு இன்றுவரை ஆளாகியுள்ள செந்தமிழ்ப் புலமை பெற்ற சேனாவரையர் உரையே உயர்ந்ததோர் பெட்டகமாகக் கருதப்பட்டு வருகின்றது. சொல்லதிகாரம் ஒன்றனுக்கு மட்டும் உரை செய்திருப்பாராயினும், எழுத்ததி காரத்தையும், பொருளதிகாரத்தையும் நோக்கும் சேனா வரையர்தம் அரிமா நோக்கு தொல்காப்பியரின் பரந்த அறிவினுக்குச் சான்றாக அமைவதை உணரலாம்.

சிவஞான முனிவரும் தமது தொல்காப்பியச் சூத்திர விருத்தியுரையில் சேனாவரையரை மிகமிகப் போற்றி "வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்" எனப்பாராட்டி, "எழுத்ததி காரத்திற்கு உரை செய்தார் ஆயின் இன்னோரன்ன பொருளனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர்" என்றும் தொடர்ந்து எழுதுகின்றார். தொல்காப்பியம் போன்ற பழமையான இலக்கண நூல்கள் வழங்கும் சொற்களஞ்கியத்திற்கு எளிமையாய் உரை வகுக்கும் திறம் பெற்றோர் இவ்வுரையாசிரியர்கள். நவில்தொறும் நூல்நயம் போல அவர்தம் உரையைக் கற்குந்தோறும் கற்கண்டென இனிக்கும்; ஆழ்ந்த புலமை அனைவரையும் பிரமிக்க வைக்கும்; இலக்கண நூல்களில் பயின்று வரும் ஒவ்வொரு சொல்லும், சொற்றொடரும் இலக்கண வாசிரியர்தம் இலக்கண நுட்பத் திறனைப் பறைசாற்றுவதாக எங்ஙனம் அமைகிறதோ அங்ஙனமே அச்சொற்கள்தம் சிறப்பினையும் தொன்மையினையும் எடுத்தோதும் உரையாசிரியர்தம் உரை மாண்பினையும் எடுத்தியம்பும்.

பழந்தமிழில் எழுந்த இலக்கணநூல்களை ஆழ்ந்த அறிவுடன் கற்று உள்ளம் பறிகொடுத்து உவகையுடன் பாராட்டுதல் நலம் பயக்கும். இவ்விலக்கண நூல்கள் செறிவும், சுருங்கச் சொல்லி உய்த்துணர வைக்கும் இயல்பும் உடையன; இந்நூற்களுக்கு உரை வகுத்த உரையாசிரியர்கள் ஆற்றல் வாய்ந்த சொற்களைப் பயன்படுத்தித் தருக்கநூல் முறை வழுவாமல் தடைவிடைகள் பல எழுப்பி, பிற உரையினை மறுத்தும் கருத்தை நிலைநாட்டுவாராயினர். பழந்தமிழ் இலக்கண நூல்களும் அவற்றிற்கான உரைகளும் தமிழ்மொழியின்கண் காணப்படும் பெயர்கள் பலவற்றின் இலக்கணச் செறிவினைப் புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது. இந்நூல்களைக் கற்கும்போது, சிங்க நோக்காக நூலின் முன்னும் பின்னும் நோக்கி, அவற்றை நன்கு நினைவில் கொண்டு கற்க வேண்டிய பகுதிகள் பல இருப்பதை உணரலாம். தூய தமிழ்நடை, பீடு குறையாமலும் பொருள் தெளிவுடனும் இனிய கருத்தோட்டத்துடனும் நூல்

முழுமையும் அமைந்துள்ள திறம் எண்ணியெண்ணி வியக்கத்தக்கதொன்றாகும்.

## இரட்டைக் கிளவி

இலக்கணத்தையும் இலக்கியச் சுவைபடக் கூறும் தொல்காப்பியனாரின் சொற்பயன்பாட்டினையும் பெயர்ச்சொல் திறனையும் பலவிடங்களில் உறுதிப்படுத்துகிறார் சேனாவரையர்.

**"இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா"**
**(தொ.சொ.கிளவி:48)**

என்ற நூற்பாவினுக்கு 'இரட்டித்து நின்று பொருளுணர்த்துஞ் சொற்கள் இரட்டித்து நிற்றலின் பிரிந்து நில்லா என்றவாறு' என உரை தரும் சேனாவரையர், 'ஈண்டு இரட்டைக்கிளவி என்றது, மக்களிரட்டை விலங்கிரட்டை போல வேற்றுமை உடையவனவற்றையன்றி இலை யிரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையன வற்றை என்றுணர்க' என சிறந்ததொரு சுவைபடும் உரைவிளக்கமும் தருகிறார்.

சேனாவரையர் கூற்றுப்படி குறுகுறுத்து என்ற தொடரைக் குறுத்தது எனப் பிரித்துப் பொருள் கொள்ள இயலாது. ஏனெனில் குறுகுறுத்தது என்பது மிகக்குறுத்தது என்னும் பொருளில் வருதலின் குறுத்தது குறுத்தது என மொழியும்போது அப்பொருளையே தாராமையின் இது போன்ற கிளவிகள் ஒரு சொல்லாய் நின்றே பொருள் தருவன. சொல் பிரிந்து சொல் முழுவதும் இருமுறை வாராமையான் அடுக்குத் தொடரும் அன்று. எனவேதான், இரட்டைக்கிளவி என்பது இரட்டை மக்களினை அல்லது இரட்டை விலங்கினைப் பிரிப்பது போன்று பிரித்தரியலாகாது எனவும், இரட்டைப் பூக்கள் அல்லது இரட்டை இலைகளைப் பிரிக்க இயலாவாறு இரட்டைச் சொற்களையும் பிரிக்க இயலாது என்பதைச் சுவைப்படக் கூறுமிடம் நோக்கத்தக்கது. இரட்டைக்கிளவி என்னும் இலக்கணக் கூறினுக்குத் தொல்காப்பியரால் பெயரிடப்பட்ட இப்பெயர்ச்சொல்லினது பொருட் திறம் ஆழமுள்ளதாய் விளங்குவதனைக் காணவியலுகிறது.

## இரண்டன் வேறுபாடுகளை விளக்குமிடங்கள்

இருவழக்குகளை வேறுபடுத்தி விளக்கும் இடங்களில் மிகத்தெளிவுடன் தன் தாம் கற்ற கல்வி ஆழத்தினையும் சொற்செறிவினையும் கையாண்டுள்ளார் தொல்காப்பியர்..

(அ) உரிச்சொல் இலக்கணத்தில் பயன்படுத்தும் பெயர்ச்சொற்கள் – குறிப்பும் பண்பும்

பொதுவாய்ச் சொற்களுக்கு இலக்கணங் கூறுங்கால் சொற்களனைத்தும் பொருளுணர்த்துவன எனக் கூறி உரிச்சொல்லுக்குப் பொதுவிலக்கணம் கூறும் தொல்காப்பியர்,

**உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை**
**இசையினும் குறிப்பினும்பண்பினும்தோன்றிப்**
**பெயரினும் வினையினும் மெய்தடுமாறி**
**ஒருசொற் பலபொருட்கு உரிமை தோன்றினும்**
**பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்**
**பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்**
**தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்**
**எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.**

**(தொ. சொ. உரி.: 297)**

இதற்கு உரைவகுத்த சேனாவரையர், "இசை குறிப்புப் பண்பு என்னும் பொருளவாய்ப் பெயர்வினை போன்றும் அவற்றிற்கு முதனிலயாயுந் தடுமாறி, ஒரு சொல் ஒரு பொருட் குறித்தாதலேயன்றி, ஒரு சொல் பல பொருட்கும் பல சொல் ஒரு பொருட்கும் உரியவாய் வருவன உரிச்சொல்லென்றும், அவை பெயரும் வினையும்போல ஈறுபற்றிப் பொருளுணர்த்தலாகாமையின், வெளிப் படாதவற்றை வெளிப்பட்டவற்றொடு சார்த்தித் தம்மையெடுத்தோதியே அப்பொருளுணர்த்தப் படுமென்றும், உரிசொற்குப் பொதுவிலக்கணமும் அவற்றிற்குப் பொருளுணர்த்து முறைமையு முணர்த்தியவாறு" என்றுரைத்து.

'குறிப்பு – மனத்தால் குறித்துணரப்படுவது'

'பண்பு – பொறியால் உணரப்படும் குணம்'

எனக் குறிப்பினை மனதால் மட்டுமே உணரத்தக்கது எனவும் பண்பினை மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாலும், உணரத்தக்கது எனவும் குறிப்பினுக்கும் பண்பினுக்கும் வேறுபாட்டினைத் தெளிவுற எடுத்தோதிய பான்மை மிகவும் போற்றத் தக்கது. இவண் தொல்காப்பியர் பயம்படுத்தும் இரு பெயர்ச்சொற்கள் குறிப்பு, பண்பு என்பன. எத்தகு பொருட்செறிவும் கருத்தாழமும் கொண்டதாய் விளங்குகின்றன இச்சொற்கள்.

■

# பெயர்ச்சொல் மாண்பு

**எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே (தொ சொ.: 640)**

என்னும் தொல்காப்பியரின் கூற்றுப்படி அனைத்துச் சொற்களும் பொருளுணர்த்தும் திறம் பெற்றன. அங்ஙனம் பெற்றிருப்பினும் சில பெயர்ச்சொற்கள் ஒன்றனுக்கு மேலான பொருட்களையும் பெற்றுத் திகழ்வன. பலபொருளுணர்த்தும் பெயர்ச்சொற்கள் பல தமிழின்கண் காணப்படும் நிலையினைத் தொல்காப்பியரே பலவிடங்களில் குறிப்பிட்டுச் செல்கிறார். குறிப்பிட்ட சொல்லுக்கான பொருளைத் தவறாகப் பயன்படுத்திவிடுதலாகாது எனத் தானே அச்சொற் களுக்கான பொருளை உரியவிடத்தில் கூறிச் செல்கிறார். விசை என்னும் சொல்லுக்குப் புணர்ச்சி நிலையினைக் கூறுமிடத்து,

**விசைமரக் கிளதவியும் ஞெமையும் நமையும்**
**அவைமுப் பெயரும் சேமர இயல (தொ.சொ.: 282)**

என்னும் நூற்பாவினில் விசை என்னும் சொல் இவண் மரத்தையே குறிக்கிறது என்பதனைப் புலப்படுத்துகிறார். இத்தகு பெயர்ச்சொற் களுக்கான பொருள் மயக்கத்தை நீக்க அக்குறிப்பிட்ட சொல்லுக்கான இனத்தையும் சார்பினையும் நோக்க வேண்டும் என்கிறார். **இனம் – சார்பு** என்ற இவ்விரு கிளவிகளுக்கிடையேயுள்ள வேற்றுமையினைப் புலப்படுத்த வந்த சேனாவரையர் (கிளவியாக்கம் – 53) 'இனத்தொரு சார்பிடை வேற்றுமை என்னை எனின், ஒரு சாதிக்கண் அணைந்த சாதி இனமெனப்படும்;. அணைந்த சாதியின்றி ஒருவாற்றான் இயைபுடையது சார்பெனப்படும் என்பது' எனக் கற்போர் உளம்புகுமாறு உரைக்கும் திறன் வியக்கத்தக்கது.

இக்கருத்தினுக்கு முன்னர் வந்த நூற்பாவினுள் (கிளவியாக்கம் – 52) பலபொருளொருசொல் குறித்து மொழிந்த தொல்காப்பியர்,

**வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்**
**வினைவேறுபடாஅப் பலபொரு ளொருசொலென்**
**றாயிரு வகைய பலபொரு ளொருசொல்**

எனப் பலபொருள் ஒரு சொல்லினை இருவகைப் படுத்துகிறார்.

## (1) வினைவேறுபடும் பலபொருளொரு சொல்

முதல்வகையை விளக்குமிடத்தில், பலபொருளை உணர்த்த வரும் ஒரு சொல் வெவ்வேறு வினைகளைப் பயனிலையாகக் கொண்டு அமையும் எனக் கொள்ளலாம்.

**(எ.கா) மா** என்ற பலபொருளொரு சொல்

இவண் மா என்பது மாமரத்தினையும், குதிரையினையும், வண்டியினையும் குறிக்கும். இவற்றிடையேயுள்ள வேறுபாட்டினைப் பயனிலைகளே உணர்த்த இயலும்.

மா **பூத்தது (மாமரம்)**

மா **ஓடிற்று (குதிரை)**

மா **பறந்தது (வண்டு)**

## (2) வினை வேறுபடாஅப் பலபொருளொரு சொல்

இரண்டாவது வகையைக் குறிக்குமிடத்தில், பலபொருளை உணர்த்தும் ஒருசொல் ஒரே வினையைப் பயனிலையாகக் கொண்டு அமையும் எனப்தை அறிய முடிகிறது.

**(எ.கா.) மா நின்றது (மாமரம் அல்லது குதிரை)**

இந்நூற்பாவினுக்கு உரைவிளக்கம் தரும் சேனாவரையர், "இனமுஞ்சார்பு முளவேனும் வேறுபடுத்தற்கண் வினை சிறப்புடைமையின், அதனால் பெயர் கொடுத்தார்" என்றுரைக்கின்றார்.

பின்னர் வரும் நூற்பாவிற்கு முன்னுரை தருவதுபோல அமைந்துள்ளது இவ்வுரை விளக்கம். வினை வேறுபடும் பலபொருளொரு சொல்லானது ஆய்ந்த பொருள் கொள்ளுங்கால் எவ்வாறு வேறுபடும் என்பதனை விளக்க வந்த தொல்காப்பியர்.

**"அவற்றுள்<br>வினைவேறு படுஉம் பலபொரு ளொருசொல்<br>வேறுபடு வினையினும் இனத்தினுஞ் சார்பினுந்<br>தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே"**

**(தொ. சொ. கிளவி. 53)**

என அவற்றினுக்கிடையேயுள்ள நுட்பமான வேறுபாட்டினை நுண்ணறிவுடன் புலப்படுத்துகின்றார். இதற்கு உரைவகுத்த சேனாவரையர்,

'அவ்விரண்டனுள்ளும், வினைவேறுபடும் பல பொருளொரு சொல், ஒரு பொருட்கே சிறந்த வினையானும்,

இனத்தானும், சார்பானும், பொருள் தெரி நிலைக்கண் பொதுமை நீங்கித் தெளியத் தோன்றும்.

**மா** என்பது ஒருசார் விலங்கிற்கும், ஒரு மரத்திற்கும், வண்டிற்கும், பிற பொருட்டும் பொது. **குருகு** என்பது ஒரு பறவைக்கும், உலை மூக்கிற்கும், வளைக்கும் பிறவற்றிற்கும் பொது. **நாகம்** என்பது மலைக்கும், ஒரு சார் மரத்திற்கும், யானைக்கும், பாம்பிற்கும் பிறவற்றிற்கும் பொது. **சே** என்பது ஒரு சார்ப் பெற்றத்திற்கும், ஒரு மரத்திற்கும், பிறவற்றிற்கும் பொது.

எனப் பலபொருள் ஒருசொல் கிளவிகள் பலவற்றைச் சான்றுகளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இக்கிளவிகளுக்கிடையேயுள்ள வேறுபாட்டினை,

**(அ) வேறுபடும் வினை**

**(ஆ) இனம்**

**(இ) சார்பு**

என்ற மூன்று கூறுபாடுகளின் கீழ் அமைக்க இயலும்.

## (அ) வேறுபடும் வினை

**(எ.கா.)** மா **பூத்தது**

**பூத்தது** என்ற வினைச்சொல்லினைப் பயன்படுத்தும்போது மா என்ற சொல் மாமரத்தையே குறிப்பதை உணரமுடிகிறது.

## (ஆ) இனம்

**(எ.கா)** மாவும் மருதும் **ஓங்கின**

இவண், மா என்ற சொல் மருது என்ற சொல்லுடன் பயின்று வருவதனாலும் உம் என்ற இடைச்சொல்லுடன் வருவதனாலும் மரத்தினது ஓரினமாகவே கொள்ள முடியும்.

## (இ) சார்பு

**(எ.கா.)** கவசம் புக்குநின்று மாக்**கொணா**

'கவசம் அணிந்துகொண்டு குதிரையைச் செலத்தி வா' எனப்பொருள்படும் இவ்வெடுத்துக்காட்டில் மா என்ற சொல் குதிரையைக் குறித்து நின்றது. அச்சொல் தன்னைச் சார்ந்திருக்கும் சொல்லால் (கவசம் புக்குநின்று) அவ்விடத்து அப்பொருளை உணர்த்துவதாயிற்று.

இவற்றை விளக்கவந்த சேனாவரையர், "மாப்பூத்தது; மாவுமருது **மோங்கின** என வேறுபடு வினையானும் இனத்தானும், மரமென்பது விளங்கிற்று. கவசம் புக்குநின்று **மாக்கொணா**வென்றவழிக் குதிரையென்பது சார்பினால் விளங்கிற்று."

எனக்கூறி சொற் பொருளை எங்ஙனம் நுணுகி ஆய்ந்து உரிய பொருளை அறிய இயலும் என்ற நுட்பத்தினை நமக்குப் புலப்படுத்தும் திறன் எண்ணி எண்ணிப் போற்றத்தக்கதாகும். தொல்காப்பியர் பயன்படுத்தும் இத்தகு பெயர்ச்சொற்கள் ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் பெற்றியன.

## இயைபு இல்லாதனவற்றை இயையக் காட்டல்

பெயர்ச்சொற்களைப் பயன்படுத்துங்கால் சில தொன்னெறி மரபுகளையும் பயன்படுத்த வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். சொல்லதிகார எச்சவியலில் தொல்காப்பியர் வழங்கும்,

**'தொன்னெறி மொழிவயின் ஆஅகுநவும்'**

(தொ.சொ. எச்சவியல் 449)

என்னும் நூற்பாவின்கண்ணமைந்துள்ள தொன்னெறி என்பதனை விளக்கும் சேனாவரையர்,, "முது சொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தவனாய் வருவனவும் என்று உரை கூறி, "யாற்றுட் செத்த எருமை ஈர்த்தல் ஊர்க் குயவர்க்குக் கடன் என்பது முதலாயின" என்கிறார்.

ஆற்றிற் செத்த எருமைக்கும் ஊர்க்குயவர்க்கும் என்ன தொடர்பு? அதுதான், 'இயைபு இல்லாததைஇயையக்காட்டுவது,' அது வருமாறு:

மாட்டு வணிகன் ஒருவன், எருதுகள் (மாடுகள்)சில பிடித்தான். அவற்றைத் தன் ஊர்க்குஓட்டிக்கொண்டு வந்தான். வரும் வழியில் ஓர் ஆறுகுறுக்கிட்டது. தன் எருதுகளை நீர் குடிக்கவிட்டுக்காலாறச் சிறிது பொழுது தங்கிப் புறப்பட்டான்.அப்போது எதிர்பாராமல் ஆற்றில் வெள்ளப்பெருக்குஏற்பட்டு விட்டது. அவ்வெள்ளத்தால் சில எருதுகள்அடித்துச் செல்ல அவை இறந்துவிட்டன. ஆற்றில் இறந்து கிடந்த எருதுகள் நாறலாயின. அடுத்திருந்த ஊரவர்க்கு நாற்றம் தாங்க முடியவில்லை. இறந்த எருதுகளை எடுக்கவும் ஊரவர் எவரும் முன்வரவில்லை. இந்நிலையில் ஊரவர் இவ்வெருதுகளை அகற்றுதல் எவர் பொறுப்பு என ஊர்க் கணக்கனை வினவ, அவன் தனக்கு வழக்கப்படி தரவேண்டிய தொகையைத் தராத குயவனைப் பழிவாங்க நினைத்துப் பழைய ஏடு ஒன்றை எடுத்து ஒரு பாடலை எழுதி 'ஊரடங்கல்' ஏட்டினுள் ஊடுவைத்து ஊரவர் முன் படித்துக் காட்டினான். அப்பாட்டு இது:

**காட்டெரு முட்டை பொறுக்கி**
**மட்கலம் சுட்ட புகையான்**
**மேற்கே மேகம் தோன்றி**
**மின்னி இடித்து மழைபொழிந்து**
**யாற்றில் நீத்தம் பெருகி**
**அடித்துக் கொல்லும் எருமைகளை**
**ஈர்த்துக் கொணர்ந்து கரையேற்றல்**
**இவ்வூர்க் குயவர்க்கு என்றும் கடனே"**

மட்கலங்கள் எருவால் சுடப்படுதலால் எழுந்த புகையே, வான் முகிலாகி மழைபெய்ய அந்நீர்ப் பெருக்கால், எருது இறந்ததால், அதனைக் கரையேற்றல் குயவர் கடன் என்று தீர்மானித்தது, பொருந்தாததைப் பொருத்திக் காட்டிய புனைவேயாகும். ஏட்டறிவோடு நாட்டறிவும் அருமையாகப் பெற்று அவற்றைப் பதிவு செய்தவராகிறார் சேனாவரையர்.. தொல்காப்பியர் ஆண்ட **தொன்னெறி** என்னும் சொல் இத்தகு ஆழ்ந்த பொருளைப் புலப்படுத்துவதை உணரவியலுகிறது.

## தொல்காப்பியரின் திறம்

**"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"**

**(தொ. சொல். வினை: 198)**

என்னும் நூற்பா விளக்கத்தில், வினை என்னும் சொல்லுக்கான இலக்கணத்தைக் கூறுமிடத்து உரிய சொற்களைப் பயன்படுத்துகிறார். **வேற்றுமை, காலம்** என்னும் இரு சொற்களே அவ்வினைக்கான இலக்கணத்தைப் புலப்படுத்திவிடும் ஆற்றல் வாய்ந்நன என்பதனை யுணர்ந்து தக்காங்கு அச்சொற்களைக் கையாள்கிறார். "வேற்றுமை கொள்ளாது" என்னாது காலமொடு தோன்றுமெனின் தொழில்நிலை ஒட்டும் தொழிற்பெயரும் வினைச் சொல்லாவான் செல்லுமாகலானும், 'காலமொடு தோன்றும்' என்னாது வேற்றுமை கொள்ளாது எனின் இடைச் சொல்லும் உரிச்சொல்லும் வினைச்சொல் லெனப்படும் ஆகலானும் அவ்விரு திறமும் நீக்குதற்கு 'வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றும்' என்றார்.

வினைச்சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள. அவையும் ஆராயுங்கால் காலமுடைய என்றற்கு **'நினையுங் காலை'** என்றார் என மொழிவது தொல்காப்பியரின் தனித்திறன்களுள் ஒன்று. இங்ஙனம், தொல்காப்பியரின் சிறப்பை உரிய இடத்தில் எடுத்துக்காட்டுவதில் திறப்படச் செயல்படுகிறார் சேனாவரையர்.

## தொல்காப்பியரின் கருத்தாழமும் நுட்பத்திறனும்

தான் உணர்ந்ததை ஆழ்ந்த அறிவுடன் தெளிவுபட உணர்த்தலில் தொல்காப்பியர் தன்னிகரற்றவர். இத்தகைய தெளிவுக்குப் பயன்படுத்தும் பெயர்ச்சொற்களைச் சாலப்பொருத்தமாக எடுத்துரைப்பதில் வல்லவர் அச்சான்றோர் என்பதனை மெய்ப்பிக்க உள்ள பலவிடங்களில் ஓரிரு இடங்களை நோக்குவாம்:

1. **"செப்பினும் வினானும் சினைமுதற்**
   **கிளவிக்கு அப்பொருள்**
   **ஆகும் உறழ்துணைப் பொருளே"** **(தொ. சொ. கிளவி. 16)**

என்னும் நூற்பாவினில் **சினை – முதல்** என்னும் இருசொற்களும் செப்பின்கண்ணும் வினாவின்கண்ணும் இடம்பெறும் முறைமைக்கு இலக்கணம் வகுத்துள்ளார். இதனை விளக்க வந்த சேனாவரையர், தொல்காப்பியரின் பெயர்ச்சொல்லாட்சித் திறத்தினை விதந்தோதுகிறார்.

## சேனாவரையரின் விளக்கம்

செப்பின்கண்ணும் வினாவின் கண்ணும் **சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும்** உறழ்பொருளும் துணைப்பொருளும் அவ்வப் பொருளுக்கு அவ்வப் பொருளேயாம் என்றவாறு.எனவே, சினைமுதலுந் தம்முண்மயங்கி வருதல் வழுவென்பதாம். உறழ்பொருளாவது ஒப்புமை கூறாதுமாறுபடக் கூறப்படுவது. துணைப் பொருளாவதுஒப்புமை கூறப்படுவது. **உதாரணம் :** இவள் கண்ணி னிவள்கண் பெரியநும்மரசனின் எம்மரசன் முறைசெய்யும் எனவும்; இவள் கண்ணி னிவள்கண் பெரியவோ, எம்மரசனி னும்மரசன் முறைசெய்யுமோ எனவும்; இவள் கண்ணொக்கு மிவள் கண், எம்மரசனையொக்கு நும்மரசன் எனவும்; இவள் கண்ணொக்குமோ விவள்கண், எம்மரசனை யொக்குமோ நும்மரசன் எனவும் வரும்.

## தொல்காப்பியர்தம் பெயர்ச்சொற் திறனும் சேனாவரையரின் விளக்கமும்

சேனாவரையர் கூற்றுப்படி செப்பிலும் வினாவிலும், சினையும், முதலும், உறழ்வுப் பொருளிலும் துணை (ஒப்பு)ப் பொருளிலும் இடம்பெறும்.

சினை – முதலுக்கான சான்றுகள்:

சான்று 1:

(1) செப்பு

**(1)** உறழ்பொருள்

**சினை** : இவள் கண்ணின் அவள் கண் பெரிய

**முதல்** : நும் அரசனின் எம் அரசன் முறை செய்யும்

**(2)** துணைப்பொருள்

**சினை** : இவள் கண் ஒக்கும் அவள் கண்

**முதல்** : எம் அரசனை ஒக்கும் நும் அரசன்

**(2)** வினா

**(1)** உறழ்பொருள்

**சினை** : இவள் கண்ணின் அவள் கண் பெரியவோ?

**முதல்** : எம் அரசனின் நும் அரசன் முறை செய்யுமோ?

**(ங)** துணைப்பொருள்

**சினை** : இவள் கண் ஒக்குமோ அவள் கண்?

**முதல்** : எம் அரசனை ஒக்குமோ நும் அரசன்?

மேற்கூறியவாறு இடம்பெறும் உதாரணங்கள் செப்பு வழாநிலையும் வினா வழாநிலையும் ஆகும். செய்யுளில் சிலவிடங்களில் வழுவாக விளங்கிடினும் அவை உவமவழுமாக இருப்பதால் அவற்றை நாம் வழுவாக ஏற்றுக் கொள்ளுதல் தகாது என்கிறார் சேனாவரையர்.

## சான்று 2:

'அவன் கோலினுந் தண்ணிய தடமென் தோளே' (பட்டினப்பாவை 300–1) எனவும், 'துளிதலைத் தலைஇய தளிரண்னோளே' (குறுந்தொகை 222) எனவும் மயங்கி வந்தன வழுவாம் பிறவெனின், அவை செய்யுள் பற்றி வரும் உவம வழு ஆகலின் ஈண்டைக்கு எய்தா, அணியியலுள் பெறப்படும். இம்மகள் கண் நல்லவோ கயல் நல்லவோ என வழக்கின் கண்ணும் மயங்கி வருமாவெனின், உண்மை உணர்தற்கு புனைந்துரைத்தல் கருத்தாகலின், அன்னவை யெல்லாம் உரை என்னுஞ் செய்யுளாம் என்பது. இந்நங்கை முலையின் இந்நங்கை கண் நல்ல என்னுந் தொடக்கத்தன மயக்கம் இன்மையின் இலக்கண வழக்காம் பிறவெனின், அற்றன்று. ஒத்தபண்பு பற்றி யன்றே பொருவுவது, கண்ணொடு முலைக்கு ஒத்து பண்பின்மை யாதலால் பொருவுதல் யாண்டையது! ஒத்த பண்பு பற்றிய பொருவு தற்கண்ணது இவ்வாராய்ச்சியென்பது.

## சான்று 3:

**செய்யுளில் வரும் உவம வழுக்கள்**

**(1) "அவன் கோலினும் தண்ணிய தடமென் தோளே"**
**(பட்டினப்பாலை : 300–301)**

'தலைவியை விட்டுப் பிரிவதால் அவளுக்கு ஏற்படும் இன்னலை உணர்ந்த தலைவன், பிரியாது உறைவதையே தலைவியின் தோள்கள்

விரும்புகின்றன. பிரிந்து செல்வதை அவற்றால் தாங்கிக்கொள்ள இயலாது. ஆதலால் குறைவில்லாத சிறப்புடைய பட்டினம் பெறுவதாயினும் என் காதலி ஈண்டு என்னைப் பிரிந்து தனித்திருப்ப, யான் நின்னுடன் வருதல் இயலாது' எனத் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்த பாடலடிகளை எடுத்துக் காட்டலாம்.

"திருமாவளவன், பகைவரைக் கொல்வதை நோக்கமாகக் கொண்டு உயர்த்திய வேலைக் காட்டிலும் தலைவன் கடந்துசெல்ல வேண்டிய காடுகள் மிகவும் வெம்மையுடையவை; அச்சந் தருபவை. அவன் செங்கோலினும், தன் காதலியின் மெல்லிய தோள்கள் குளிர்ந்து இன்பம் பயப்பவை."

"திருமாவளவனின் வேலைக் காட்டிலும் காடுகள் கொடுமை யானவை" என்ற தொடரும், "திருமாவளவனின் செங்கோலினும் தன் காதலியின் தோள்கள் குளிர்ச்சி பொருந்தியன" என்ற தொடரும் உறழ் பொருளில் வரும் செப்புத் தொடர்களேயாயினும், தொல்காப்பியக் கருத்துப்படி இவ்வுதாரணங்கள் முதலொடு முதலோ, சினையோடு சினையோ, உறழ்வாகவோ, துணையாகவோ கூறுதல் இயலாது. எனினும், செய்யுளில் வரும் உவமவழு என்பதால் இவ் வுதாரணங்கள் அணியியலுள் கூறப்படும் என்கிறார் சேனவரையர்.

**(2) "துளிதலைத் தலைஇய தளிரன் னோளே" (குறுந்தொகை – 222)**

பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தும் பாடல் இது. உரியவளாகிய ஒருத்தியை அறிந்து, அவள் வாயிலாகத் தன் குறையை முடித்துக்கொள்ள எண்ணுவான் தலைவன். தலைவியின் விருப்பத்திற்கு உரிய தோழியாதலின், அவள் 'பெட்டவாயில்' எனப்பட்டாள். தன்குறையை முடித்தற்கு உரியவள் அவள் ஆதலின், தோழி தலைவனால் விரும்பப்படும் வாயிலாகவும் விளங்குவதால், 'பெட்டவாயில்' எனப்பட்டாள்.

எல்லா உறுப்புக்களாலும் ஊற்றின்பம் தந்து, இயற்கைப் புணர்ச்சியில் தன்னை இன்புறுத்தி யமைதோன்ற அவளுடைய தளிரன்ன மேனியை நினைத்தான்.

மழைக்காலத்தில் மலரும் பிச்சியின், நீர் ஒழுகும், வளம் பொருந்திய செவ்வி அரும்பின் சிவந்த புறத்தினைப் போன்ற, கொழுவிய கடைப்பகுதியும், குளிர்ச்சியும் உடைய கண்களையும், தலைப்பெயலின் மழைத்துளியைப் பெற்று உண்டாகிய தளிரைப் போன்ற மென்மையையும் உடையவள் மாட்சிமையுடைய தலைவி ஆவாள்.

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் பிரிவின் போது தலைவியின் மேனியை நினைந்து தளிரைப் போன்ற மென்மையுடையவள் (மழைத் துளியைப் பெற்றதால் உயிர் உண்டாகிய தளிர் போன்று) தலைவனின்

புணர்ச்சியைப் பெற்றதால் உயிர் பெற்ற அவள் பெண்மை (மென்மை) எனத் தலைவன் மீண்டும் அவளைத் தோழி மூலம் இரவுக்குறி வேண்டி நிற்கின்றான்.

இவ்வுதாரணமும் துணைப்பொருளினுக்கு வரும் செப்பு வாக்கிய மெனினும் சினையாகவோ, முதலாகவோ பொருள் கொள்ள இயலா வண்ணம் சினையுடன் முதலாக வந்துள்ளமையின் உவமவழு வாக்கியமே எனினும், செய்யுள் கண் இடம் பெற்றமையின் இது அணியியலுள் பெறப்படும் என்கிறார் சேனாவரையர்.

**(3) "இம்மகள் கண் நல்லவோ கயல் நல்லவோ"**

இத்தொடர் செய்யுளல்லாத வழக்கின்கண் வந்துள்ளதெனினும் அங்கும் இவ்வினாத் தொடர் மயக்கமல்லவா அடைந்துள்ளது. சினையோடு முதலல்லவா மயங்கி வந்துள்ளது. ஐயத்தின் காரணமாக உண்மையுணர்தற்கு வினவப்பட்ட ஒரு தொடரிது என்பதாலும், உண்மையுணர்தற்கு புனைந்துரைத்தலே இவண் கருத்தென்பதாலும் இதுவகைப்பட்ட தொடர்க ளெல்லாம் உரையென்னும் செய்யுளே என்பது சேனாவரையர் கருத்தாகும்.

(4) "இந்நங்கை முலையின் இந்நங்கை கண் நல்ல"

மேற்குறிப்பிட்ட இத்தொடரானது மயக்க மில்லாமல் வந்த இலக்கணத் தொடரேயாகும். தொல்காப்பியரின் கூற்றுப்படி இடம்பெற்ற சினையோடு சினை உவமிக்கப்பட்டஉறழ்வுப் பொருளில் வந்த செப்புவாக்கியமேயாகும். எனினும், ஒத்த பண்புகள் உடையனவன்றோ உவமிக்கப்படுதல் வேண்டும்? இத்தொடர்க்கண் கண்ணுக்கும் முலைக்கும் ஒத்த குணமில்லை. ஆதலின் அவற்றின்கண் தொல்காப்பியர்தம் கூற்றை ஆராய்வது இடமன்று என்று சேனாவரையர் தம் உரைத்திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

(5) **"பொன்னுந் துகிரும் முத்தும் மணியும்**
**மன்னிய மாமலை பயந்த காமரு மணியும்**
**இடைப்பட சேய ஆயினும், தொடை புணர்ந்து,**
**அரு விலை நன் கலம் அமைக்கும் காலை,**
**ஒரு வழித் தோன்றியாங்கு – என்றும் சான்றோர்**
**சான்றோர் பாலர் ஆகுப;**
**சாலார் சாலார் பாலர் ஆகுபவே.** **(புறநானூறு : 21)**

பொன்னும் பவளமும் முத்தும் நிலைபெற்ற மலை தந்த விருப்பத்திற்குரிய மணியும் ஒன்றற் கொன்று இடையே இடம்படத் தொலை விடத்தன ஆயினும், இவற்றைக் கோவைப்படுத்தி, அரிய மதிப்புடைய நல்ல அணிகலங்களைச் செய்யுங்காலத்து ஒரிடத்து வந்து சேர்ந்தாற்போல

எந்நாளும் பெரியோர் பெரியோர் பக்கத்தேயே இருப்பர். பெருமையில்லாதவர், பெருமையில்லாதவர் பக்கத்தேயே இருப்பர்.

பொன் நிலத்தடியிலிருந்து கிடைப்பது; பவளம் காட்டிற் கிடைப்பது; முத்து கடலிற் பிறப்பது; மணி மலையிற் பிறப்பது; இவை தோன்றுமிடத்தாற் சேய்மைய. ஆயினும் மாலை ஒன்றை அமைக்குங் கால் ஆண்டு எல்லாம் வந்து சேர்கின்றன. அதுபோலப் பெரியோர் தம் கருமத்திற்கென ஓரிடத்தில் சேர்வர் என்பதாம்.

இப்பொன் முதலியன ஒன்றொடோன்று ஒத்து எண்ணக்கூடிய ஒப்புமை பெறாதன வாயினும் சிறந்த பண்புகளை உவமிக்குங்கால் ஒத்ததாக எண்ணப்படுதல் இயல்பு என்பது சேனாவரையரின் கூற்றிலிருந்து வெளிப்படுகிறது. இவை அனைத்தும் விளை பொருள்களாகவானும் அணிபொருள்களாகவானும் ஓரினமாகக் கொள்ளப்பட்டன. எனவேதான், சிலம்பிலும், "மாசறு பொன்னே வலம்புரி முத்தே; காசறு விரையே கரும்பே தேனே" (சிலம்பு 2:37) எனவும், மூதுரையிலும் "நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" (மூதுரை:24) எனவும் தொடர்பில்லாது பொருட்கள் ஒன்றொடோன்று மயங்கின எனக் கொள்ளலாம்.

பொன்னும் பவளமும் முத்தும், விளையும் கரும்பும் தேனும் ஒன்றோடொன்று உவமிக்க ஏதுவாக இடமில்லையெனினும், விளைபொருட்கள் மற்றும் அணிபொருள்கள் என்னும் விதத்தில் தன்னினம் முடித்தல் என்பதால் ஓரினமாயின. இது போன்றே நற்றாமரை இனத்திற்கும் நல்லன்னத்திற்கும் தொல்காப்பிய நூற்பாவின்படி (கிளவியாக்கம்: 16) தொடர்பில்லை எனினும் உயர்பண்பால் இரண்டும் இணைந்தனவென்பதால், ஓரினமாகிய கற்றாரைப் போன்று தாமும் ஓரினமாயின எனப் பொருள் கொள்ளப்படும்.

தொல்காப்பியர் பயன்படுத்திய இனம் – சார்வு, மற்றும் சினை – முதல் என்னும் பெயர்ச்சொற்களின் ஆழத்தை மிகத் தெளிவாய் விளக்கியுள்ளார் சேனாவரையர். மேற்கண்ட சான்றுப் பாடல்களில் பயன்படுத்தப்பட்ட அடிகளின் வாயிலாக தொல்காப்பியரின்வழி சேனாவரையர்தம் உரைப்பொருளின் முடிவாக கீழ்காணும் கருத்துக்களைப் புலப்படுத்தலாம்:

(அ) முதலாகிய செங்கோலுடன் தோளாகிய சினையும், தளிராகிய சினையுடன் மேனியாகிய முதலும் மயங்கி வந்தன வெனினும் அவை செய்யுள் வழக்கு என்பதால் உவமவழுவாகவே கொள்ளப்பட்டு அணியியலுள் பெறப்பட்டன.

(ஆ) செய்யுளல்லாத வழக்கின்கண் வந்த சினையாகிய கண்ணோடு

முதலாகிய கயல் மயங்கி வந்ததெனினும் ஐயத்தெளிவு என்றவழி இதுவும் செய்யுள் முடிவாகவே கொள்ளப்பட்டது.

(இ) தொல்காப்பியர் கூற்றுப்படி உறழ்வுப் பொருளில் வந்த செப்புத் தொடரில் சினையுடன் சினையே வரவேண்டும் . எனினும் ஒத்த பண்புகளை இவை பெறவில்லை. எனவே தொல்காப்பியக் கருத்தினுக்கு இவற்றுள் சில மாறுபாடாயும் உள்ளன.

(ஈ) "செப்பும் வினாவும் வழா அல் ஓம்பல்" என்ற கூற்றுப்படி செப்பினையும் வினாவினையும் வழுவாமல் போற்ற வேண்டும் என்பது சேனாவரையர் கூற்று. நுண்ணுணர்வுடையரே இந்நூற்பாவின் உரையை முழுதும் நன்குணர இயலும், நுட்பங்களைப் புரிந்து கொள்ள இயலும் என்பதால் ஏனையோரும் புரிந்து கொள்ளும் வகையில் இந்நூற்பா(கிளவியாக்கம் : 17)விற்கு இத்தகைய உதாரணங்களைப் பயன்படுத்தி விரிவானதொரு விளக்கத்தினை எடுத்துக் காட்டியுள்ளார் சேனாவரையர். இச்செப்புத் தொடர்கள் செய்யுளிலும் வழக்கிலும் வழுவி வரினும் மேற்கூறிய பற்பல காரணங்களால் (செய்யுள் வழக்கு, ஐயவுமை போன்றன) செப்புவழாநிலையும் வினாவழாநிலையம் காக்கப்பட வேண்டும் என்பதால் பற்பல சான்றுகளின் மூலமாய்த் *தொல்காப்பியர்வழி இதனைத் தெளிவுறுத்துகிறார் சேனாவரையர்.*

கருத்தாழத்தை நுட்பத்தை விளங்க வைக்கும் விரிவான விளக்கப் போக்குடன் அரிமா நோக்குடன் தொல்காப்பியர் விளங்குகிறார். ஐயங்களை எழுப்பும் பல தொடர்களைப் பயன்படுத்தி எவ்வாறு அத் தொடர்கள் தொல்காப்பியரின் கூற்றுக்குப் பொருந்தி வராதன என்பதற்குத் தானே விளக்கம் கூறும் சேனாவரையர்தம் திறமும் வியக்கத்தக்கது. தருக்க நூல் முறை வழுவாமல் தடைவிடைகள் பலவற்றை எழுப்பி தொல்காப்பிய நூற் பாவினை விளக்கியுள்ளார் அவர். . தக்க பெயர்ச்சொற்களை எடுத்துக்காட்டி கருத்தை உய்த்துணர வைக்கும் இயல்பும், பொருத்தமான இடத்தில் ஆற்றல் வாய்ந்த சொற்களைப் பய்னபடுத்தி நாம் பலகாலும் எண்ணி எண்ணி வியக்கும் வகையில் செய்யும் நம்மை உரைய வைக்கும் அறிவார்ந்த போக்கும் இலக்கண ஆழமும் தொல்காப்பியர்தம் பண்புகளே எனின் மிகையாகாது.

### *முடிவுரை*

உயர்ப்புகழ் வாய்ந்த தொல்காப்பியர் தமிழ்மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு, 'ஞாலத்தின் மாணப் பெரிது.' தாம் வகுத்த இலக்கணத்திற்கு தம் நூலின்கண் தாம் எடுத்தாண்ட பெயர்ச்சொற்களைப் பயன்படுத்தித் தம், இலக்கணக் கொள்கையை விளக்கி தமிழ்மொழி மரபைக்

காப்பவராகவும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அடிகோலிடுபவராகவும் வித்தகராகவும் விளங்குகிறார் அப்பெருமகனார்.. பழம்பெரும் இலக்கியச் செல்வங்களை எல்லாம், பலரும் அறிந்து பயனுற தமிழ் மரபைக் காத்தும், தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தும், தமிழ்மொழியின் காலங்கடந்த வாழ்விற்கு வளம் சேர்த்த வல்லுநராகவும் தமிழ்மொழியின் வெற்றிக்குக் கிடைத்த வெற்றிக் கனியாகவும் விளங்கிய மாண்புடையர்.

பழம்பொருட்காட்சிச் சாலையாக விளங்கிய இருட்டறையில் இருந்த எழில்நலம் வாய்ந்த இலக்கண நூல்களை எல்லாம் வெளிக்கொணர்ந்த வெற்றியாளராகவும் விளங்கியவர். கண்கள் காண இயலா இவ்விருளைப் போக்கிய ஒளி விளக்காகவும் திகழ்ந்தவர். தொல்காப்பியம் எனும் இலக்கண நூலின் ஒப்பற்ற சிறப்பினை இன்று உலகம் உணர்ந்து இன்புறுகிறது என்றால் அதற்கு முழுமுதற் காரணம் விலைமதிப்பற்ற அவர்தம் சொல்லாட்சித் திறனும் அவர் பயன்படுத்திய உரிய பெயர்ச்சொற்களுமே யாகும்.,

**திருமுருகாற்றுப்படையின் கூற்றுப்படி,**

> **"......... இகலோடு**
> **செற்றம் நீக்கிய மனத்தினர்; யாவதும்**
> **கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்**
> **தாம்வரம்பு ஆகிய தலைமையர்; காமமொடு**
> **கடுஞ்சினம் கடிந்த காட்சியர்"**

**(திருமுருகாற்றுப்படை: 131–135)**

என்று சிறப்பிக்கப்படும் சிறந்த பண்புகள் அனைத்தும் தொல்காப்பியரையே சாரும்.. எனவே அச்சசோன்றோர் பலநூல் கற்றுத் தெளிந்த பண்டிதராகவும், புலமைத் திறன் முழுதும் காட்டும் வல்லமை கொண்டவராகவும் தமிழ்நூற் காவலராகவும் பன்மொழிப் புலவராயும் , இறவாப் புகழ் கொண்டு தமிழ்மொழி உள்ளளவும் தம்புகழ் நிலைபெறுமாறு மன்னா உலகத்தும் தம்புகழ் நிறுவி மாண்புடன் மேன்மை கொண்டு விளங்குவதில் யாதொரு ஐயமும் இல்லை.

■

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

# அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |
| தமிழ் நாடக மொழியும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு. என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |

---

**724 பெயரியல்**

**55.00**